

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூலை 5, 2007 புரட்சி 5 முழக்கம் 27 விலை : ரூ.2.50


## பழனியில் கழகப் போராட்டம் வெற்றி :

# மோசடிப் பட்டாக்கள் ரத்து!

*பழனியில் தலித் மக்களுக்கு வழங்கப் பட்ட பட்டாக்களை 14 ஆண்டுகளாக மோசடி யாகப் பறிக்கப்பட்டதை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகம் நடத்திய போராட்டம் வெற்றி! மோசடிப் பட்டாக்களை ரத்து செய்து, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.*

பழனியில் ஐந்துமருகால் காலனியில் தாழ்த்தப்பட் டோருக்கு பட்டா வழங்குவதில் மோசடிக்குத் துணைபோன வருவாய்த்துறை, ஆதி திராவிடர் நலத்துறை அதிகாரிகளைக் கண்டித்தும், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்த காவல்துறையைக் கண்டித்தும் 8.6.2007 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் பழனி நகரத் தலைவர் மௌ.அர.ஜவகர் தலைமையில் திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் சு.மருதமூர்த்தி மற்றும் பழனி ஒன்றியத் தலைவர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் கண்டன உரையாற்றினார். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக தலித் விடுதலை இயக்கத்தின் நிறுவனர் தலித். சுப்பிரமணி, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் நகரப்பொறுப்பாளர்கள் க.மணவாளன், சு.பொதினிவளவன், தமிழண்ணன், அகில இந்திய பார்வர்டு பிளாக் நகரச் செயலாளர் வீரமணி, மூவேந்தர் முன்னேற்றக் கழக ஒன்றியச்செயலாளர் அருணாசலம், ஒன்றிய இளைஞரணி செயலாளர் கார்த்திக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழக நகரத்தலைவர் சாந்து முகமது ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் பெரியார் திராவிடர் கழக மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்லதுரை, நெய்க்காரபட்டி நல்லதம்பி, ஐந்துமருகால் திருச்செல்வம், வின்சென்ட், முருகேசன், தொப்பம்பட்டி ஒன்றியப் பொறுப்பாளர்கள் கருஞ்சட்டை கமர்தீன், அறிவாசான், நகரச்செயலாளர் பொன்ராசு ஒன்றிய அமைப்பாளர் சுல்தான், ஒன்றியச் செயலாளர் மணிகண்டன், கடத்தூர் கதிரவன், வண்டிவாய்க்கால் பத்ரா, இராசாபுரம் கணேசு, அலெக்ஸ், கெங்குவார்பட்டி ஜெயப்பாண்டி, கொடுமுடி பாண்டியன், தாராபுரம் குமார், சபரி, டெல்லி கபீர், செம்பட்டி ஆல்பர்ட் ஆகியோரும் பட்டா மோசடியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் 1980-81 இல் ஆதிதிராவிடர் நலத்துறையால் பட்டா வழங்கப்பட்டு 27 ஆண்டுகளாகக் குடியிருப்போருக்கு பட்டாக்களை உறுதி செய்யவேண்டும், 1993 இல் மோசடியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டாக்களை ரத்து செய்யவேண்டும், இம்மோசடிகளுக்குத் துணைபோகும் பழனி ஆதி திராவிடர் நலத்துறை, வருவாய்த்துறை, காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கழகடா தலைவரும் பேசிய அனைவரும் வலியுறுத்தினர். நெய்க்காரபட்டி நல்லதம்பி நன்றி கூறினார்.

### போராட்டம் வெற்றி

ஆர்ப்பாட்டம் நடந்து முடிந்த அடுத்தநாளே பழனி ஆதி திராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் அலுவலகத்தி லிருந்து மோசடியாக வழங்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்துள்ளதாக நமது தோழர் திருச்செல்வத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதம் இதோ:
கடிதம் - (நக/676/06/அ)

குறிப்பாணை

பொருள் :

தகவல் அறியும் உரிமைச்சட்டம் - பழனி வட்டம்-
அ.கலையம்புத்தூர், பெரிய கலையம்புத்தூர்
கிராமங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்ட
விபரங்கள் கேட்டல்.

பார்வை :
திரு.ஆ.திருச்செல்வம்
ஐந்து மருகால் காலனி
அ.கலையம்புத்தூர் கிராமம்

பழனி வட்டம் அ.கலையம்புத்தூர், பெரிய கலையம்புத்தூர் கிராமங்களில் 1980-81 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களின் விபரங்கள் வரைபடம் ஆகியவற்றின் நகல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வழங்கும்படி மனு செய்யப்பட்டுள்ளது.

பழனி வட்டம் பெரியகலையம்புத்தூர் கிராமம் புலஎண் 23/2 அ.கலையம்புத்தூர் கிராமம் புல எண் 894 ஆகிய வற்றில் 1980 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறையால் மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்ட பின்னர் 1993 ஆம் ஆண்டு நத்தம் நில அளவை செய்யப்பட்டு நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியரால் மனைப்பட்டாக்கள் வழங்கப்பட் டுள்ளது. நத்தம் நிலஅளவையில் தவறுதலாக வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. அவ்வாறு ரத்து செய்யப்பட்ட பின்னர் திரு.ஆ.திருச்செல்வம், திரு.ச.சான்சின்சென்ட் முதலிய பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் மனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என்பது தெரிவிக்கப் படுகிறது.

நாள் : 05.06.07 ஒப்பம்
தனிவட்டாட்சியர்
ஆதிதிராவிடர் நலம்
பழனி

14 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் பட்டா மோசடிக்கு எதிரான ஐந்துமருகால் பகுதி மக்களின் போராட்டம் பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியால் 1 மாதத்திற்குள் முடிவுக்கு வந்துள்ளது. முதல் வெற்றி கிடைத்துள்ளது. ஆனாலும் காவல்துறையின் பொய்வழக்குப் போடும் கொடுமை தொடர்ந்துதான் வருகிறது. இறுதி வெற்றி கிடைக்கும் வரை கழகம் தொடர்ந்து போராடும். திராவிடர் கழகத்தில் அப்போது இருந்த தோழர்களின் - இந்த உரிமைப் பறிப்புக்கு அந்த அமைப்பு எந்த முயற்சியும் எடுக்காத நிலையில் பெரியார் திராவிடர் கழகம் - இதில் தலையிட்டு பாதிக்கப்பட்டோருக்காகப் போராடி - வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ❑

## பார்ப்பன இந்தியாவின் அவலம்!

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உயர்நீதிமன்றத்துக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டபோது நீதிமன்றத்தின் வாயிலிலேயே ‘நால்வர்ணத்தை’ சட்டமாக்கிய ‘மனு’வின் சிலையை வைத்து விட்டார்கள். ‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால், மனிதர்கள் பிறப்பின் அடிப்படையிலேயே வேறுபட்டவர்கள் என்று கூறும் மனுவின் சிலை உயர்நீதிமன்றத்தின் வாயிலில் கம்பீரமாக நிற்கிறது.

இதுதான் பார்ப்பன இந்தியா ! 1989 ஆம் ஆண்டு ஜுன் 28 ஆம் தேதி ராஜஸ்தான் உயர்நீதிமன்ற பார்ப்பன வழக்கறிஞர்கள் ரகசியமாகத் திட்டமிட்டு - இந்த சிலையை நிறுவிவிட்டனர். அப்போதே கடும் எதிர்ப்புகள் வெடித்தன. உயர்நீதிமன்றத்தின் ‘முழு பெஞ்ச்’ இது தொடர்பான வழக்கை விசாரித்து, 48 மணி நேரத்தில் மனு சிலையை அகற்ற உத்தரவிட்டது. உடனே அவசர அவசரமாக விசுவ இந்து பரிஷத்தைச் சார்ந்த ஆச்சாரியா தர்மேந்திரா என்ற பார்ப்பனர், சிலையை அகற்றத் தடைகோரி, அதே உயர்நீதிமன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்தார். மகேந்தர்பூஷன் என்ற பார்ப்பன நீதிபதி - ‘மனு’ சிலையை நீக்க இடைக்காலத் தடையை 1989 ஜுலை 27-ல் பிறப்பித்தார். அது முதல், இன்று வரை தடை நீடிக்கிறது. பார்ப்பனர்களின் இறுமாப்பு சின்னமான ‘மனு’வின் சிலை உயர்நீதிமன்றத்தின் நுழைவாயிலில் கம்பீரமாக அமர்ந்த நிலையில் அப்படியே இருக்கிறது. இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வரும் போதெல்லாம், நீதிபதிகள், வழக்கைத் தள்ளிப் போட்டே வருகிறார்களாம். இதற்குப் பின்னால் வந்த வழக்குகளையெல்லாம்கூட, விசாரித்து, தீர்ப்பு வழங்கிய ராஜஸ்தான் உயர்நீதிமன்றம், ‘மனு’ சிலை வழக்கில் மட்டும், தலையிட மறுத்து வருகிறது.

திருவரங்கத்தில், கோயில் கோபுரம் முன் பெரியார் சிலை வைக்கப்பட்டதால், பக்தர்கள் மனம் புண்பட்டுவிட்டதாக மதவெறி சக்திகள் ஓலமிட்டு பெரியார் சிலையை உடைத்தன. பா.ஜ.க. இல. கணேசன்களும், இந்து முன்னணி ராமகோபாலன்களும், துக்ளக் ‘சோ’க்களும் பெரியார் சிலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பூணூலை உருவிக் கொண்டு கூக்குரல் போட்டார்கள். ஆனால், ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் ‘மனு’வின் சிலை உயர்நீதிமன்றத்தின் வாசலிலே நிற்கிறது. அதற்கு விசுவ இந்து பரிஷத் சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது.

பார்ப்பன இந்தியாவின் யோக்கியதை இதுதான் ! இந்த ‘மனு’வின் சிலை நீடிக்கும் ஒவ்வொரு நிமிடமும், “சூத்திர” இழிவை பறை சாற்றிக் கொண்டேயிருக்கிறது. அரசியல் சட்டத்தின் கோட்பாட்டையே மறுக்கும் மனுவுக்கு உயர்நீதிமன்றத்திலே சிலை என்றால், இதைவிட வெட்கக் கேடு வேறு ஏதாவது இருக்க முடியுமா ?

## ரகசியம்... முக்கிய காரணம் இருக்கிறது!

**கேள்வி :** திராவிட இயக்கத்து எழுத்தாளர்கள், இயக்கத்தில் இல்லாத புகழ்பெற்ற எழுத்தாளர்கள் இவர்களின் படைப்புகளை நாட்டுமையாக்கிய கலைஞர் தந்தை பெரியார் மற்றும் திராவிடர் கழக எழுத்தாளர்களின் படைப்புகளை ஏன் நாட்டுடைமை ஆக்கவில்லை?

**பதில் :** அதற்கு பல முக்கிய காரணங்கள் இருக்கலாம்.

**‘உண்மை’, ஜீன் 1-15,2007. தி.க. தலைவர் கி.வீரமணி பதில்**

தலையங்கம்

# இடஒதுக்கீட்டில் குழப்பங்கள்!

தமிழ்நாட்டில் சுயநிதிக் கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதல் கட்டணங்கள் வாங்கப்படுகின்றன என்பது கல்லில் செதுக்கியுள்ள உண்மை. இது பற்றி அரசுக்கு புகார் ஏதும் வரவில்லை என்று உயர்கல்வி அமைச்சர் பொன்முடி கூறுவதாலேயே, கூடுதல் கட்டணங்கள் வாங்கப்படவில்லை என்று கூற முடியாது. தனியார் நடத்தும் சுயநிதிக் கல்லூரிகள் நடத்தும், நன்கொடைக் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவதில், தமிழக அரசுக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. இது மக்கள் பிரச்சனை என்பதை அரசு மறந்துவிடக் கூடாது.

தனியார், சுயநிதிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தும் உரிமை, மாநில அரசுகளிடமிருந்து பறிக்கப்பட்டு, எம்.சி.அய்., டி.சி.அய்., ஏ.அய்.சி.டி.இ., என்.சி.டி.இ. போன்ற அமைப்புகளிடம் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பொன்முடி கூறுவதும் உண்மைதான். மாநிலங்களின் பட்டியலில் இருந்த கல்வி உரிமை – 1976–ல் அவசர நிலை காலத்தில் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது, இதற்கு முக்கியக் காரணம். இதை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கு தி.மு.க. ஆட்சி, ஏன், எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்ற நியாயமான கேள்வியும் எழுகிறது.

இது தொடர்பாக மற்றொரு பிரச்சினையையும் சுட்டிக் காட்ட வேண்டும். தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிக்கு 1552 இடங்கள் உள்ளன. இதில் 15 சதவீத இடங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. மருத்துவ உயர்பட்டப் படிப்பில் 50 சதவீத இடங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. இடஒதுக்கீடுகள் ஏதுமின்றி, மத்திய அரசால் இவை நிரப்பப்படுகின்றன. இதற்கு எதிராக – சமூகநீதி அடிப்படையில் தமிழ்நாட்டில் தொடர்ந்து குரல் கொடுக்கப்பட்டு வந்தாலும், மாநில அரசோ, மத்திய அரசோ ‘கண்டும் காணாதது’ போலவே இருந்து வருகின்றன.

தமிழ்நாடு – இடஒதுக்கீட்டில், இந்தியாவுக்கே வழிகாட்டும் மாநிலம் என்பது உண்மைதான். என்றாலும் அமுலாக்க நிலையில் நிலவும் அநீதிகளையும் சுட்டிக் காட்ட வேண்டும். அரசு கல்லூரிகளானாலும், தனியார் கல்லூரிகளானாலும், ஒவ்வொரு பாடப் பிரிவிலும் தனித்தனியாக, 69 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதுஇல்லை. ஒட்டு மொத்த இடங்களில் 69 சதவீத ஒதுக்கீடு செய்யப்படுவதாக கல்லூரிகள் அறிவிக்கின்றன. இதனால், வேலை வாய்ப்புக்குரிய பாடப் பிரிவுகளில் இடஒதுக்கீட்டைப் பின்பற்றாமல், மாணவர்கள் சேருவதற்கு ஆர்வம் காட்டாத பாடப் பிரிவுகளில், இட ஒதுக்கீட்டின் கீழ் வரக்கூடிய மாணவர்கள், தள்ளப்படுகிறார்கள். ‘பிளஸ்டூ’ வகுப்பு சேர்க்கையிலும், இந்த அநீதி நடந்து கொண்டிருக்கிறது. மாணவர்கள் விரும்பி சேரக் கூடிய பாடப் பிரிவுகளை ‘சுயநிதிப் பிரிவுகளாக’ அறிவித்து, அதற்குக் கட்டணம், நன்கொடை செலுத்திப் படிக்க வேண்டிய நிலை, அரசு கல்லூரிகளில்கூட இருக்கிறது.

அய்.அய்.டி., ஏ.அய்.அய்.எம்.எஸ். போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்து நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் வந்த பிறகும்கூட, பார்ப்பன சக்திகள், உச்சநீதிமன்றத்தின் வழியாக, இவ்வாண்டு இடஒதுக்கீட்டை அமுலாக்க விடாமல், தடுத்து நிறுத்தி விட்டனர்.

அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற அகிலஇந்திய தேர்விலும், பார்ப்பன அதிகார வர்க்கம், துரோகமிழைத்து வருகிறது. திறந்த போட்டிக்கான இடங்களில் இடம் பெறும் வாய்ப்புப் பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களை, அதில் இடம் பெறச் செய்யாமல் இடஒதுக்கீடு கோட்டாவின் கீழே தேர்வு செய்து விடுகிறார்கள். இதனால், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான பிரதிநிதித்துவம் குறைந்து விடுகிறது. உச்சநீதிமன்றம் ஏற்கனவே இத்தகைய சேர்க்கை முறை கூடாது என்று தீர்ப்பளித்தாலும்கூட, நீதிமன்ற ஆணைகளே மீறப்படுகின்றன. கல்வியில் இந்த நிலை என்றால், வேலை வாய்ப்பில் என்ன நிலை?

தனியார் துறைகளில் மட்டுமே வேலை வாய்ப்புகள் கிடைக்கும் நிலையில், தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தும் நடவடிக்கைகள் எதிலுமே, மத்திய மாநில அரசுகள் முனைப்புக் காட்டவில்லை. அவ்வப்போது, தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதோடு, பிரச்சினை முடிக்கப்பட்டுவிட்டது. உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு, பார்ப்பன சக்திகளும், ஊடகங்களும் உருவாக்கிய எதிர்ப்பு அலைகளில் – தனியார் துறை இடஒதுக்கீடு கோரிக்கை அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. பார்ப்பன ஆதிக்க சக்திகளின் நோக்கமே அதுதான்!

நாடாளுமன்றத்துக்கான தொகுதி ஒதுக்கீட்டிலும், அநீதிகள் தலைதூக்கியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள ஏழு நாடாளுமன்றத்துக்கான தனித் தொகுதிகளை, ‘தொகுதி மறு சீரமைப்பு ஆணையம்’ மாற்றியமைத்துள்ளது. அந்தத் தொகுதிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைய வேண்டும். அப்படித்தான் தொகுதி மறு சீரமைப்புச் சட்டமும் கூறுகிறது. ஆனால், அப்படி ஒதுக்கீடு செய்யப்படாமல், கடலோரத்திலுள்ள வட மாவட்டத்துக்குள்ளேயே (திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக் குறிச்சி, கடலூர், சிதம்பரம், நாகப்பட்டிணம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், பட்டியல் பிரிவில் இடம் பெற்றுள்ள தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர் சமூகப் பிரிவினரின், அரசியல் உரிமைகள் பறிக்கப்படுவதாக, அந்தப் பகுதிகளிலிருந்து எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. இந்தக் குரலின் நியாயத்தை மறுத்துவிட முடியாது. இந்தப் புதிய தொகுதி ஒதுக்கீடு அமுலுக்கு வந்து விட்டால், அடுத்து 2026 இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடக்கும்வரை, இதே நிலைதான் நீடிக்கும். தமிழ்நாட்டில் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுள்ள பெரிய அரசியல் கட்சிகள் இப்பிரச்சினையில் மவுனமே சாதிக்கின்றன.

கல்வி, வேலை, அரசியல் துறைகளில் அனைத்துப் பிரிவினருக்கும் உரிய பங்கீடு வழங்கப்படவேண்டும் என்பதே, இடஒதுக்கீட்டின் அடிப்படையான நோக்கமாகும். ஆனால், செயற்பாட்டு தளத்திலும் அமுலாக்கத்திலும் அனைத்துப் பிரிவினருக்கும் சம உரிமை வழங்கப்படாத நடைமுறைகளைப் பின்பற்றிக் கொண்டு, மேலோட்டமாக ‘இடஒதுக்கீட்டுப் பெருமை’களை பேசிக் கொண்டிருப்பது. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். குறியீடுகளினாலேயே நாம் குதூகலம் அடைந்துவிடக் கூடாது. குடியரசுத் தலைவர் பதவியில் ஒரு பெண் அமர்த்தப்படுவது, சிறப்புக்குரியதுதான். பாராட்டுக்குரியதுதான். இது பெண்கள் உரிமையை அங்கீகரிப்பதற்கான ஒரு குறியீடு. அவ்வளவே; குடியரசுத் தலைவர் பதவியில் ஒரு பெண் அமர்ந்து விட்டதாலே பெண்களுக்கு – 33 சதவீத ஒதுக்கீடு வந்துவிட்டதுபோல் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? கே.ஆர். நாராயணன் குடியரசுத் தலைவராக இருந்ததாலேயே இந்தியாவில் தலித் மக்கள், உரிமை பெற்று விட்டார்களா, என்ன?



# வன்கொடுமைகளும் சட்ட அமுலாக்கமும்

## வரப்பெற்றோம்



‘வன்கொடுமைகளும் சட்ட அமுலாக்கமும்’ – என்ற ஆய்வு நூலை எம்.ஏ. பிரிட்டோ, களப்பணியாளர்களின் உதவியோடு எழுதியுள்ளார். மதுரை டாக்டர் அம்பேத்கர் பண்பாட்டு மய்யம், 404 பக்கங்களைக் கொண்ட இந்த விரிவான ஆய்வை வெளியிட்டுள்ளது. நூலின் விலை ரூ.250. நூலின் உள்ளடக்கம் பற்றி நூலாசிரியர், தமது முன்னுரையில் சுருக்கமாக இவ்வாறு பட்டியலிட்டுள்ளார்.

“.... அய்ந்து தலைப்புகளாக அமைந்துள்ள இந்த ஆய்வு நூலின் முதல் அத்தியாயம் சாதியம், தீண்டாமை குறித்த சில அடிப்படையான விஷயங்களை முன் வைக்கிறது. சாதியக் கட்டமைப்பின் பல்வேறு பரிமாணங்களுக்கான அடிப்படைகளைச் சுட்டிக் காட்டுவதோடு, வரலாற்றில் தலித்துகளுக்கு எதிராக சமூகப், பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் நடைபெற்ற ஒடுக்கு முறைகளையும், உரிமை மீறல்களையும் ஆங்காங்கே தொட்டுக் காட்டுகிறது. தீண்டாமை ஒழிப்பில் சட்டங்கள் என்ற தலைப்பில் அமைந்துள்ள இரண்டாவது அத்தியாயம், ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கி இந்த ஆய்விற்கான கருப்பொருளான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் வரையில் தீண்டாமை ஒழிப்பிற்கென இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களின் சாராம்சங்களைக் குறிப்பிடுவதோடு, அவற்றின் அமலாக்கம், அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகள், விடுபாடுகள் பற்றிப் பேசுகின்றது. இந்த ஆய்வுக்கான நோக்கங்கள், ஆய்வு அணுகுமுறை மற்றும் அறிக்கைத் தயாரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்றாம் அத்தியாயம் ஆய்வுக்கான பின்னணிக் குறிப்புகளை வழங்குகிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட வழக்குகளின் அடிப்படையில் தென் தமிழகத்தில் ஆய்விற்கான கால வரம்பில் தலித்துகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்கொடுமைகள், அவற்றின் பின்னணி, குற்றம் புரிந்ததற்கான நோக்கங்கள் மற்றும் காரணங்கள் போன்ற தகவல்களைத் தாங்கிய விரிவான பகுதியாக நான்காவது அத்தியாயம் அமைந்துள்ளது. இவ்வாய்வின் நோக்கமான வன்கொடுமைகள் தடுப்புச் சட்ட அமலாக்கம் குறித்த பகுதியாக ஐந்தாம் அத்தியாயம் அமைகிறது. இச்சட்ட விதிமுறைகளின் கீழ் அரசு அதிகாரிகளுக்குள்ள குறிப்பான பணிகள் மற்றும் கடமைகளைப் பல்வேறு நிலைகளில் விரிவாக அலசி ஆராய்கிறது.”

தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், சிவகெங்கை ஆகிய **6** மாவட்டங்களில் **1996** முதல் **2001** ஆம் ஆண்டு வரை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளின் நிலை ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் கணிசமானவை, புலனாய்வு நிலையில் காவல்துறை அதிகாரிகளாலேயே தள்ளுபடி செய்யப்படுகின்றன. இதை அரசு புள்ளி விவரங்களே உறுதி செய்கின்றன. அப்படியே விசாரணைக்கு ஏற்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்ட பல வழக்குகளிலும் தண்டனை விகிதம் மிகக் குறைவாகவே உள்ளது என்ற உண்மையை தக்க தரவுகளுடன் இந்த ஆய்வு நிறுவுகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் – திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் பகுதியில் நிலவும் ‘இரட்டை டம்ளர் – இரட்டை இருக்கை’ தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட பிரச்சாரப் பயணத்தில், கிராமங்களில் சாதி வெறியர்களின் கடும் எதிர்ப்புகளை தோழர்கள் சந்தித்தனர். தீண்டாமைக்கு எதிரான வழக்கை காவல்நிலையத்தில் பதிவு செய்வதற்கே கடும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. ஒரு இயக்கத்துக்கே இந்த நிலை என்றால், தனிப்பட்ட புகார்களைப் பற்றி சொல்லவே வேண்டாம்.

பாதிக்கப்பட்டோர் தரும் புகார் மனுக்களை காவல்துறையினர் உடனே முதல் தகவல் அறிக்கையாகப் பதியாமல், தாமதப்படுத்தும் காரணங்களை, இந்த ஆய்வு இப்படி பட்டியலிட்டுக் காட்டுகிறது. (பக்.167)

- “பாதிக்கப்பட்டோரை காவல்துறையினர் பலமுறை அலைக் கழிப்பது, காவல் நிலையங்களில் காரணமின்றி நெடுநேரம் காத்திருக்க வைப்பது.
- பாதிக்கப்பட்டோர் கொடுக்கும் புகாரைத் திரும்பப் பெற வைக்க அவர்களிடம் பல்வேறு விதமான சமரச முயற்சிகளில் காவல்துறையினர் ஈடுபடுவது.
- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு புகார் கொடுக்க வரும் தலித்துகளை காவல்துறையினர் மிரட்டுவது.
- பாதிக்கப்பட்ட புகார்தாரர்கள் மீதே பொய் வழக்குப் பதியப் போவதாக மிரட்டுவது, பதிவு செய்ய முனைவது, சில சம்பவங்களில் அவர்கள் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்வது.
- பாதிக்கப்பட்டோரின் புகார் மனுக்களில் அவர்கள் கூறும் முழுமையான சம்பவ விவரங்கள், வன்கொடுமையின் தன்மை, பாதிப்பு, சேத விவரம் ஆகியவற்றை முழுமையாக எழுதாமல், முக்கிய பல தகவல்களை விட்டு விட்டு தாங்களாகவே ஏனோதானோவென பெயருக்கு எழுதிக் கொள்வது.
- நடந்த வன்கொடுமைகளுக்கு ஏற்ற சரியான பிரிவுகளைக் குறிப்பிடாது. இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளை மட்டும் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்வது.
- புகார் கொடுக்க காவல் நிலையங்களுக்கு வரும் பாதிக்கப்பட்ட தலித்துகளை காவல்துறையினர் தாக்குவது அல்லது இழிவுபடுத்துவது.
- காவல் துணைக் கண்காணிப்பாளர் போன்ற உயர் அதிகாரிகள் அறிவுறுத்துதலின்படி மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிய முடியும் என்று கூறி வேண்டுமென்றே காலம் கடத்துவது.
- முதல் தகவல் அறிக்கையினைப் பதிவு செய்ய இலஞ்சம் பெறுவது, எதிரிகளிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுப்பது.
- பாதிக்கப்பட்ட புகார்தாரர்களை எதிரிகள் மிரட்டுவது, கொடுத்த புகார்களைத் திரும்பப் பெற அவர்களுடன் சமரச முயற்சிகளில் ஈடுபடுவது.
- ஊர்ப் பெரியவர்கள், நாட்டாண்மைகள், பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றோர் புகார்தாரர்களை சமரசப் படுத்த முயற்சிப்பது, புகார் மனுக்களைக் கொடுக்கவிடாமல் தடுப்பது.
- காவல் துறை அதிகாரிகளை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவிடாமல் உள்ளூர் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் குறுக்கீடு செய்வது அல்லது தடுப்பது.

மேற்கண்ட நீண்ட பட்டியலைப் பார்க்கும்போது நடந்த வன்கொடுமைகளால் ஆதிக்க சாதியினரிடம் பட்ட இன்னல்கள், அவமானங்களைவிட

(4 ஆம் பக்கம்

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி:

# காவல் நிலையங்களா? பூசை மடங்களா?

*காவல் நிலையங்கள் பூசை மடங்களாக மாறி நிற்பதையும், காவல்துறை அதிகாரிகளே கோயிலில் தீ மிதிப்பதையும் சுட்டிக்காட்டி கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டித்தார்.*

15.6.2007 இல் ஈரோடு கருங்கல்பாளையத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் மற்றும் நாத்திகர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி. அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் பல்வேறு ஆழமான செய்திகளைத் தெரிவித்தார். அதில் சில பகுதிகள்...

“தங்களுடைய உடலை வருத்திக் கொண்டு தோழர்கள் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் பங்கு பெற்றார்கள். மக்கள் மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு விழித்தெழச் செய்வதற்கே இந்த நிகழ்ச்சிகளை நடத்துகிறோம்.

இந்த நாட்டின் அரசியல் சட்டம், அறிவியல் மனப் பான்மையைத் தாண்டி, எதையும் ஏன், எப்படி, எதற்கு என்று கேட்கச் சொல்லி வலியுறுத்தி, “To promote Scientific Temper, Sprit of Enquiry - It shall be the duty of every citizen of India” - என்று ஒவ்வொரு குடிமகனையும் கேட்கச் சொல்கிறது. ஆனால், எதையும் ஏன், எப்படி என்று கேட்டு, அறிவியல் மனப்பான்மையை வளர்க்க நினைத்தால் காவல்துறையே தடுக்கிறது.

நம் நாட்டின் காவல்துறை சரியான நடவடிக்கை எடுத்தால் இப்படிப்பட்ட ஊர்வலத்திற்கு, போராட்டத்திற்கு தேவையே இருக்காது.

இரட்டைக் குவளை எதிர்ப்பு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் - இவையெல்லாம் தேவையே இருக்காது. அரசியல் சட்டம் பற்றியும், போராட்ட நோக்கம் பற்றியும் காவல் துறையினருக்கு அறிவே இல்லை என்று கூறிவிட முடியாது. அறிவு இருக்கும். பயன்படுத்துவது இல்லையே என்றுதான் நாங்கள் வருத்தப்படுகிறோம்!

கடந்த காலத்தின் ஒரு தி.மு.க. அமைச்சர் பண்ணாரி யம்மன் கோயிலில் தீ மிதித்ததை காட்டுமிராண்டி என்று அன்று முதல்வராக இருந்த கலைஞர் கண்டித்தார். இப் போது இந்த மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் தீச்சட்டி எடுக்கக் கூடாது என்று தடைபோடும் எஸ்.பி., டி.எஸ்.பி. போன்ற உயர் காவல் அதிகாரிகள், அதே பண்ணாரி கோயில் குண்டத்தில் இறங்கி தீ மிதிக்கிறார்களே - அவர்களை காட்டுமிராண்டி காவல்துறை என்று அழைப்பதா? நீங்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!

அய்ரோப்பாவில் 200 ஆண்டுகளுக்கு முன்பே அரசிய லிலிருந்து மதத்தைப் பிரிக்க கடுமையான போராட்டம் தொடங்கப்பட்டது. பிரான்சில்தான் முதலில் தொடங்கியது.

இந்த நாட்டில் என்னவென்றால் மதத்தை அடிப்படை யாகக் கொண்டே அரசியல் நடக்கிறது. ஆட்சியும் நடக்கிறது. பாரதிய ஜனதா ஆட்சியில்தான், மத நல்லிணக்கத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை அளிக்கப்பட்டது. அதில், அரசு அலுவலகங்களில், செல்லும் வழிகளில் மத சுலோ கங்கள் எழுவதே கலவரங்களுக்குக் காரணம் என்பதைக் குறிப்பிட்டு, அரசுஅலுவலகங்களில் எந்த வழிபாடும் இருக்கக் கூடாது, வழிபாட்டுத் தலங்களை அமைக்கவோ, விரிவாக்கவோ கூடாது - என்று குறிப்பிட்டது.

கரசேவைக்கு அயோத்திக்கு ஆள் அனுப்பியதாகக் கூறிய ஜெயலலிதா ஆட்சியில் அரிபாஸ்கர் என்ற பார்ப் பனர் உள்துறை செயலாளராக இருந்தார். அவர் 1994 இல் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதில் அரசு அலுவலகங் களில் எந்த மத வழிபாடும் கூடாது என வலியுறுத்தி யிருந்தார்.

அதற்கடுத்து 2005-இல் ‘லத்திகாசரண்’ என்ற காவல் துறை துணைத் தலைவர் காவல் துறைக்காகவே ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதில் காவல் துறை அதிகாரிகள் எந்த மதச் சடங்குகளிலும் ஈடுபடக் கூடாது - வளாகங் களில் வழிபாட்டுத் தலங்கள் கூடாது - என்றெல்லாம் குறிப்பிட்டு, அதை மீறும் பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், தண்டனை அளிக்கவும் சட்டத்தில் இடமுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். காவல் அதிகாரிகள் அதை மதித்தார்களா? மதிக்கிறார்களா?

என்ன நடக்கிறது காவல் நிலையத்தில்? வெள்ளிக் கிழமை தோறும் பூசை! ஆடி மாத பூசை! அறைக்கு மட்டுமல்ல, கை விலங்குக்கும், பூட்டுக்கும் கூடப் பூசைதான்! எதற்கு இன்னும் அதிகம் பேரை கைது செய்யவா? இன்னும் அதிக வசூல் தேவை என்பதற்காகவா? எந்த சட்டத்தை மதித்திருக்கிறது காவல் துறை? இதையெல்லாம் பெரிய இயக்கங்கள் என்று சொல்பவர்கள் கேட்க மாட்டார்கள்.

“எந்த மதமும் ஒலி வைத்து - மேளம் அடித்து வழிபடச் சொன்னதில்லை! நோயாளிகள், மாணவர்களின் உரிமையில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை! ஒரு நிமிடமாக இருந்தாலும் ஒலி பெருக்கியை வழிபாட்டில் பயன்படுத்தக் கூடாது” என்று இந்த நாட்டில் உச்சநீதி மன்றமே தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆண்டுத் தேர்வின் போது மாரியம்மன் பண்டிகை! அரையாண்டுத் தேர்வின் போது அய்யப்பன் சீசன்! உச்சநீதிமன்றத் தீர்ப்பை காவல் துறை மதிக்கிறதா? இந்த ஆண்டிலிருந்து நாங்கள் நீதி மன்ற ஆணையுடன் வருகிறோம்! பார்த்துக் கொள்வோம்!

சட்டம் என்பதே காவல்துறைக்கு ஆகாத செய்தி! சட்டம் பேசினால், “ஏண்டா சட்டமா பேசுகிறாய்?” என்று அடிப்பதுஅவர்களின் பாணி! அவர்களுக்குப் பிடிக்காத வார்த்தை சட்டம். சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவர்களின் நிலை இப்படி இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள்தான் நமது ஊர்வலத்திற்கு சட்டம் பேசி - தடை செய்ய முயற்சிக்கிறார்கள்!

காவல்துறை அடக்குமுறை நமக்குப் புதிதல்ல! தனக்கு ஆகாதவர் மீது பொய் வழக்குப் போடுவது, பொருந்தாத வழக்கில் கைது செய்வது அவர்களுக்கு வாடிக்கை! நெருக்கடி நிலை காலத்தில் தி.மு.க.வை ஆதரித்ததற்காக பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணனை ஒரு ஆண்டு சிறையில் அடைத்தார்கள். இராஜீவ் கொலை சம்பவத்தில் மூன்றரை ஆண்டு சிறைத் தண்டனை கிடைத் தது. வேலூரில் புலிகள் சுரங்கம் வெட்டித் தப்பினார்கள் என்பதற்காக என்னை ஓராண்டு சிறையில் தள்ளினார்கள். அதற்காக விடுதலைப்புலிகளை ஆதரிப்பதில் நாம் பின் வாங்கியது இல்லை.

இப்போது புலிகளின் மீதே ‘பால்ரஸ்’ குண்டுகளை இலங்கைக்குக் கடத்தியதாகக் கூறி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்கிறார்கள். பால்ரஸ் குண்டு என்பது ஆயுதமா? அதை அவன் நாட்டுக்குக் கொண்டு சென்றால், உன் நாட்டுப் பாதுகாப்புக்கு எப்படி பாதிப்பு வரும்? ‘இந்து’ போன்ற ஏடுகள் அந்த பால்ரஸ் குண்டுகளை “எக்ஸ் புளோசிவ் - வெடி பொருள்” என்றுதான் குறிப்பிடுகின்றன. அதைக் கண்டு ஆட்சியாளர் பொய் வழக்குப் போடத் துணிந்து விடுகிறார்கள்.

சீரங்கத்தில், பெரியார் சிலை உடைப்பு சம்பவத்தைப் போன்று, முத்துப்பேட்டை என்ற ஊரிலும் பெரியார் சிலையை அண்மையில் உடைத்தார்கள். அதற்கும் எதிர் வினையாக தஞ்சாவூரில் பார்ப்பனரின் பூணூல் அறுக்கப் பட்டது. நெய்வேலியில் பிள்ளையார் சிலை உடைக்கப்பட்டது. அவர்கள் மீது எல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டம் போடப் படவில்லை.

கலைஞருக்கு இப்போதாவது புதிய சிந்தனை வந்து அவர்கள் மீது வழக்குப் போடவில்லை என்றால், நாங்கள் வரவேற்போம்! அதைச் செய்தவர்கள் திராவிடர் கழகத்துக்காரர் என்பதால் விட்டுவிட்டார்களா? அப்படி என்றால் கண்டிக்கிறோம்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்தால், அது தற்காலிகமானதுதான் - இரண்டு வாரங்கள் தான் செல்லுபடியாகும். அதன் பிறகு அரசுக்கு பெரும் பங்கு இருக்கிறது. அரசு ஏற்றுக் கொண்டால்தான் அந்தச் சட்டம் தொடர முடியும். கழகத் தோழர்கள் மீது போட்ட வழக்கு இப்படித்தான் அரசின் முழு ஆதரவோடு தொடர்ந்தது. அதன் பிறகும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மூன்று பேர் கொண்ட அறிவுரைக் கழகம் - அப்படி வழக்குப் போட்டது சரிதான் என்று கூறி விட்டனர். அதன் பின்புதான் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்து, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை உடைத்து, தோழர்களை வெளிக் கொண்டு வந்தோம்.

எனவே, எப்படிப்பட்ட பொய் வழக்குகளையும், பொருந் தாத வழக்குகளையும், காவல்துறையின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து எதிர்க்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

தஞ்சையில் கடந்த மே 19 ஆம் தேதி சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தினோம். அரசியல் சட்டத்தை அமுல்படுத்தி அம்பேத்கர் பேசிய போது -

“இன்று அரசியல் சமத்துவம் தான் கிடைத்திருக்கிறது. ஆனால், பொருளாதார, சமூக சமத்துவம் - கிட்டவில்லை. அப்படிப்பட்ட சமத்துவம் கிடைக்காவிட்டால் சட்ட அமைப்பே தகர்ந்து போய்விடும். அனைத்தும் வீணாகி விடும்” - என எச்சரித்தார். அந்த நிலை தான் உருவாகியது.

சாதியைப் பாதுகாக்கும் சட்டப் பிரிவுகளைக் கொளுத்தப் போவதாக பெரியார் அறிவிக்கிறார். நவம்பர் 3 ஆம் தேதியன்று அதற்காக, தஞ்சையில் மாநாடு நடைபெறும் என முழங்கினார்.

அரசு நடுங்கியது. ஏனென்றால் அரசியல் சட்டத்தை எரித்தால் அதற்கு என்ன தண்டனை என்று அப்போதைக்கு சட்டமே கிடையாது. எனவே பெரியாருக்காகவே, நவம்பர் 11 ஆம் தேதி, காந்தி பட அவமதிப்பு, தேசியக் கொடி எரிப்பு, சட்டப்பிரிவு எரிப்பு ஆகியவைகளுக்கு தண்டனை அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மூன்று ஆண்டுகள் சிறை என்பது உறுதியாகத் தெரிந்த பிறகும், 1949 இல் தி.மு.க. பிரிந்து சென்ற பின்பும் பெரியாரின் அழைப்புக்காக மூன்று லட்சம் பேர் கூடினார்கள். 12,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். 3000க்கும் மேற்பட்டவர்கள் சிறைச் சென்றார்கள். சிறையில் 5 பேர் இறந்தார்கள். சிறையி லிருந்து வெளிவந்த 13 பேர் அதன் கொடுமை தாங்காமல் ஒரு வாரத்திற்குள் இறந்து விட்டார்கள்.

அதன் 50 ஆவது ஆண்டை நினைவு கூரத்தான் தஞ்சையில் சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தினோம். அந்த மாநாட்டில், 50 ஆண்டுகளுக்கு முன்பு சட்டப் பிரிவைக் கொளுத்தி சிறை சென்ற தோழர்களில் தற்போது உயிருடன் இருப்பவர்களில் சிலரையாவது பெருமைப்படுத்த நினைத்துப் பாராட்டினோம்! அந்த உணர்ச்சிகரமான நிகழ்ச்சி 50 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டக் களத்தை நம் இளைஞர்களுக்கு நினைவூட்டி, கொள்கை உரமூட்டும் என்றும் நினைத்துப் போற்றினோம்.

1939 இல் கடலூரில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு திருப்பாதிரிப்புலியூர் - ஞானியார் அடிகள் ஆசிரமம் ஒன்று உள்ளது. அந்த அடிகளாரை வைத்துத்தான் பெரியார் தனது முதல் ‘குடி அரசு’ இதழையே வெளியிட்டார். அப்படிப்பட்ட அந்த மடத்தில் இதே கருங்கல் பாளையத்தைச் சேர்ந்த வடிவேல் செட்டியார் என்பவரும், அந்த மடத்தின் செயலாளராக இருந்த தங்கப் பெருமாள் பிள்ளை என்பவரும், பெரியாரிடம் கோரிக்கை வைத்து, அந்த மடத்தில் வந்து உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

சாமி மடத்தில் பெரியார் பேச்சு. பேச்சின் தலைப்பு “நம்முன் உள்ள கேள்விகள்” என்பதாகும். அங்கு பேசும் போது பெரியார் குறிப்பிடுகிறார் - “உங்களை வெறுக்கும் பார்ப்பனர்களை எதிர்ப்பதற்காக என்னைப் பேச அழைத் தீர்கள். ஆனால் நீங்கள் நசுக்கும் மக்கள் குறித்து, அவர் களின் தீண்டாமைக் கொடுமை பற்றி என்ன செய்திருக் கிறீர்கள்? தீண்டாமையை வலியுறுத்தும் சாதியை ஒழிக்க நாள் கணக்கில் காத்துக் கொண்டிருக்க முடியாது. நாளைக்கே செய் என்றால் தீர்வு காணப் புறப்பட வேண்டும். உங்களுக்குக் கீழாக இருக்கும் அவர்களைப் பார்த்து பரிவு வந்திருக்கிறதா? அவர்களுக்காகப் போராடியிருக் கிறீர்களா?” என்று சாட்டையடியாக விளாசினார்.

ஏனென்றால் பெரியாரின் அடிப்படை சாதி ஒழிப்பாக இருந்தது. பார்ப்பனர்களைப் பொருத்தவரை அனைத்து சாதியினரும் தீண்டத்தகாதவர்கள் தான். அனைவரும் அவனுக்குக் கீழ்தான்! எல்லாத் தலைவர்களும் கீழ் சாதி தான். உயர்சாதிப் பெரிய தலைவர்கூட கோயிலுக்குள் நுழைய முடியாமைக்கு இந்தத் தீண்டாமையே காரணம் - என்றார் பெரியார்.

அவருடைய நாத்திகம் வெறும் கடவுள் மறுப்புக்காக மட்டும் இல்லை. கடவுள் உண்டா இல்லையா என்னும் விவாதத்தை அறிஞர்கள் ஒரு அறையில் அமர்ந்து பேசிக் கொள்ளட்டும். எங்களுக்கு சமத்துவம் தான் தேவை என்றார்.

சாதியமும், தீண்டாமையும், இந்து மதத்தின் கூறாக இல்லாமல் இருந்திருந்தால், இந்து மதத்தைப் பற்றிக்கூட பெரியார் பேசாது இருந்திருப்பார். அது சமத்துவத்துக்கு எதிராக இருந்ததால் - சமத்துவத்தை நேசித்த பெரியார் அதை எதிர்த்தார்.

இந்துமதத்தைப் பற்றிப் பெரியார் பேசும் போது அது வேதத்தால் எழுதப் பட்டது என்றார்கள். வேதத்தைப்

(4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# பெரியார் பேசியது சாதி ஒழிப்புக்கான நாத்திகம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்துக் கொள்ளுங்கள் என்று சொன்ன போது, அது கடவுள் எழுதியது என்ற பிறகுதான், பெரியார் கடவுள் சங்கதிக்கே வருகிறார். அப்படியா என்று அதை எதிர்க்கத் தொடங்கினார்.

“நான் சாதியத்தை மட்டும் அழித்து, எரித்து கொளுத்தலாம் என நினைக்கிறேன். அப்போது இந்துமதமும் போகிறது என்று சொல்கிறீர்கள். உங்கள் இந்து மதம் அப்படிப் புனிதமானதாக இருந்தால், இந்து மதத்தை தனியே பிரித்துக் கொள்ளுங்கள், சாதியை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். இல்லை - இந்துமதத்தில் சாதி பிரிக்க முடியாமல், பிணைக்கப்பட்டிருக்கிறது என்றால், நான் அதையும் தான் எதிர்ப்பேன்!” என்றார்.

“இந்து மதத்தைத் தாக்கி அழிக்க நினைக்கும் போது வேதமும் அழிகிறது என்று சொன்னால், வேதம் புனிதமானது என்று நினைத்தால் - வேதத்தைப் பிரித்துக் கொள்ளுங்கள், நான் இந்து மதத்தை அழித்துக் கொள்கிறேன். இல்லை, வேதம் பிரிக்க முடியாதது என்றால், வேதத்தையும் சேர்த்துத்தான் எரிப்பேன் - அந்த வேதத்தை எழுதியது கடவுள் என்றால், அப்போது கடவுளையும் பிரிக்கச் சொல்கிறேன், முடியாது என்றால் கடவுளையும் சேர்த்து அழிப்பேன்” என்று பெரியார் தர்க்கவாதம் செய்தார்.

எனவே, பெரியார் பேசிய நாத்திகம் - சாதி ஒழிப்புக்காகப் பேசிய நாத்திகம்.

இப்போது எல்லா மதத்திற்கும் சாதிய நோய் வந்துவிட்டது. ஆண்டவன் முன் எல்லோரும் சமம் என்று அனைத்து மதங்களும் சொல்கின்றன. நம் “அர்த்த முள்ள” இந்து மதமோ - சமம் இல்லை என்பதையே தத்துவமாகக் கொண்டுள்ளது. பிற மதங்களில், அந்தந்த மத நூல்களைப் படி... படி... என்று வற்புறுத்துகிறார்கள். இந்து மதத்தில்தான் வேதத்தைப் படிக்காதே, கேட்காதே என்பதை ஒரு விதியாகவே வைத்திருக்கிறார்கள்.

பெரியார் இது பற்றி எளிமையாகவே கேட்டார். “பதிவு செய்வதற்காகப் பத்திரத்தை எழுதிவிட்டு, படிக்காமல் கையெழுத்துப் போடச் சொல்லும் அயோக்கியனுக்கும், உனக்கும் என்ன வேறுபாடு?” என்றார்.

அவரது நோக்கம் வெறும் பார்ப்பன எதிர்ப்பு மட்டுமல்ல...

நிறைய பேர் பார்ப்பன எதிர்ப்புக் காட்டுவார்கள். திருநெல்வேலி சைவப் பிள்ளைமார்கள் நம்மைவிடப் பார்ப்பனர்களை கடுமையாக எதிர்ப்பார்கள். ஏனென்றால் பார்ப்பனர்களைவிட நாங்கள் மேல் சாதி என்று காட்டுவதற்காக எதிர்க்கிறார்கள்.

அண்ணா ஒருமுறை அழகாகச் சொன்னார், “பார்ப்பன எதிர்ப்பு மட்டுமே எங்கள் கொள்கை என்றால், எங்கள் தலைமையிடம், ஈரோட்டில் இருக்காது. திருநெல்வேலியில் இருக்கும்” என்றார்.

எனவே, பார்ப்பன எதிர்ப்பு மட்டுமே நமது கொள்கை இல்லை. சாதி ஒழிப்புடன் சேர்ந்த பார்ப்பன எதிர்ப்பு, அத்துடன் இருக்கும் நாத்திகமே பெரியாரின் லட்சியமாக இருக்கிறது. கடவுள் பெயரால் கட்டப்பட்டுள்ள மதங்கள் - அது, அது நிலை நிறுத்தும் சாதியம் அதை எதிர்க்க வேண்டும் - அதன் ஒரு கூறாக ஒட்டிக் கொண்டிருக்கும் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதே நம் நிலைப்பாடு.

ஆங்கிலேயன் இந்த நாட்டில் சுரண்டப்படும் மக்கள், பின்தங்கிய மக்களின் நிலையைப் பார்த்துச் சிந்தித்தான். உயர் சாதி மக்களிடம் நிலம் இருக்கிறது - நிலம் ஒரு உற்பத்திச் சாதனம் - அது தாழ்த்தப்பட்டோரிடம் இல்லாததால் அவர்களது தாழ்வுநிலை தொடர்கிறது. எனவே, பஞ்சமி நிலங்கள் என்று அவர்களுக்கு நிலத்தை ஒதுக்கிக் கொடுத்தான். பொதுவுரிமை இல்லாத நாட்டில் பொதுவுடைமை கிடைக்காது என்பதால் இந்த நிலங்களை வேறு யாரும் அபகரித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக - அதை யாருக்கும் விற்கக் கூடாது என்பதற்காக - அவர்களுக்குள் வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம் என்று விதிகளை ஏற்படுத்தி வைத்தான்.

அப்படி சுரண்ட வந்த ஆங்கிலேயர் கொடுத்த உரிமை சுதந்திர இந்தியாவில் பறிபோய் விட்டது. வெள்ளைக்காரன் போய் பார்ப்பனக் கொள்ளைக்காரன் வந்ததும் போய்விட்டது.

பீகாரின் முன்னாள் முதல்வர், வழக்குரைஞர், சோசலிஸ்ட்டான “பிந்தேஸ்வர் பிரசாத் மண்டல்” தலைமையில் அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்கான மண்டல் குழு. இவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் போராட்ட அறிவிப்பிற்காக முதல்வர் பதவியையே தூக்கி எறிந்தவர்.

அவர் 2 ஆண்டுகள் இந்தியா முழுவதும் ஆய்வு செய்தார். 406 மாவட்டங்களில் 405 இல் நேரடியாகச் சென்று பிற்படுத்தப்பட்ட மக்கள் நிலை குறித்து முழுமையான ஆய்வை மேற்கொண்டார். 1990 இல் அவர் பல்வேறு பரிந்துரைகளைக் கூறினார்.

தாழ்த்தப்பட்டோருக்கு 15 சதம், பழங்குடியினருக்கு 7.5 சதம் ஒதுக்கீடு செய்தது போக இந்துக்களில் 44 சதமும், மற்றவைகளில் 8 சதமும் பிற்பட்டோர் உள்ளதாகக் கூறினார் மண்டல். (மொத்தம் 52 சதவீதம்). சட்டச் சிக்கலால் மொத்த இடஒதுக்கீடு 50 சதத்தைத் தாண்டக் கூடாது என்பதற்காக, வேறு வழியின்றி பிற்பட்டோருக்கு 27 சத ஒதுக்கீடு - கல்வி, வேலை வாய்ப்பு, வங்கிக் கடன்களிலும் அளிக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

இந்த நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் பெரும்பாலும் உயர்சாதியினரிடம் இருப்பதால், தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்கு அவர்களின் உற்பத்தி உறவுகளில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு நிலங்களை வழங்க வேண்டும் என்றும், மண்டல் குழு பரிந்துரைத்தது. அது பற்றி யாரும் இப்போது பேசுவது கிடையாது.

கிராமக் கோயில்கள் குறித்து தோழமை உணர்வாளர்களின் கருத்துக் களிலிருந்து நாங்கள் மாறுபடுகிறோம். கிராமப் பொதுக் கோயில்கள் - நாட்டார் கோயில்கள் என்பவற்றில் எல்லாம் தோரணம் மறுக்கப்படுகிறது. அறங்காவலர் குழுவில் இருக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட தோழரைக்கூட கிராமங்களில் கோயிலுக்கு உள்ளே விடுவதில்லை. மாவட்ட எஸ்.பி. ஆட்சியரை வைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினாலும், மறுத்து விடும் நிலை இன்று நீடிக்கிறது. கிராமக் கோயில்கள் சாதியைப் பாதுகாக்கும் அரண்களாகவே செயல்படுகின்றன.

அப்படி தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்காத கிராமக் கோயில்களை சூன் மாதத் திற்குள் பட்டியல் எடுக்கச் சொல்லியுள்ளோம். அரசுக்கு, ஆட்சியாளர்களுக்கு, காவல் துறைக்கு, மனித உரிமை ஆணையத்திற்கு - இது குறித்த விவரங்களைத் தெரிவிப்போம். அப்போதும் நடவடிக்கை இல்லை என்றால், அடுத்தக் கட்டப் போராட்டத்திற்குச் செல்வோம்!

இரட்டைக் குவளை உள்ள தேநீர் கடைகளில் வருகின்ற ஆகஸ்டு 15 இல் தேர்ந்தெடுத்த இடங்களில் சென்று உடைப்பது, நவம்பர் 26 இல் பஞ்சமி நிலங்களில் சென்று உழவுஓட்டுவது, சனவரி 26 இல் அனுமதி அளிக்கப்படாத கோயில்களுக்குள் செல்வது - இப்படி அடுத்தடுத்து, போராட்டத் திட்டத்தை வகுத்துள்ளோம்.

இதில், காந்தியம் பேசி இனிப் பயனில்லை. காந்தியத்தை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அரசியல் மேடைகளில் பஜனையைக் கொண்டு வந்ததே காந்திதான். இந்துமத ஆதரவு நாடாக இந்தியாவை ஆக்கியதில் காந்திக்குப் பெரும்பங்கு உண்டு. காந்தி மீது கடும் விமர்சனம் எங்களுக்கு உண்டு.

அம்பேத்கர், “காந்தியும் - காங்கிரசும் தீண்டத் தகாதவர்களுக்குச் செய்தது என்ன?” என்ற புகழ் பெற்ற நூலில் "Beware of Dogs" - என்று வீடுகளில் எழுதுவார்களே அது போன்று "Beware of Gandhi" என்று கடுமையாக எழுதினார். காந்தி பேசிய அகிம்சையை அம்பேத்கர் வேறுவிதமாகப் பார்த்தார். எதிர்ச் சிக்கலை அகிம்சை என்றார். காந்தி யின் அகிம்சை கோழைத்தனமானது. அம்பேத்கர் கூறியது புரட்சிகரமானது - நமக்குத் தேவையானது. இது புத்தரின் அகிம்சை - அது சமணரின் அகிம்சை.

அகிம்சைப் போராட்டம் நடந்த அந்தக் காலத்தில் கேரளாவில் ‘அய்யன் காளி’ என்பவர், தாழ்த்தப்பட்டோர் உரிமைக்காக வெகுண்டு போராடினார். கள்ளுக்கடைகளில் தேனீர்க் கடைகளில் விட மறுத்த போது, அங்குச் சென்று உடைத்தார். வீதிகளில் உரிமை மறுக்கப்பட்டபோது, சலங்கை பூட்டிய மாட்டுவண்டிகளில் வண்டியைச் செலுத்தி, ஆதிக்கவாதிகளை வெகுண்டு ஓடச் செய்தார்.

அமெரிக்காவில் இன அடிப்படையில் பிரச்சினைகள் எழுந்த போது, "Nation of Islam" என்ற அமைப்பை “மால்கம் எக்ஸ்” என்பவர் தோற்றுவித்தார். எங்கெல்லாம் கறுப்பர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதோ அங்கு குழுவாகச் சென்று அடித்து உதைத்தார்கள். வெள்ளையர் இறங்கி வந்தார்கள். அது அமெரிக்க வரலாறு.

எனவே, தோழர்களே தேநீர் கடை - கோயில் நுழைவு பஞ்சமி நிலப் போராட்டங்களில் திரண்டு வந்து கலந்து கொள்ளுங்கள். தோழமை அமைப்புகளை உடன் இணைத்துக் கொள்ளுங்கள். பெரியாரியலையும், சாதி ஒழிப்புப் போரையும் முன்னெடுத்துப் பாய்ந்து வரும் பெரியார் திராவிடர் கழகப் பணிகளுக்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள்... தாருங்கள்!”

- இவ்வாறு கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**தொகுப்பு : “தமிழ்த் தேனி”**

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றைப் புகார் மனுக்களாக ஏந்திக் கொண்டு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையங்களுக்கு வரும்போது பாதிக்கப்பட்டோர் கூடுதலான போராட்டங்களையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பது தெரிகிறது” - என்று படம் பிடிக்கிறது, இந்த ஆய்வு நூல்.

புதிய ஜனநாயகப் புரட்சி, தமிழ்த் தேசக் குடியரசு உருவாக்கம் என்ற தொலைநோக்கு இலக்குகளோடு, இவற்றில்தான் அனைத்துப் பிரச்சினைக்குமான தீர்வு அடங்கியுள்ளது. பல்வேறு அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் பெரியாரின் ஆட்சியே வந்து விட்டது; எனவே சாதி, மத சுரண்டல் முற்றிலுமாக ஒழிந்து விட்டன என்ற கற்பனைக்குள் மூழ்கிக் கொண்டு, அரசவைப் புலவர்களாக, ஆட்சிக்குப் புகழாரம் சூட்டுவதையே, அன்றாடப் பணியாக்கிக் கொண்ட “தமிழர் தலைவர்கள்” அறிக்கைப் புரட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் - கண்களுக்கு எதிராக கிராமங்களில், தலைவிரித்தாடும் இந்த தீண்டாமைக் கொடுமைகளைக் காணாமல் அதற்கு எதிரானப் போராட்டத்தில் பங்களிப்பை வழங்காமல், தத்துவ - விவாதங்களில் இன்பம் காண்பது மிகப் பெரும் சமூக அநீதியாகும்.

இப்போதும் தமிழ்நாட்டில் இத்தனை தீண்டாமைக் கொடுமைகள் - இன்னமும் தலைவிரித்தாடுகிறது என்பதை இந்நூல் ஆய்வுகளோடு உறுதி செய்துள்ளது.

சாதி ஒழிப்புப் போராட்டக்களத்தில் இந்நூல், ஒரு வலிமையான படைக்கலன் என்று உறுதியாகக் கூறலாம்.

சாதி ஒழிப்புக் காக களத்தில் இறங்கிப் போராடுவோருக்கு, நல்ல வெளிச்சத்தைத் தரக்கூடிய இந்த ஆய்வு நூலைப் படைத்த நூலாசிரியர் எம்.ஏ. பிரிட்டோவையும், மதுரை டாக்டர் அம்பேத்கர் மய்யத்தையும் பாராட்டுகிறோம். ❑

## கழகச் செய்திகளை அறிய ஓர் இணையத் தளம்

பெரியார் திராவிடர் கழக நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள...

**Periyardravidarkazhagam.blogspot.com**

இணையதளத்தைப் பாருங்கள்! கழகம் தொடங்கிய 2001 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை கழகம் நடத்திய போராட்டங்கள், பிரச்சாரப் பயணங்கள், மாநாடுகள் பற்றிய முழு விவரங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

கழகத் தோழர்கள் - கழக நிகழ்வுகளின் புகைப்படங்கள், செய்திகள், ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

**அசுரன் ஊடகம்,** 1/810 முத்தமிழ் நகர், அடியனூத்து அஞ்சல், திண்டுக்கல் - 624 003.

மின்னஞ்சல் : **Periyardk@gmail.Com**

## இராமநாதபுரம் மாவட்ட கழகம் கலைப்பு

இராமநாதபுரம் மாவட்டப் பெரியார் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கழகத்தின் புதிய அமைப்பாளர்கள், விரைவில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

**– தலைவர், பெரியார் திராவிடர் கழகம்**


## கழகத் தோழர்களுக்கு

கழகத் தலைமை அலுவலகம் மாற்றப்படுகிறது. புதிய அலுவலக முகவரி விரைவில் அறிவிக்கப்படும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on : 5th July 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜுலை 12, 2007 புரட்சி 5 முழக்கம் 28 விலை : ரூ.2.50


# கோடி கோடியாக பணம் புரளும் ஆன்மீக மோசடி வர்த்தகம்

*யோகா தியானம், ஆயுர்வேதம், வாழ்க்கைக் கலை என்ற வழியில் 'ஆன்மீகம்' திரும்பியிருக்கிறது. புராணம், இதிகாசம், சடங்கு வழிபாடு என்ற தளங்களில் உயிர் பெற்றிருந்த 'இந்து' மதம் - இப்போது, அறிவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகி, புதிய உருமாற்றத்தை எடுத்து, தன்னை தகவமைத்துக் கொண்டு வருகிறது என்றே கூறலாம். உருவங்களை மாற்றிக் கொண்டு, உலா வரும், இந்த புதிய நம்பிக்கைகளால் - 'இந்துயிசம்' போற்றி வரும் பார்ப்பனிய - வர்ணாஸ்ரம சிந்தனையில் மாற்றங்கள் எதுவும் வந்துவிடவில்லை. அந்தப் பாசி படிந்த பழமை - அப்படியே நீடித்துக் கொண்டே இருக்கிறது. வாழ்க்கைக் கலையை வழிகாட்டுவதற்கு புற்றீசல் போல் - புதிய, புதிய 'குருக்கள்' புறப்பட்டு வந்துள்ளார்கள். அவர்கள் இந்த நம்பிக்கைகளை நல்ல வர்த்தகமாக நடத்தி வருகிறார்கள். அரசியல் அதிகார செல்வாக்குள்ள மனிதர்களின் ஆசியோடு - இந்த வியாபாரம் கடை விரித்துள்ளது.*

*இது பற்றி விரிவான கட்டுரையை 'டெகல்கா' வார ஏடு (ஜுன் 30, 2007) வெளியிட்டுள்ளது. அக்கட்டுரைகளின் சில முக்கியப் பகுதியைத் தொகுத்து வழங்குகிறோம்.*

'கடவுள் அவதாரங்களில்' முன்னிலையில் நிற்கும் ஒரு குரு - டெல்லியில் வசதிப்படைத்தவர்கள் வாழும் மெரவுலி - குர்காவோன் பகுதியில் - பண்ணை மாளிகை ஒன்றை எழுப்பி, "ஆன்மிகப்" பணி செய்து வருகிறார். கடந்த மாதம் இவர் சார்பில் - டெல்லி காவல்துறையிடம், ஒரு புகார் வந்தது. காவல்துறையின் 'பொருளாதார'க் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு, இந்தப் புகார் வந்தது. அது என்ன புகார் ? 'குரு'விடம் நெருக்கமாக இடம் பிடிக்க விரும்பிய ஒரு சீடர் - "குரு"விடம் நெருக்கமாக ரூ.35 லட்சம் நன்கொடை வழங்கி, குருவிடம் நெருக்கமானார். இந்த நெருக்கத்தைப் பயன்படுத்தி, குரு - புதிய சீடரிடம் 4 கோடி ரூபாயை 'உடனடி லாபம்' தரும் நிறுவனத்தில் முதலீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அந்த நிறுவனம் - சீடருக்கு மிகவும் நெருக்கமானது. சீடரோ - நான்கு கோடி பணத்தை 'நோட்டுகளாக' வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டார். இது கடந்த மே மாதம் நடந்த சம்பவம் காவல் துறையில் புகார் கொடுத்தாலும் 'குரு'வோ அவரது சீடர்களோ, இந்த விசாரணையை வலியுறுத்த விரும்பவில்லை. அதற்குக் காரணம் இதுதான். இந்த நான்கு கோடி ரூபாய் - தனக்கு எப்படி வந்தது என்ற கேள்விக்கு விசாரணையில் 'குரு' பதில் சொல்லியாக வேண்டும். அந்த 'ஆன்மீகக் குரு' சீடர்களுக்காக நடத்தும் அறிவுரைக் கூட்டங்களுக்கு பெரும் தொகையைக் கட்டணமாக வாங்கி விடுகிறார். நட்சத்திர ஓட்டல்களில் தான் இந்தக் கூட்டங்கள் நடக்கின்றன. படித்த மத்திய தர வர்க்கத்தினர், வசதிப் படைத்தவர்கள் - தங்களின் வர்த்தக வாழ்க்கை முன்னேற்றத்துக்காக, ஆலோசனைகளைக் கேட்டு, இத்தகைய 'ஆன்மீகப்' பேர்வழிகளை நாடி வருகிறார்கள்.

ரவிசங்கர் என்ற பார்ப்பன 'ஆன்மிகக் குரு' ஒரு பேரரசையே நடத்தி வருகிறார். அவரது ஆண்டு வரவு செலவு ரூ.400 கோடியை எட்டுகிறது. வாழும் கலை பயிற்சி மய்யங்கள், உடல்நல மய்யங்களையும் நடத்தி வருகிறார். பெங்களூரிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் அரசுக்கு சொந்தமான மலைப் பகுதியை அரசிடமிருந்து 99 ஆண்டு குத்தகைக்குப் பெற்றுள்ளார்.

அகரம் பாபு என்ற குருவுக்கு - ஆண்டு வரவு செலவு ரூ.350 கோடி. தொழில் - ஆன்மீகப் பேச்சு, டெல்லியில் 'ரிட்ஜ்' பகுதியில் இவரது ஆசிரமம் இருக்கிறது.

கேரளாவைச் சார்ந்த "அம்மா" (அப்படித்தான் அவரது சீடர்கள் அழைக்கிறார்கள்) மாதா அமிர்தானந்த மாயியின் ஆண்டு வரவு செலவு ரூ.400 கோடி. பெரும் தொழில் நிறுவனம் போல் செயல்படும் இவரது நிறுவனம் - நாடு முழுதும் கல்வி நிறுவனங்களையும், மருத்துவமனைகளையும் நடத்தி வருகிறது. உலகம் முழுதுமிருந்தும் பெரும் தொகை நன்கொடைகளாக இவருக்கு குவிகிறது.

பெரும் பணக்காரர்கள், செல்வாக்குள்ள அரசியல் தலைவர்களின் வீடுகளுக்குப் போய் ஆன்மீக ஆலோசனைகளை வழங்கிடும் (ஆன்மீககன்சல்ட்டன்ட்) சுதான்சு மகாராஜ் என்ற 'குரு'வின் ஆண்டு வரவு செலவு ரூ.300 கோடி. அவ்வப்போது விமானங்களில் வெளிநாடுகளுக்குப் பறந்து - அங்கும் பெரும் பணக்காரர்களுக்கு 'ஆன்மீக' விற்பனை செய்து வருகிறார்.

அதேபோல் முராரி பாபு என்று ஒருவர். அரசியல் கட்சிகளின் மாநாடுகள், பேரணிகளுக்கும் இவருக்கு அழைப்பு வருகிறது. அங்கு சிறப்பு ஆன்மீக உரை நிகழ்த்துகிறார். உள்நாட்டு - வெளிநாட்டுப் பணக்காரர்களுக்கும் ஆன்மீக வியாபாரம் செய்து வருகிறார். இவரது ஆண்டு வருமானம் ரூ.150 கோடி.

அரித்துவாரில் - பிரமிக்கத்தக்க ஆசிரமத்தைக் கட்டி எழுப்பியுள்ளார் பாபாராம்தேவ். தன்னுடைய 'புனித கரங்களின் தொடுதலால்' நோய்களைக் குணப்படுத்துவதாகக் கூறும் இவர், மன, உடல்நல மய்யங்களை நடத்தி வருகிறார். அவரது ஆசிரமத்தின் நுழைவாயிலில் மிகப் பெரிய அறிவிப்பு பலகை ஒன்று தொங்கிக் கொண்டிருக்கிறது. அதில் - அவரது ஆசிரமத்தில் சீடர்களாவதற்கான கட்டணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி உறுப்பினர் கட்டணம் - ரூ.10,000, கவுரவ உறுப்பினருக்கு ரூ.21,000, சிறப்பு உறுப்பினருக்கு ரூ.51,000, ஆயுட்கால உறுப்பினருக்கு ரூ.1 லட்சம், ஒதுக்கீட்டு (Reserved) உறுப்பினருக்கு ரூ.2.51 லட்சம், நிறுவன (Founder) உறுப்பினருக்கு ரூ.5 லட்சம் என்று கட்டணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த பிரதீப் கோஷ், பாபாராம்தேவை 'என்.டி.டி.வி' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நேருக்கு நேர் விவாதித்து, கேள்விகளால் மடக்கினார். பகுத்தறிவாளரின் கேள்விகளைக் கண்டு திக்குமுக்காடினார் பாபாராம்தேவ். "தன்னுடைய வழுக்கைத் தலையில் பாபாவால் முடி முளைக்க வைக்க முடியுமா ?" என்று கேள்வியை முன் வைத்தார். கோஷ் - என்னால் முடியாது என்றார் பாபாராம்தேவ். பகுத்தறிவாளர் கோஷ் - ஆன்மீக மோசடிக்குப் யோகாவை பயன்படுத்துவதை விளக்கி, ஆங்கில நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். புதிய பொருளாதாரக் கொள்கைகளால் பணப்புழக்கமும், பண வீக்கமும் அதிகமானதைத் தொடர்ந்து, இந்த 'ஆன்மிகக் குருக்கள்' - அதன் பயனை அனுபவித்து வருகிறார்கள்" என்று கூறுகிறார் கோஷ்.

"பெரும் தொழில் நிறுவனங்கள் - தங்கள் உற்பத்திப் பொருள்களின் தரத்தை மட்டுமே நம்பி சந்தையில் இறங்கினால், இன்றைய போட்டி சந்தையில் வெற்றி பெற முடியுமா ? நிச்சயம் முடியாது. அதற்கான விளம்பரமும், திட்டமிடுதலும் அவசியம் தேவையாகிறது. இந்த வியாபார யுக்தியில் இந்த 'ஆன்மிகக் குரு'க்களும் கைதேர்ந்தவர்கள் தான்" என்கிறார் கோஷ்.

பாபாராம்தேவ் - உத்தரகாண்ட் மற்றும் ம.பி. மாநிலங்களில் இரண்டு மிகப் பெரும் பல்கலைக் கழகங்களை உருவாக்கி வருகிறார். இரண்டு மாநில அரசுகளும், மிகக் குறைந்த விலையில், இவருக்கு நிலங்களை ஒதுக்கித் தந்துள்ளன. அண்மையில் இந்தி தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த பாபாராம்தேவ், "எங்களால் இலவசமாக எதையும் தர முடியாது. அது இயலாதது. நாங்கள் செய்வதற்கு எல்லாம் உரிய கணக்குகள் உண்டு. முறையான தணிக்கை உண்டு" என்று கூறியுள்ளார்.

பாபா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக 3000 பேர் வருகிறார்கள். அவரது மருத்துவ மய்யம் டெல்லியில் இருக்கிறது. மருந்து பொருள்களையும் இவரது நிறுவனம் தயாரிக்கிறது. அதன் விலையோ மிக மிக அதிகம். இத்தனைக்கும் இவரது நிறுவனத்துக்கு வருமான வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகக் குறுகிய ஆண்டுகளிலேயே பெரும் பணக்கார நிறுவனமாக பாபாவின் 'திவ்ய யோக மந்திர்' வளர்ந்துள்ளது என்று அண்மையில் வருமான வரித்துறை அறிவித்துள்ளது. அண்மையில் டெல்லியில் வருமான வரித் துறை நடத்திய சோதனையில் அதிர்ச்சியான தகவல் வெளிவந்தது. நகரின் முக்கியப் பகுதிகளில் 19.55 ஏக்கர் நிலத்தை, இத்தகைய 'ஆன்மீக குருக்கள்' சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். இவற்றின் மதிப்பு ரூ.1900 கோடி.

'ஆசிதரம்ஜி அறக்கட்டளை' ரூ.2.15 கோடிக்கு வரி ஏய்ப்பு செய்துள்ளது என்றும், ரோமன் கத்தோலிக்க திருச்சபை ரூ.1 கோடி வருமான வரியை கட்டவில்லை என்றும், டெல்லி வருமான வரித்துறை அதிகாரி அசோக்சிங் கூறியுள்ளார். டெல்லியின் தெற்குப் பகுதிகளில் உள்ள பண்ணை வீடுகளில் - இந்த "ஆன்மீகக் குருக்கள்" ஆன்மீக உரை நிகழ்த்துகிறார்கள். வெள்ளை உடையுடன் உரை கேட்க வரும் சீடர்கள் ஒவ்வொருவரிடமும் வாங்கப்படும் நுழைவுக் கட்டணம் மட்டும் ரூ.5000. சைவ சாப்பாட்டுடன் ஒரு மணி நேரம் மட்டுமே உரை.

பெங்களூருக்கு அருகே குன்றுப் பகுதியில் ரவிசங்கர் நிறுவியுள்ள ஆசிரமத்தில், ஹெலிகாப்டர் இறங்குதளம், செயற்கை ஏரி, புத்தக விற்பனை மய்யங்கள், கணினி மய்யங்கள், குடியிருப்புகள், செயற்கைக் கோள் வானொலி மய்யம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. 'வேத கணிதம்' கற்பிக்க பல்கலைக்கழகம் ஒன்றை தொடங்கவும் திட்டமிட்டுள்ளார். ஆண்டுதோறும் இங்கே நடக்கும் ஆன்மீகத் திருவிழாவுக்கு நுழைவு கட்டணம் ரூ5000. இந்த ஆண்டு, இந்த நுழைவுக் கட்டணத்தை செலுத்தி, விழாவில் பங்கேற்றோர் 5,50,000 பேர்; அவ்வளவு பெரிய வசூல்! "எங்களது ஆன்மீகம் பெரும் தொழில் நிறுவனங்களைப் போல்தான் - அமைப்பு ரீதியாக பரப்பப்படுகிறது" என்று

(4 ஆம் பக்கம்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.07.2007**

# உலகத் தலைவர் பெரியார்(!)?

**– புதியவன் –**

ஒருவர் உலகத் தலைவர் ஆக வேண்டுமெனில்... போர் ஆற்றலால், படையெடுப்பால் - தன் பக்கமும் எதிரிகள் பக்கமும் ஏராளமான உயிர்களைப் பலி கொடுத்து - பெரும் படையைக் கொண்ட படைதலைவனோ, படையாற்றல் மிக்க அரசுத் தலைவனோ - சோழப் பேரரசன் இராசேந்திரனைப் போல, அலெக்சாண்டர், நெப்போலியன், இட்லர் போல - ஏன் - பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே இப்பூவுலகில் 'அவதாரம்' எடுத்து, பயங்கரப் போர்களை நடத்தும் புஷ் போல - மேலும் மேலும் மக்களை அழித்து, நாடுகளைப் பிடித்து யாரேனும் ஒருவர் வருங்காலத்தில் உலகத் தலைவர் ஆனாலும் ஆகலாம்! கற்பனைக்காவது பொருந்துகிறது.

ஒரு தத்துவத் தலைவர் உலகத் தலைவர் ஆவது இயலுமோ?

பெரியார் - தமிழ் நாட்டை அல்லது இந்தியாவை - அதன் மக்களை, அவர்களது வாழ்முறையை, உளவியலை - நிலவும் சிக்கல்களை, இழிவுகளை, கொடுமைகளை கண்டுணர்ந்து, தனது நீண்ட நெடிய அனுபவத்தால், நுண்ணறிவால், உடன் கலந்த உறவாடலால் - அவற்றுக்கான காரணங்களை ஆய்ந்தறிந்து, உய்த்துணர்ந்து - அவற்றைப் போக்கவும், உழைக்கும், ஒடுக்கப்பட்ட, கிராமப்புற மக்களை உயர்த்தவும், அவர்கள் தங்களையும், தங்கள் உரிமையையும் உணர்வான அறிவைப் பெறவும் - இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் தேவையான, பொருத்தமான தீர்வுகளைச் சொன்னவர்; செயல்படுத்தியவர்.

அவர் பேசிய பகுத்தறிவை உலகின் பல நாடுகளில், பல அறிஞர்கள் பேசியிருக்கிறார்கள்.

அவர் விரும்பிய பொதுவுடைமை பல நாட்டில் மலர்ந்துள்ளது; உலகத்தில் ஏராளமானோர் விரும்புகிறார்கள்.

அவர் பேணிய மனித நேயம் உலகம் முழுதும் பேணப்படுகிறது; மக்களை மடையர்களாக்கும் மதங்களும் பேணுகின்றன.

அவர் உயர்த்திப் பிடித்த பாலியல் நீதி - பெண்ணுரிமை - ஆதிக்க தனியுடைமை முதலாளித்துவ நாடுகளிலும், அடிமைத்தளையிலிருந்து தட்டுத் தடுமாறி எழுந்து கொண்டிருக்கும் ஆப்ரிக்க நாடுகளிலும், புத்துலகை, புத்தெழுச்சியை இந்நூற்றாண்டில் உண்டாக்கும் தென் அமெரிக்க நாடுகளிலும், இயல்பாக சோசலிச நாடுகளிலும் முழங்கப்படுகின்றன. முழு வீச்சில் எழுச்சி பெற்றுள்ளன.

இவற்றை மட்டும் வைத்தா பெரியாரைப் போற்றுகிறோம்? பின்பற்றுகிறோம்?

இல்லை! இல்லவே இல்லை!

உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் மூலதன முதலாளிகளைவிட - நோகாமல், நுணங்காமல் உழைக்கும் மக்களைச் சுரண்டும் பிறவி முதலாளிகளை அவர்கள் உருவாக்கிய சூழ்ச்சிப் பொறியான பார்ப்பனிய சிந்தனைகளை - எல்லா நச்சுகளுக்கும் மூல ஊற்றான பார்ப்பனர்களை, சுரண்டலுக்கு தத்துவ அங்கீகாரம் அளித்துள்ள இந்து மதத்தை, வேதங்களை, புராணங்களை, இதிகாசங்களை - இந்த சூழ்ச்சி விளக்கின் பால் பாமரரை ஈர்க்கும் கல் முதலாளிகளை - இந்த சுரண்டல்களுக்கு சட்ட அங்கீகாரம் அளித்துள்ள இந்தியா என்ற செயற்கையான நாட்டமைப்பை - தமிழர்களின் கலை, இலக்கியம், கலாச்சாரம், சமய இயல் எல்லாவற்றிலும் மனுதர்மம் நுழைய வழி அமைக்க தினிக்கப்படும் இந்தியை - அடையாளங்காட்டியதில், அம்பலப்படுத்தியதில், அழிக்கும் முயற்சிகளில் அல்லவா பெரியார் தனித்து நிற்கிறார்! நமக்குத் தலைவராகிறார்!

அவர் எதிர்த்த இவையெல்லாம் நம் தமிழ்நாட்டில் அல்லது தென்னாட்டில் - மேலும் விரித்தால் இந்தியாவில் நிலவும், நிகழும் தீமைகள் அல்லவா?

**அவர் எப்படி உலகத் தலைவர் ஆவது?**

தங்கள் சொந்த ஜெர்மன் நாட்டையும், வெளியேறி வாழ்ந்த பல அய்ரோப்பிய நாடுகளையும் பட்டறிந்தும், உலகின் பல சிந்தனைகளைப் படித்தறிந்தும் மார்க்சிய மூலவர்கள் விஞ்ஞான பூர்வமாக படைத்த தத்துவங்கள்கூட - லெனினால் ரஷ்யாவில் - மாவோவால் செஞ்சீனத்தில் - வியட்நாமில், கியூபாவில் ... அந்தந்த நாட்டின் புவியியல், உளவியல், உற்பத்தி முறைகளுக்கேற்ப, அவ்வப்போது நிலவிய உலக, அரசியல் சூழல்களுக்கேற்ப தகவமைத்து, மாற்றித்தானே பயன்படுத்தப்பட்டன! பயன்படுத்த முடிந்தன!

ஏன்? உலகம் முழுவதும் பரவியுள்ள மதங்களில்கூட - உயிர்களை நேசித்த பவுத்தம் குளிர் மிகுந்த பனிமலை 'லடாக்' பகுதியில் மாமிச உணவுக்கு இசைகிறதே!

சூரியனே மறையாமல் ஒளிரும் பல மாதங்களைப் பகலாகவே கொண்ட துருவ நாடுகளில் பகலில் உண்ணாத ரம்ஜான் நோன்பை அங்கு முஸ்லீம்கள் வாழ்ந்தால் நோற்க முடியாதே!

கடல் தாண்டினால் 'மதப் பிரஷ்டம்' என்ற இந்துமதக் கட்டளையை பெரும் சம்பளத்துக்காக நாக்கில் நீர் வடிய அமெரிக்க, அய்ரோப்பிய நாடுகளுக்குப் பறக்கும் தீவிர இந்துக்கள், அங்கு போயும் பூணூலையும், சாதி குல கோத்திரங்களையும்விட ஒப்பாத 'பிராமணோத்தமர்கள்' பின்பற்ற முடியுமா? பணத்தைக் கொட்டி பளிங்குக் கற்களால் கோவிலைக் கட்டினாலும் சிவாச்சாரிகளும், பட்டர்களும் தங்கள் ஆச்சாரங்களுக்குத் தோஷம் வாராமல் அர்ச்சனை செய்ய அங்கு போகத்தான் முடியுமா?

விளக்கெண்ணெய் விளக்கங்கள் சொல்லும் மதங்களே உலகப் பட்டம் பெற இத்தனைச் சிக்கல்!

அப்புறம், தத்துவங்கள் எப்படி உலகளாவி நிற்க முடியும்? பெரியார் எப்படி 'உலகத் தலைவர்' ஆக முடியும்?

ஆக முடியாது என்கிறீர்களா? ஆக்க முடியும் என்று சாதித்துக் காட்டியுள்ளார் 'தமிழர் தலைவர்(!?)' 'ஆசிரியர்' டாக்டர் கி. வீரமணி அவர்கள்!

எப்படி என்கிறீர்களா?

'உலகத் தலைவர் பெரியார் வாழ்க்கை வரலாறு பாகம் 2' என்ற நூலை எழுதித்தான்!

---

*'உலகத் தலைவர் பெரியார் வாழ்க்கை வரலாறு' என்ற தலைப்பில் தி.க. தலைவர் கி.வீரமணி ஒரு நூலை வெளியிட்டுள்ளார். சாமி. சிதம்பரனார் எழுதிய ''தமிழர் தலைவர்'' வரலாற்று நூலின் இரண்டாம் பாகம் என்ற அறிவிப்புடன் வெளிவந்துள்ள இந்த நூல் பற்றி – தோழர் புதியவன் எழுப்பும் கேள்விகளை தமிழர்களின் சிந்தனைக்கு வைக்கிறோம்.*

---

அது என்ன பாகம் - 2 என்கிறீர்களா?

1939 ஆம் ஆண்டு வரையிலான பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை சாமி சிதம்பரனார் எழுதிய நூல் 'தமிழர் தலைவர்'. (சாமி. சிதம்பரனார் தமிழ்ப் புலவர்; தமிழ் அறிஞர். எனவே தான் இந்த 'தமிழர் தலைவர்' என்ற தலைப்பு - ஒரு வேளை குத்தூசி குருசாமியோ, அழகிரிசாமியோ, பேராசிரியர் ந. இராமநாதனோ எழுதியிருந்தால் சமூகப் போராளி - சமத்துவப் போராளி - புரட்சியாளர் - சிந்தனையாளர் - என்ற தலைப்புகளில் ஏதேனும் ஒன்று இருந்திருக்க வாய்ப்புண்டு.)

அதன் தொடர்ச்சியான நூலின் தலைப்புதான் 'உலகத் தலைவர் பெரியார் - பாகம் 2'...

அதெப்படி?

ஒன்று, 'தமிழர் தலைவர் பாகம் 2' ஆக இருந்திருக்க வேண்டும். அல்லது 'உலகத் தலைவர் பாகம் 1' ஆக இருந்திருக்க வேண்டும். அல்லது பொருத்தமான காரணம் வேறெதாவது இருக்க வேண்டும்! காரணம்? இருக்கிறது!

இரண்டாம் பாகத்தை எழுதியவரும், தமிழர் தலைவர்; நூலின் தலைப்பும் தமிழர் தலைவர் என்றிருந்தால் குழப்பங்கள் ஏற்படலாம் என்ற எச்சரிக்கை உணர்வுதான் பெரியாருக்கு உலகத் தலைவராக பதவி உயர்வைப் பெற்றுத் தந்துள்ளது!

இந்தப் பதவி உயர்வுக்கான காரணங்கள் (சப்பை கட்டுகள் என்று சொல்லலாம்) நூலின் முன்னுரையிலேயே காணக் கிடக்கின்றன.

1) அய்.நா. பண்பாட்டு மன்றம் (யுனெஸ்கோ) கொடுத்த விருது. (மன்னிக்க வேண்டும்! முன்னுரையில் உள்ள முதல்வர் கலைஞரால் வழங்கப்பட்ட என்ற சொல்லை நாமும் சேர்த்தே சொல்லிவிடுகிறோம்! வீணாக கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்திய குற்றம் நம் மீது விழாமல் இருக்கட்டும்)

2) சிகாகோவிலும், லண்டனிலும் பெரியார் பன்னாட்டு மையம் தொடங்கியுள்ளமை.

3) சிங்கப்பூர், மலேசிய நாட்டு அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எழுத்துச் சீர்திருத்தம் - சுயமரியாதைத் திருமணம்.

4) மண்டைச் சுரப்பை 'உலகு' தொழும் - என்ற பாரதிதாசனின் வரிகள்.

கொஞ்சம் - கொஞ்சமோ கொஞ்சம் - அறிவைப் பயன்படுத்தி இதை அலசுவோமே! எதையும் உன் சொந்த அறிவால் ஆராயாமல் ஏற்காதே என்று சொன்ன பெரியார் குறித்த செய்திகள் அல்லவா இவை? ஒவ்வொன்றாகப் பார்ப்போம்!

1) விருது வழங்கிய அய்.நா.வின் உலகப் பண்பாட்டு மையம் அளித்த விளக்கக் குறிப்பு (citation) - 'தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்றுதான் கூறுகிறது - 'உலகின் சாக்ரடீஸ்' என்று அல்ல! ஒரு இயக்கத்துக்கு உலக நாடுகளில் கிளைகள் இருப்பதாலேயே உலகத் தலைவர் என்று கூறிட முடியுமா?

2) சிகாகோ, லண்டன் ஆகிய இரண்டு ஊர்களில் சில உறுப்பினர்களைக் கொண்ட கிளைகளுக்காக உலகத் தலைவர் பட்டம் எனில் - சாயிபாபா, ரஜ்னீஷ், பால யோகி, அமிர்தானந்தமாயி, ஆர்.எஸ்.எஸ். ஹெக்டேவர் - ஏன், நம்ம ''இரட்டை ஆயுள்'' பிரேமானந்தா எல்லோருக்குமே உலகப் பெருந்தலைவர் ஆவதற்கு கூடுதல் வாய்ப்புகள் உண்டே!

3) மலேசிய, சிங்கப்பூர் நாட்டு அரசுகள் ஏற்றுக் கொண்ட எழுத்துச் சீர்திருத்தம் தமிழுக்கு மட்டும் தானே! உலக மொழிகள் அனைத்துக்கும் அல்லவே!

சுயமரியாதைத் திருமணத்தைப் பதிவு செய்ய - அரசின் பதிவு அலுவலகங்களைத் தவிர - மாதாகோவில், மசூதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் போல - அங்குள்ள மலேசிய திராவிடர் கழக கிளைகளுக்கு வழங்கியுள்ள அங்கீகாரம் தானே!

4) மண்டைச் சுரப்பை உலகு தொழும் என்ற பாடல் வரி மட்டுமே உலகத் தலைவருக்குப் போதும் எனில் 'உலகம் சுற்றும் வாலிபன்' என்ற திரைப்படத் தலைப்பு, எம்.ஜி. ஆரை உலகத் தலைவர் பட்டத்துக்கு தகுதிபடுத்துமே!

ஒரு காலத்தில், சின்ன அண்ணாமலை நடிகர் சிவாஜி கணேசனுக்கு, அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றம் தொடங்கியதும் முசிறிப்புத்தன், - அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றம் தொடங்கினார்.

அதுகூட தனது தலைவரை உயர்த்திக் காட்டும் நோக்கத்தோடு தான்! தனக்கு அந்த பட்டத்தின் மேல் உள்ள ஆசையால் அல்ல! ஆனால், இங்கோ 'தமிழர் தலைவர்' பட்டத்தைப் போட்டியில்லாமல் தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமே பெரியார் உலகத்தலைவர் ஆக்கப்பட்டிருக்கிறார். பெரியாரை 'உலகத் தலைவராக்க' நூல் ஆசிரியர் கி. வீரமணி முன் வைக்கும் வாதங்கள் - அப்படியே அவருக்கும் பொருந்திவிடும்!

'வாழ்வியல் சிந்தனைகள்' நூல் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் படிக்கப்படுவதாலும், தோழர் வீரமணி அவர்களின் படம் மற்றும் 'விடுதலை'யில் வெளிவரும் அவரது உரைகள் இணைய தளத்தில் வருவதால் உலகம் முழுவதும் பார்க்கப்படுவதாலும் -

அடிக்கடி, வீரமணி உலக நாடுகள் சிலவற்றுக்கு பயணம் செய்வதாலும், 'தமிழர்தலைவர்' டாக்டர் கி.வீரமணி அவர்களுக்கு வருங்காலத்தில் 'உலகத் தலைவர்' பட்டம் வழங்கவும், வாய்ப்புகள் உண்டு. தற்போதைய நிலவரப்படி 'உலகத் தலைவர்' பெரியார். அப்போது 'பேரண்டத் தலைவர்', பிரபஞ்சத் தலைவர்' என பதவி உயர்வு பெற ஒளிமயமான வாய்ப்புகள் உள்ளமை நமது ஊனக் கண்களுக்கு இப்போதே தென்படுகிறது!

அய்யோ! கொடுமையே! தலைப்புக்கே இவ்வளவு நீண்ட அறுப்பா எனும் அலுப்பா? நூலைப் பற்றி ஏதேனும் சொல்லித் தொலைங்களேன் என்ற தவிப்பா?

(3 ஆம் பக்கம்)

# சுற்றுப் பயணங்கள் வரலாறாகிய அதிசயம்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுத் தள்ளுங்கள் ! நூலையும் கொஞ்சம் பார்த்து விடலாம் !

இடையில் ஓர் அன்பான வேண்டுகோள் ! (தடங்கலுக்கு வருந்துகிறோம்)

ஏற்கனவே படித்திருந்தாலும் சரி, இன்னொரு முறை சாமி சிதம்பரனாரின் 'தமிழர் தலைவர்' என்ற 1939 வரையிலான பெரியாரின் வரலாற்று நூலை - வரிவரியாக இல்லாவிட்டாலும் - ஒரு திருப்பு திருப்பிவிட்டு, மேற்கொண்டு இந்த கட்டுரையைத் தொடர்வீர்களாக !

வீரமணி அவர்களின் நூலைப் பற்றி எழுதுவதென்றால் - அவர் எழுதியுள்ள முன்னுரையில் இருந்து தொடங்குவோமே !

'இப்படிப்பட்ட மனித குல மாமேதையின் முழு வாழ்க்கை வரலாறு முழுமையாக, அகிகாரபூர்வமாக தரப்படவில்லையே என்ற பலரது ஏக்கம் நியாயமானது; குற்றச்சாட்டுகள் எங்களால் ஏற்கத்தக்கன என்பதை உணர்ந்தே' (முன்னுரை பக்.5)

அம்பேத்கர் மற்றும் வீரசவர்க்கர் வரலாற்றை எழுதிய தனஞ்செய் கீர் கூட நூல் முழுவதும் பரவலாக அம்பேத்கர் வீரசாவர்க்கரைப் பற்றி விடாமல் எழுதினாரே தவிர சந்தடி சாக்கில் கந்தப்பொடி தூவுவதைப் போல தன்னைப் பற்றிய செய்திகளை இணைக்க முயற்சிக்கவில்லை.

சாமி சிதம்பரனாரின் 'தமிழர் தலைவர்' என்ற பெரியாரின் 1939 வரையிலான 60 ஆண்டுகளுக்கான வரலாறு - 1939லேயே வெளியிடப் பட்டுவிட்டது. அதற்குப் பிறகு - 68 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. பெரியார் மறைந்து கூட 34 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போதுதான் அந்த மனித குல மாமேதையின் முழு வாழ்க்கை வரலாறு - அதுவும் முழுமையாக அல்ல 1940-1949 என்ற 10 ஆண்டு வரலாற்றை மட்டும் - அதிகாரபூர்வமாக - ஆம் ! ஆம் ! அதிகாரபூர்வமாக வெளியிட்டிருக்கிறார்கள். (அதிகாரபூர்வ யோக்யதைகளை பிற்பகுதியில் ஆய்வோம்).

பெரியாரின் முழுமையான வரலாறு உருவாகவில்லையே என்ற பலரது ஏக்கத்தின் நியாயத்தையும், கவலையையும் உணர - டாக்டர் வீரமணிக்கு இத்தனை ஆண்டு காலம் தேவைப்பட்டிருக்கிறது !

இவ்வளவு காலம் கழித்து - இந்தப் பணியைத் தொடங்கியதும்கூட - அவருக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இதை வீரமணியே தனது முன்னுரையில் சுட்டிக்காட்டுகிறார்.

'பல்வேறு பணிச்சுமை அழுத்தங்களுக்கிடையே இந்த பாரத்தையும் சுமக்கத் துணிந்தோம்' (அச்சச்சோ ! பாவம் ! பாவம் !) என்று குறிப்பிட்டுள்ளார். இதைப் படித்தவுடன் பெரியார் திடலில் அடிக்கடி நடக்கும் கிறித்துவ நற்செய்தி, எழுப்புதல், அற்புத சுகமளிக்கும் வெளிப்பாட்டு, பிரார்த்தனை அல்லோலோயா கூட்டங்களில் கேட்ட "கஷ்டப்பட்டு பாரம் சுமப்பவர்களே !" என்ற வரிகள் வேறு நம் நினைவுக்கு வந்து தொந்தரவு செய்கின்றன. !

ஆனால், 'உலகத் தலைவர் பெரியார் பாகம் - 2' அய்ப் படித்தவுடன் 'தமிழர் தலைவர்' இவ்வளவு கஷ்டப்பட்டு பாரம் சுமந்திருக்க வேண்டியதில்லை என்றே நமக்குப்பட்டது.

ஏனெனில், 'விடுதலை' நாளேட்டில் வெளியான பெரியார் குறித்த செய்திகளை நாள் வரிசைப்படி தொகுத்து, 'பெரியார் வாழ்க்கை வரலாறு' என்ற பெயரால் அந்த தலைப்பில் "பாரமான பெரும்பணியை" ஏற்கனவே கவிஞர் கருணானந்தம் அவர்கள் செய்து முடித்து விட்டார்கள். நாள் வரிசைப்படி - நிகழ்ச்சிகளைத் தொகுப்பதா வரலாறு ?

இதற்காகவா நீண்ட நெடிய 68 ஆண்டுகள் காத்துக் கிடந்தோம் !

ஒரு வரலாறு எப்படி எழுதப்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்ளத்தான் சாமி சிதம்பரனாரின் 'தமிழர் தலைவர்' வரலாற்று நூலை மீண்டும் ஒருமுறை புரட்டச் சொன்னோம் ! ஒப்பிட்டுப் பார்க்க ஓரளவாவது பயன்படுமே என்று ! 'உலகத் தலைவர்' வரலாற்றில் பெரியாரின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் - வரலாறுகளாக்கப்பட்ட 'அதிசயம்' - நடந்து முடிந்திருக்கிறது. அதைகூட விடுவோம்.

வாழ்க்கை வரலாற்று நூல்களில் சிறந்த நூலாக, ஆங்கில இலக்கிய மேதை டாக்டர் ஜான்சனைப்பற்றி - அவரது மாணவர் பாஸ்வெல் எழுதியதைச் சொல்வார்கள். தனது ஆசானைப் பற்றிய வரலாற்றில் தனது பெயரைச் செருகிக் கொள்ள பாஸ்வெல் முயலவில்லை; விரும்பவில்லை.

அம்பேத்கர் மற்றும் வீரசவர்க்கர் வரலாற்றை எழுதிய தனஞ்செய் கீர் கூட நூல் முழுவதும் பரவலாக அம்பேத்கர் வீரசாவர்க்கரைப் பற்றி விடாமல் எழுதினாரே தவிர சந்தடி சாக்கில் கந்தப்பொடி தூவுவதைப் போல தன்னைப் பற்றிய செய்திகளை இணைக்க முயற்சிக்கவில்லை.

ஆனால், இந்த நூலின் முடிவுக் கட்டமான 1949-ல் 16 வயதை மட்டுமே எட்டியிருக்கக் கூடிய 'தமிழர் தலைவர்' பற்றிய குறிப்புகள் சுமார் 20 இடங்களில் தென்படுகின்றன.

அதுவும்...

29.7.1944 அன்று கடலூர் மஞ்சக் குப்பத்தில் பேசிவிட்டு கடிலம் ஆற்றுப் பாலத்தின் மீது ரிக்ஷாவில் சென்றுக் கொண்டிருந்த பெரியார் மீது பாம்பும், செருப்பும் வீசப்பட்ட போதும்...

22.7.1945 அன்று புதுச்சேரி நிகழ்ச்சியொன்று முடிந்து திரும்பிக் கொண்டிருந்த கலைஞரை குற்றுயிரும், கொலையுயிருமாக அடித்து வீசியதாகக் கூறப்படும் நிகழ்ச்சியின் போதும் தானும் (டாக்டர் வீரமணி) உடனிருந்ததாக புதிய வரலாற்றுக் குறிப்புகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(ஓ ! 'தமிழர் தலைவர்' புதிய வரலாறு படைப்பதாக தி.க. மேடைகளில் இதை மனதில் வைத்துக் கொண்டு தான் பேசப்படுகிறதா ? சரி... சரி... !)

இவை மட்டுமே கவிஞர் கருணானந்தத்தின் வரலாற்று நூலுக்கு மேலாக கொடுக்கப்பட்டிருக்கிற கூடுதல் செய்திகள் ! இதைத் தவிர நூலில் வேறு புதிய செய்திகள் உண்டு என்றால், அவை நூலாசிரியர் எழுதியவை அல்ல. முதல் இரண்டு அத்தியாயங்கள் பெரியாரே எழுதியவை ! கடைசி அத்தியாயம் பெரியார் - மணியம்மை திருமணம் என்ற நூலில் உள்ளவை !

அவை போக புதிதாக உள்ளவை பெரியார் பேசிய பேச்சுகளும், பெரியார் எழுதிய தலையங்கங்களும், அறிக்கைகளும் தான். 'விடுதலை'யில் வெளிவந்ததை அப்படியே எடுத்துப் போட்டவைதான். பல்வேறு அழுத்தங்களுக்கிடையே பாரம் சுமந்த கதை இது தான் !

15.11.1946 அன்று சேலம் கல்லூரி தத்துவக் கலைக் கழகத்தின் சார்பில் பெரியார் உரை நிகழ்த்தினார் என்று இந்த நூலில் குறிப்பு வரு கிறது. 'பாரம் சுமந்து' வந்த இந்த வரலாறு - பெரியாரின் வர லாறுகளை - எப்படி தோண்டித் தோண்டி அகழ்ந்து - அள்ளி வீசியிருக்கிறது என்பதற்கு, சில உதாரணங்களைப் பார்ப்போமா !

இந்த நூலின் முடிவுக் கட்டமான 1949-ல் 16 வயதை மட்டுமே எட்டியிருக்கக் கூடிய 'தமிழர் தலைவர்' பற்றிய குறிப்புகள் சுமார் 20 இடங்களில் தென்படுகின்றன.

- "15.11.1946 அன்று சேலம் கல்லூரி தத்துவக் கலைக் கழகத்தின் சார்பில் பெரியார் உரை நிகழ்த்தினார். விழாவுக்கு பிரின்சிபால் அ. இராமசாமி கவுண்டர் எம்.ஏ., எல்.டி., தலைமை தாங்கினார். இவர் நெற்றியில் ஒரு கோடாக நாமம் அணிந்திருப்பார். ஆயினும், தலை சிறந்த இன உணர்வாளராகத் திகழ்ந்தார்" - இப்படி, சேலம் தத்துவக் கல்லூரியில் பெரியார் உரையாற்றினார் என்பதோடு - 'பாரம் சுமந்து' எழுதப்பட்ட 'வரலாறு' முடிந்து விடுகிறது. ஆனால், இந்த உரை தான் 'தத்துவ விளக்கம்' என்ற பெயரில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டு இன்றளவும் பல மறுபதிப்புகளைக் கண்ட சொற்பொழிவு என்பது கூட குறிப்பிடப்படவில்லை.

தலைமை தாங்கிய பிரின்சிபால் இராமசாமி கவுண்டர் ஒற்றை நாமம் போட்டிருந்த இனஉணர்வாளர் என்பதோடு, அவரைப் பற்றிய வரலாறு நூலில் முடிந்துவிட்டது. ஆனால், இதைவிட பெருமைப்படக் கூடிய நிகழ்வுகளும் உண்டு. அவர் ஓர் இன உணர்வாளர் என்பதற்கு மேலாக - 1943 இல் சேலத்தில் கம்பராமாயணம், பெரிய புராணங்களை எரிப்பது, சரியா தவறா என்று அண்ணாவும், நாவலர் சோமசுந்தரபாரதியும், நேருக்கு நேர் வாதாடும் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றவர். இந்த விவாதம் தான் பிறகு 'தீ பரவட்டும்' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. அப்போது - தனது தலைமை உரையில் - கம்பராமாயணம், பெரிய புராணத்தையும் எரிப்பது - ஆரியக் கலைகளைக் கண்டிக்கும் ஒரு போராட்ட முறைதான் என்று பேசினார். அன்னிய துணிகளை எரிப்பதுபோல், அன்னியப் பொருட்களைப் பயன்படுத்துவதைக் கண்டிப்பது போன்ற போராட்டமே இது என்று, நியாயப்படுத்தினார். ஆரிய மொழி இந்தி வந்தால், தமிழ்மொழி கெடும் என்று போராடிய நாவலர் சோமசுந்தர பாரதியார். ஆரியக் கலைப் பரப்பும் இராமாயணத்தால் - தமிழர் கலை சீரழிவதை எதிர்த்துப் போராடாமல், இராமாயணத்தை ஆதரிக்கலாமா என்று நேருக்கு நேர் கேட்டார். பெரியார் கம்பராமாயணத்தைப் படிக்காததால்தான் அதில் ஆபாசம் இருக்கிறது என்கிறார், என்று சோமசுந்தர பாரதியார் பேசியபோது - "நான் கம்பராமாயணத்தைப் படித்தவன்; நான் கூறுகிறேன்; அதிலே பல ஆபாசங்கள் உள்ளன" என்று சோமசுந்தரபாரதியாரின் வாதத்துக்கு தனது தலைமையுரையில் பதிலடி தந்தவர்.

- 16.1.1946 இல்சின்னாளப்பட்டியில் நடந்த, பெரியார் பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் கல் வீச்சு, கலவரங்கள் நடத்ததை நூல் குறிப்பிடுகிறது. ஆனால், அந்தக் கல் வீச்சில் அடிபட்ட இடது கை, இறுதிவரை சிறு ஊனத்துடனே இருந்தது என்று, பெரியாரே பல நேரங்களில் வெளிப்படுத்தியக் கருத்து, பதிவு செய்யப்படவில்லையே !

- 15.9.1946 இல் திருப்பத்தூரில் ஈ.வெ.கி. சம்பத் - சுலோச்சனா திருமணத்தில் பேசிய பெரியார் பெண்கள் அலங்கார பொம்மைகளாக நகை மாட்டும் ஸ்டாண்டுகளாக இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டார். 'திராவிட நாடு' ஏட்டில் இதை வெளியிட்ட அண்ணா, பெரியாரைக் கேலி செய்யும் வகையில் (பெரியார் நகையைக் கண்டித்துப்பேசிய போது) "மணமகள் சுலோச்சனா, பெரியார் அணிந்திருந்த பச்சைக் கல் மோதிரத்தைப் பார்த்து நகைத்தார்" என்று எழுதினார். இதைச் சுட்டிக் காட்டுகிறார் டாக்டர் - தமிழர் தலைவர் வீரமணி. 17.9.1946 இல் ராபின்சன் பூங்காவில் நடந்த தி.மு.க. தொடக்க விழா கூட்டத்தில், "இதயபூர்வமான தலைவர் - இதயத்திலே குடியேறிய தலைவர் - நமக்கெல்லாம் அப்போது நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை, தலைவர் பதவியை, நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம். அந்த பீடத்திலே, நாற்காலியிலே வேறு ஆள்களை அமர்த்தவோ அல்லது நாங்களோ அல்லது நானோ அமரவோ விரும்பவில்லை" என்ற அண்ணா உறுதியளித்துப் பேசியதற்கு (நூலில் - பக்.376) மாறாக கலைஞர் கருணாநிதி பெரியார் உயிரோடிருந்த காலத்திலேயே தலைவர் நாற்காலியில் உட்கார்ந்ததை - அப்போது பலமுறை 'விடுதலை' ஏட்டில் மாய்ந்து மாய்ந்து எழுதியவர். இப்போது மட்டும் ஏன் சுட்டிக் காட்டவில்லை. வீரமணியே தலைவர் நாற்காலியில் உட் கார்ந்து விட்டார் என்பதாலா ?

இந்த லட்சணத்தில் நூலின் முன்னுரையில் சில புதிய வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன !

'இதன் தொடர்ச்சியாக மூன்றாம் பகுதி 1950 முதல் 1963 வரையும், நான்காம் பகுதி 1963 முதல் 1973 வரையும் ஆதாரங்களை முறைப்படி திரட்டி, வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்' என்கிறார் நூலாசிரியர்.

"மலையேறும் மலைப் பான மகத்தான பணிதான் என்றாலும் (ம.. ம... ம... நல்ல அடுக்குமொழி... பொருள்தான் குழப்பம்) வாசக நேயர்களின் உற்சாகமும், ஊக்கமும், அன்பும் நிச்சயம் நமக்கு வெற்றியைத் தேடித் தரும் என்பது உறுதி" என்று நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறார் நூலாசிரியர்.

ஆனால், இவர்கள் இந்த வெளியீட்டில் காட்டிய உற்சாகம், ஊக்கம், அன்பு என்ன ? என்பது நூல் வெளியீடு குறித்து 'விடுதலை'யில் வந்த செய்திகளே நமக்குப் புரிய வைக்கின்றன !

தமிழர் தலைவருக்கு வேன் வழங்கும் விழா பற்றி வண்ணப் படங்கள், பக்கம், பக்கமாக செய்திகள், கட்டுரைகள் எல்லாம் வெளியிட்ட 'விடுதலை' ஏடு அதே நிகழ்வில் நடந்த இந்த 'வரலாற்று நூல்' வெளியீட்டு செய்தியை மட்டும் முக்கியத்துவம் தராமல் விட்டுவிட்டது, ஏன் ? 'பெரியார் வரலாறு' வெளியிடப்படுவதைவிட தனக்கு வேன் வழங்கிப் பாராட்டப்பட்டதுதான் அவர்களுக்கு முக்கியமானதாகிவிட்டது ! இப்படி புதிய வரலாறு படைக்கும் 'புரட்டுகள்' பற்றி - அடுத்த வாரம் தொடர்வோம் !

– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.07.2007

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# சட்டவிரோத ‘அம்மன்’; இடிக்க நீதிமன்றம் உத்தரவு

சென்னை மேற்கு தாம்பரத்திலுள்ள முத்துரங்கம் பூங்காவில், சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட அம்மன் கோயில் விரிவாக்கத்தை இடிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தாம்பரம் நகராட்சிக்கு உத்தரவிட்டது. பூங்காவில் 1975 இல் சிறிய அளவில் கட்டப்பட்ட அம்மன் கோயில் படிப்படியாக 4300 சதுர அடி அளவுக்கு விரிவாகிக் கொண்டே போனது. இதை எதிர்த்து பாபு என்பவர் தொடர்ந்த பொது நல வழக்கு தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி ஜோதிமணி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன் ஆஜராகி வாதாடினார். சட்டவிரோதமாக விரிவாக்கப்பட்டுள்ள கோயில் பகுதிகளை அகற்ற, நகராட்சி உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அரசு வழக்கறிஞரும் கூறினார். முன் அனுமதியின்றி கட்டப்பட்ட பகுதிகளை இடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சாதி ஒழிப்பு விளக்கக் கூட்டத்தில் சாதி மறுப்பு மணவிழா

விழுப்புரம் மந்தக்கரையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 6.7.2007 அன்று தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்ட மேடையிலேயே சாதி மறுப்புத் திருமணம் நடந்தது. விழுப்புரம் வானூர் கிராமத்தைச் சார்ந்த ஜானகிராமன் - லட்சுமி சாதி மறுப்புத் திருமணத்தை, மேடையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உறுதி மொழி கூறி நடத்தி வைத்தார். மணமக்களை வாழ்த்தி - பேராசிரியர் கல்வி மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், லோகு அய்யப்பன் உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். சாதி ஒழிப்புப் பிரச்சாரக் கூட்டத்திலேயே சாதி ஒழிப்புத் திருமணமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## நன்கொடை

‘மேட்டூர் ஹைடெக் ஆஷ் பிரிக்ஸ்’ வர்த்தக நிறுவனத்தை 4.7.2007 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘பட்லூர் நான்கு ரோடு’ பகுதியில் திறந்து வைத்தார். உரிமையாளர்கள் அ. முருகேசன், ஆ. ஐம்புநதி, மு. மகாதேவன் ஆகியோர், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு கழகத் தலைவரிடம் ரூ.3000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

24.6.2007 அன்று காலை கோவை பாரதி மண்டபத்தில் தோழர்கள் தமிழரசன்-யாமினி வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், தியாகு, எழுத்தாளர் பாமரன் வாழ்த்துரை வழங்கினர். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்கு ரூ. 1000 மணமக்கள் சார்பில் கழகத் தலைவரிடம் நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

கொளத்தூர் ஒன்றியம் காவலாண்டியூர் தோழர் தங்கராசு வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழாவில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு சந்தா செலுத்தி விட்டீர்களா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

‘டெகல்கா’வுக்கு அளித்துள்ள பேட்டியில் ரவிசங்கர் ஒப்புக் கொள்கிறார். (கடந்த ஆண்டு - சிறீலங்காவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் சென்று பேசிய ரவிசங்கர், ஈழத் தமிழர் பிரச்சினையைத் தன்னால் தீர்த்து வைக்க முடியும் என்று கூறியதோடு, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை சந்திக்க முயற்சி செய்தார். அரசியல் பிரச்சினையில் ஆன்மீகத் தீர்வுக்கு இடமில்லை என்று கூறி, பிரபாகரன், சந்திக்க மறுத்து விட்டார் - ஆர்)

மராட்டிய மாநிலம் புனேயில் கோரேகான் பகுதியில் ஓசோவின் (ரஜினீஷ்) சர்வதேச தியான மய்யம் - வெகு ஆடம்பரமாக கட்டி எழுப்பப்பட்டுள்ளது. வெள்ளை சலவை கற்களால், அழகிய தோட்டங்களோடு காட்சியளிக்கும் அந்த மய்யம் உல்லாசபுரியாகவும் திகழுகிறது. ஓசோவின் மரணத்துக்குப் பிறகு அவரது ஆன்மீக நிறுவனத்தின் வர்த்தகம் 300 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்கிறார் மய்யத்தின் நிர்வாகி மாசாதனா. ஓசோ மய்யத்தின் நட்சத்திர ஓட்டல்களில் - ஓசோவின் சீடர்கள் வந்து தங்குகிறார்கள். அங்கே நிர்வாண மய்யங்களும் உண்டு.

மீனவர் சமூகத்தில் பிறந்தவர் என்றாலும் கேரளாவின் அமிர்தானந்த மாயி - மீனவர் பிரதிநிதியாகவோ அல்லது மீனவர் சமூகப் பின்னணி கொண்டவராகவோ இல்லை. 33 பள்ளிகள், 12 கோயில்கள், உயர்ந்த வசதிகள் கொண்ட மருத்துவமனை, அமிர்தா தொலைக்காட்சி, நிகர்நிலை பல்கலைக்கழகம் என்று அவரது உடைமைகளின் பட்டியல் நீள்கிறது. இவரது ஆண்டு வரவுசெலவு 175 கோடி. வெளிநாட்டு நிதி பெறுவதில் இந்தியாவிலே இரண்டாவது இடத்தில் இருப்பவர் இவர்தான் என்று உள்துறை அமைச்சகம் கூறுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் மட்டும், இவருக்கு வந்த வெளிநாட்டுப் பணம் ரூ.51.55 கோடி. சில ஆண்டுகளுக்கு முன் கொச்சியில் - இவர் தனது பிறந்த நாளைக் கொண்டாடிய போது, கேரள நாளிதழ்களுக்கு, பெரும் தொகையை அன்பளிப்பாக வழங்கினார். மலையாள நாளேடுகள் ‘‘அம்மா’’வுக்கு பக்கம் பக்கமாக சிறப்பிதழ்களை வெளியிட்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.100 கோடி செலவிட்டார். அமெரிக்காவில் கத்ரினா புயல் வீச்சில் பாதிக்கப்பட்டோருக்கு 10 லட்சம் அமெரிக்க டாலர் நன்கொடை வழங்கினார். இவரது ஆசிரமத்துக்கு அய்.நா. சிறப்பு கவுரம் வழங்கி, தொண்டு நிறுவனமாக அங்கீகரித்துள்ளது. இவர் ஆர்.எஸ்.எஸ். உயர்மட்டத் தலைவர்களோடு நெருக்கமாக இருப்பவர், ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளில் தீவிர ஆர்வம் கொண்டவர்.

கேரளா பகுத்தறிவாளர் யு. கலாநாதன் கூறுகையில் - ‘‘ரூ.1200 கோடி மதிப்புள்ள பேரரசை கட்டி ஆண்டு வருகிறவருக்கு, இத்தகைய உதவிகள் எல்லாம் மிகச் சாதாரணம். அவர் நடத்தும் மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் படிப்பதற்கு வாங்கும் நன்கொடை ரூ.40 லட்சம். முக்கிய பிரமுகர் வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டும் கட்டணச் சலுகை தருகிறார்கள்’’ என்கிறார் கலாநாதன்.

புதுடில்லியில் ‘அரே கிருஷ்ணா, அரே ராமா’ அமைப்புக்கு தனிக் கோயில் இருக்கிறது. பெரிய இடத்தில் - மாளிகை இருக்கிறது. ஆயுள் உறுப்பினருக்கான கட்டணம் ரூ.10,000/-

‘‘நாங்கள் 400 கோயில்களையும் 100 சைவ ஓட்டல்களையும் நடத்துகிறோம்’’ என்கிறார் நிறுவனத்தின் துணைத் தலைவர் விராஜேந்திர நந்தன்தாஸ். தங்களுக்கு பெருமளவில் நன்கொடை தரும் பட்டியலில், நடிகையும், மாநிலங்களவை உறுப்பினருமான ஹேமமாலினி, ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத்தின் மகன் ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

அடுத்தப் பிறவியில் மோட்சம் போவதற்கு - சடங்குகளை வழிபாடுகளை, வலியுறுத்தி வந்த இந்து மதம் - இப்போது, தன்னைத் தலைகீழாக மாற்றிக் கொண்டு வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகக் கூறி வருகிறது. இதற்காக நட்சத்திர ஓட்டல் கலாச்சாரத்துடன் - ‘ஆன்மீகக் குருக்கள்’ பக்தி வர்த்தகச் சந்தைக்கு வந்துள்ளனர். விமானங்களில் பறக்கின்றனர். நட்சத்திர ஓட்டல்களில் ‘ஆன்மீகம்’ பேசப்படுகிறது.

உருமாற்றங்கள் ஏற்பட்டாலும் பார்ப்பனியம் - சாதியம் - மூடநம்பிக்கைகள் என்ற பிற்போக்குக் கொள்கைகளை மட்டும் இந்து மதமோ, நவீன ஆன்மீகமோ கைவிடத் தயாராக இல்லை. பார்ப்பனியம் புதிய ‘அவதாரத்துடன்’ - பவனி வருகிறது.

## திராவிட இயக்க மாவீரர்கள்

எந்தத் தளத்தில் செயல்பட்டாலும், பெரியாரிய அடையாளத்தையே வரித்துக் கொண்டுள்ள ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன் எழுதியுள்ள நூல் ‘‘திராவிட இயக்க மாவீரர்கள்’’ நடேசனார், தியாகராயர், டி.எம். நாயர், பெரியார் உள்ளிட்ட 21 தலைவர்களை - சுருக்கமாக அறிமுகம் செய்கிறது. இந்நூல் - கடந்து வந்த வரலாற்றுப் பாதைகளை இளம் தலைமுறையினருக்கு எளிமையாக எடுத்துரைக்கும் சிறந்த நூல்.

வெளியீடு : அழகிரி பதிப்பகம், சுப்பிரமணியபுரம் - 607 301. கடலூர் மாவட்டம். பக்கம். 120. விலை ரூ.50.

## கழக சார்பில் புதுவையில் ‘நடிகவேள்’ நூற்றாண்டு விழா

தந்தை பெரியாரின் போர்வாள் நடிகவேள் எம்.ஆர். இராதா நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் 14.7.07 சனிக் கிழமை மாலை 6 மணிக்கு பெரியார் திடல், அரியாங்குப்பம், புதுச்சேரியில் நடைபெறுகிறது.

தோழர் இரா. வீரசாமி தலைமை தாங்குகிறார். புதுச்சேரி பெரியார் திராவிடர் கழகத்தலைவர் தோழர் லோகு. அய்யப்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கொளத்தூர் மணி, திருவாரூர் தங்கராசு, இயக்குனர் சீமான் மற்றும் தோழர்கள் சிறப்புரையாற்றுகின்றனர். புதுவை பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

## ‘தமிழன்’ தொலைக்காட்சியில் கழக மாநாட்டு நிகழ்ச்சி

தஞ்சையில் மே 19 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் நடத்திய சாதி ஒழிப்பு மாநாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பை ‘தமிழன்’ தொலைக்காட்சி எதிர்வரும் ஜூலை 15 ஞாயிறு பகல் 11.30 மணியிலிருந்து 12 மணி வரை ஒளிபரப்பாகிறது. இதன் இரண்டாம் பகுதி - அடுத்த ஞாயிறு அன்று (ஜூலை 22-ல்) இதே நேரத்தில் ஒளிப்பரப்பாகிறது.

## வந்த கடிதங்கள்

28.6.07 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ கண்டேன். ‘எந்த சக்தியாலும் எங்களை வீழ்த்த முடியாது. நாங்கள் சாணக்கிய பரம்பரை மார்தட்டுகிறார்கள் பார்ப்பனர்கள்’ என்ற முகப்புக் கட்டுரையின் மூலம் பார்ப்பனர்களின் முகத்திரையைக் கிழி கிழி என கிழித்துள்ளீர்கள். ‘பார்ப்பனர் பிடியில் இந்தியா’ கட்டுரை மூலமும் பார்ப்பனர்களின் தோலுரித்து உண்மை உருவத்தைக் காட்டியுள்ளீர்கள். பாராட்டுகள். வாழ்த்துகள். வெறும் செய்தி ஏடாக இல்லாமல் வாசகர்களின் பகுத்தறிவு கதை, கட்டுரை, கவிதைகளை வெளியிடுங்கள்.

**– தங்க.சங்கரபாண்டியன், சென்னை-103.**

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் ஜூன் 14, 2007 படித்தேன். மகாத்மா புலே குறித்து, தஞ்சை மாநாட்டில் கவிஞர் வெண்ணிலா ஆற்றிய உரையினைப் படித்தேன். புலே அவர்கள் குறித்து, வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த தகவல்கள் நிச்சயம் சமூகத்தில் ஒரு சலனத்தை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன்.

‘ராமன் பாலம்’ குறித்து வெளியான கட்டுரையில், உலக நாடுகளில் பல கால்வாய்கள் உருவாவதற்குத் தடையாக இருந்த மணல் திட்டுகள் அகற்றப்பட்டதை சிறப்பாக விளக்கியிருந்தீர்கள். **– கபிலன், திருச்சி.**

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் எப்படி வந்தது ‘‘ராமன் பாலம்’’ என்ற கட்டுரையில் பல செய்திகளை விளக்கமாகவும், தெளிவாகவும் கூறி உள்ளீர்கள். நாசா வெளியிட்ட படத்தை ஆதாரமாக வைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்பதையும், ‘‘அந்தப் படம் மட்டும் தங்களுடையது என்றும், ஆனால் அது ராமர் கட்டிய பாலம் என்ற கருத்து தங்களுடையது அல்ல என்றும் நாசா தெளிவுபடுத்தியதை சிறப்பாக குறிப்பிட்டுள்ளீர்கள். பாராட்டுக்கள்.

**க.சொ. சிவசுப்பிரமணியன், வடசேரி.**

‘‘புரட்சிப் பெரியார் முழக்கம்’’
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
பேசி: 2451 2857
periyarmulakkam@yahoo.com
‘www.dravidar.org.’

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 13th July 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூலை 19, 2007 புரட்சி 5 முழக்கம் 29 விலை : ரூ.2.50


## உயர்நீதிமன்றத்தில் கழகம் வழக்கு

# அ .ஏ.எ . தேர்வி  தொடர்ந்து அநீரு

*அய்.ஏ.எஸ். தேர்வுகளில் இடஒதுக்கீடுகளில் தொடர்ந்து நிகழும் மோசடிகளை எதிர்த்து கழகம் தொடர்ந்த வழக்கை, உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.*

அகில இந்திய சர்வீசுகளான அய்.ஏ.எஸ். தேர்வுகளில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடுகளில் தொடர்ந்து பார்ப்பன அதிகாரவர்க்கம் மோசடி செய்து வருகிறது.

பொதுப் போட்டியில் தகுதி அடிப்படையில் இடம் பெற வேண்டிய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களை பொதுப் போட்டியில் இடம் பெறச் செய்யாமல், இடஒதுக்கீட்டுக் கோட்டாவின் கீழே தள்ளி விடுகிறார்கள். இதனால், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடங்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது. கடந்த ஆண்டு இதே போல் மோசடி நடந்தது. இதை முன்னாள் அமைச்சர் சரத்யாதவ் அம்பலப்படுத்தி - 'இந்து' நாளேட்டில் கட்டுரை எழுதினார். அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டோர் உச்சநீதி மன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர். ஆனாலும், இந்த மோசடிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதை எதிர்த்து கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநலன் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார். மத்திய தேர்வாணையத் தலைவர், செயலாளர்கள் உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் எம்.எஃ.கான், இதே பிரச்சினைக்காக தொடர்ந்த வழக்கில், தேர்வு முறை தவறு என்றும், மீண்டும் முறையாக தேர்வு செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார். கழகத் தலைவர் சார்பாக தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

2007 மே மாதம் அய்.ஏ.எஸ். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. திறந்த போட்டிக்கான 50.5 சதவீத இடங்களில் தகுதி அடிப்படையில் தேர்வு பெற்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் தரப்பட வேண்டும். அதன் பிறகு தான் தனியே இடஒதுக்கீட்டுக்கான இடங்களை முழுமையாக நிரப்பப்பட வேண்டும். இதன்படி திறந்த போட்டிக்கான 239 இடங்களில் 60 இடங்கள் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு தகுதி அடிப்படையில் தரப்பட்டிருக்க வேண்டும். அப்படி நிரப்பும் போது முன்னேறிய சாதியினருக்கு 154 இடங்கள் மட்டுமே கிடைக்கும். ஆனால், முறைகேடாக திறந்த போட்டியில் தகுதி அடிப்படையில் இடம் பெற வேண்டிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களை இடஒதுக்கீட்டுப் பட்டியலுக்குக் கீழே கொண்டு வந்து விட்டனர். இதன் காரணமாக முன்னேறிய சாதியைச் சார்ந்த தேர்வுக்கு தகுதியில்லாத 60 மாணவர்கள், திறந்த போட்டியில் தேர்வு பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அய்.ஏ.எஸ். தேர்வில் முதலிடத்தைப் பெற்றுள்ள முத்தையா ராஜீரேவு என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து மாணவருக்கும், 11 ஆம் இடத்தைப் பெற்ற சரண் மாலிக் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவருக்கும், 94வது இடத்தைப் பெற்ற குமார் புராராம் என்ற பழங்குடி மாணவருக்கும் திறந்த போட்டியில் இடம் தராமல், இடஒதுக்கீடுப் பட்டியலிலே இடம் தரப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 469, 470, 471வது இடங்களில் தேர்வு பெற்றுள்ள முன்னேறிய சாதியினருக்கு திறந்த போட்டியில் இடம் கிடைத்துள்ளது.

வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது 13.8.90-ல் அரசு பிறப்பித்த ஆணையில் திறந்த போட்டியில் தகுதி அடிப்படையில் தேர்வு பெறும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய இடங்களை, இடஒதுக்கீட்டுக் கோட்டாவின் கீழே கொண்டு வந்து கணக்கு காட்டக் கூடாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உச்சநீதிமன்றமும் இந்த உத்தரவு சரியானதே என்று, 'இந்திரா சகானி' வழக்கில் 16.11.92-ல் உறுதிப்படுத்தியுள்ளது. 1995-லும் (விர்பல்சிங் - சவுகான் வழக்கு), 1996-லும் (ரித்தேஷ் ஆர். ஷா வழக்கு) உச்சநீதிமன்றம் இதே தீர்ப்பையே வழங்கியுள்ளது.

முன்னேறிய சாதியினரின் நலனுக்காகவே இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மத்திய அரசும் சரி, ஒடுக்கப்பட்டோரின் காவலர் என்று கூறிக் கொள்ளும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் சரி, இதில் தலையிட்டு, தவறைத் தடுத்து நிறுத்திட எந்தக் கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை. இது தவிர, நேர்முகத் தேர்வு இடஒதுக்கீட்டுக் கீழே வருவோருக்கு மட்டும் தனியே பிரித்து நடத்தப்படுவதால் இடஒதுக்கீட்டுக் கீழே வருவோரை, தேர்வு நடத்துவோர் அடையாளம் கண்டு கொண்டு, அவர்களிடம் வேற்றுமை பாராட்டும் நிலை உருவாகிறது.

சட்டத்துக்குப் புறம்பாக செயல்படும் தேர்வாணையக் குழு உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வழக்கு முடியும் வரை தேர்ச்சியாளர்களுக்கு பணி நியமனங்கள் வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று வழக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 13.7.2007 அன்று இந்த ரிட் மனுக்கள் - உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.ஷா மற்றும் நீதிபதி ஜோதிமணி அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. கழக வழக்கறிஞர்கள் வி. இளங்கோவன், எம். செந்தில்குமார் மற்றும் எம்.பி. இராசவேலாயுதம் ஆகியோர் மனுக்களை தாக்கல் செய்தனர். கழக வழக்கறிஞர் எஸ். துரைசாமி ஆஜராகி வாதாடினார்.

மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் மத்திய அரசுக்கும், மத்திய தேர்வாணையத்துக்கும் இரண்டு வாரத்துக்குள் பதில் தரக் கோரி, தாக்கீது அனுப்பியுள்ளனர்.

## 'தலித்' மக்களுக்கு துரோகம்!

கடந்த 10 ஆண்டுகளில் - தலித், பழங்குடியினருக்காக தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 11 ஆயிரத்து 380 கோடி ரூபாய் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. தலித் மற்றும் பழங்குடியினருக்கான காலிப் பணி யிடங்களின் ஊதியம் ரூ.32 கோடி பயன்படுத்தப்படாமல், வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாம். தமிழக நிதிநிலை அறிக்கையில் - ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மக்கள் தொகை அடிப்படையில் ரூ.2800 கோடி ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், ஒதுக்கப்பட்டதோ ரூ.1556 கோடி மட்டுமே! கிருஷ்ணகிரியில் கடந்த ஜூலை 11 ஆம் தேதி எஸ்.சி., எஸ்.டி. பட்டியலினத்தவரின் துணைத் திட்டம் குறித்து நடந்த கருத்தரங்கில், மார்க்சிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் டில்லி பாபு மற்றும் கிறிஸ்துதாஸ் காந்தி ஆகியோர் இதைத் தெரிவித்தனர்.

## தமிழ் வழிபாடு தடை நீக்கம்

திருமணம் மற்றும் வாழ்வியல் சடங்குகளை தமிழில் நடத்தக் கூடாது; சமஸ்கிருதத்திலேயே நடத்த வேண்டும் என்ற தர்மபுர ஆதினத்தின் 'சூத்திர' சீடர்கள் - உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். உயர்நீதிமன்றம் இதற்கு விதித்திருந்த இடைக்காலத் தடையை நீக்கி, தமிழில் நடத்த அனுமதி வழங்கியது. தமிழில் நடத்தக் கோரி சக்திவேல் முருகனார் பதில் மனு தாக்கல் செய்திருந்தார். வழக்கறிஞர் ச. செந்தில்நாதன் ஆஜராகி வாதாடினார். நீதிபதி இராம சுப்ரமணியம் - இடைக்காலத் தடையை நீக்கி அறிவித்தார். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் வந்தாலும் இன்னும் பொதுக் கோயில்களுக்குள்ளே 'தலித்' மக்கள் நுழைய முடியவில்லை. இக்கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுதும் மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக விடுதலை சிறுத்தைகள் அமைப்பு அறிவித்துள்ளது.

## ஓய்வு வயது உயர்கிறதாம்!

அரசு பொதுத் துறை நிறுவன ஊழியர்களின் ஓய்வு வயதை மத்திய அரசு 58லிருந்து 60 ஆக உயர்த்துகிறது. இதனால் - இளைஞர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்படுகிறது.

## 'ரா'வை அம்பலமாக்கும் நூலுக்குத் தடை?

இந்திய உளவுத் துறையான 'ரா' அமைப்பை கடுமையாக விமர்சித்து எழுதப்பட்டுள்ள புத்தகத்தை தடை செய்வது குறித்தும், அதை எழுதியவர் மீது அரசு அலுவலக ரகசியங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசு தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

'ரா' அமைப்பில் பணியாற்றி ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் வி.கே.சிங் அண்மையில் 'இந்தியாஸ் எக்ஸ்டர்னல் இன்டலிஜன்ஸ்' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டிருந்தார். இந்திய ராணுவத்தில் உளவுப் பிரிவில் பணியாற்றி வந்த சிங், கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 'ரா' அமைப்புடன் இணைந்து பணியாற்றினார். இதில் கிடைத்த அனுபவத்தை புத்தகமாக எழுதியிருந்தார். இதில் 'ரா' அமைப்பு செயல்படும் விதம் மற்றும் அதன் உயர் அதிகாரிகள் பலரை பற்றி கடுமையாக விமர்சித்திருந்தார்.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ., ஆண்டு தோறும் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை தாக்கல் செய்கிறது. ஆனால், இந்திய நாடாளுமன்றத்துக்கு எவ்வித அறிக்கையும் 'ரா' அமைப்பு தாக்கல் செய்வதில்லை. இது ஏன் என தனது புத்தகத்தில் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். 'ரா' அமைப்புக்கு தரம் குறைந்த கருவிகள் வாங்கியதில் மேல் அதிகாரிகளின் ஊழல், வெளிநாட்டுக்கு மேற்கொள்ளும் சொந்த பயணங்களை உளவு பார்க்கும் பணிக்காக சென்றதாக மேல் அதிகாரிகள் பொய்க் கணக்கு காட்டும் முறைகள், வெளிநாடுகளில் படிக்கும் தங்களது பிள்ளைகளின் செலவுகளை அன்னிய ஏஜென்ட்களுக்கு செலவிட்டதாக உயர் அதிகாரிகள் எழுதும் போலிக் கணக்கு ஆகியவற்றை தனது புத்தகத்தில் புட்டு புட்டு வைத்துள்ளார். 'ரா' அமைப்பின் செலவுகளை இந்திய கணக்கு தணிக்கை துறை ஆய்வு செய்வதில்லை.

இதை வைத்து ஏகப்பட்ட கணக்கு மோசடிகள் அங்கு அரங்கேறி வருவதாக இந்த புத்தகத்தில் சிங் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்தப் புத்தகத்தை தடை செய்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. புத்தகத்தை எழுதிய வி.கே.சிங் மீது அலுவலக ரகசியங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் யோசித்து வருவதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

*தலையங்கம்*

## இதுதான் தமிழின உணர்வா?

*'பயங்கரவாதம்' என்ற பூச்சாண்டியைக் காட்டி காவல் துறை மிரட்டுகிறது. ஆட்சியாளர்களும், மக்களின் பிரச்சினையிலிருந்து திசை திருப்ப 'பயங்கரவாத எதிர்ப்பாளர்கள்' என்ற அரிதாரத்தைப் பூசிக் கொண்டு காவல்துறையின் அடக்கு முறைக்கு பச்சைக்கொடி காட்டுகிறார்கள்.*

*தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தமிழின இளைஞர்கள் - இப்போது காவல் துறையின் 'வேட்டை'க்கு பலியாகி வருகிறார்கள். இவர்கள் தீவிரவாதிகளாம்! அப்படி என்ன தமிழ்நாட்டில் நடந்து விட்டது? அசாமைப்போல், நாகலாந்தைப் போல் பல வடகிழக்கு மாநிலங்களில் நடப்பதைப் போல், தீவிரவாத நடவடிக்கைகள் நடக்கிறதா? எதுவுமே இல்லை. ஓட்டு வாங்கும் அரசியல்வாதிகள்தான் வெடிகுண்டுகளையும், ரிமோட் குண்டுகளையும் தூக்கிக் கொண்டு திரிகிறார்கள். அதுவும், உட்கட்சிப் பிரச்சினைகளுக்காக! 15 ஆண்டுகள், 10 ஆண்டுகள் தலைமறைவாக இருந்தவர்கள் என்று கூறி, அடக்குமுறை சட்டத்தைத் தட்டி எழுப்பி, தமிழ் இளைஞர்களை சிறையில் தள்ளுகிறது, தி.மு.க. ஆட்சி! 'தமிழின உணர்வு' என்பது இது தானா?*

*ஜெயலலிதா ஆட்சியில் 'வேட்டையாடிய' அதே அதிகாரிகளைத் தேடிப் பிடித்து தி.மு.க. ஆட்சி, தமிழின இளைஞர்களை வேட்டையாடச் சொல்கிறது. இதிலே மட்டும் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கைகோர்த்து நிற்கின்றன!*

*தர்மபுரியிலே இப்படித்தான் தமிழ் இளைஞர்களைப் பிடித்து 'பொடா'வில் சுமார் இரண்டு ஆண்டுகாலம் ஜெயலலிதா ஆட்சி சிறையில் தள்ளியது. அதே கதை 'தமிழின' ஆட்சியிலும் தொடர்வது வெட்கக் கேடு. மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன. இல்லாத பயங்கரவாதத்தை அரசே உருவாக்குவது, தேவை தானா? வாழ்க்கையைத் தேடிப் போன இளைஞர்களை 'பயங்கரவாதிகளாக்க' ஏன் துடிக்க வேண்டும்?*

*தமிழ் இளைஞர்களின் வாழ்வை சீர்குலைப்பது தான் தமிழின உணர்வா?*

*தமிழக அரசின் இந்த அடக்கு முறைகளை எதிர்த்து வலிமையான கண்டனக் குரல் வெடிக்க வேண்டும்!*

## அப்பா – மகன்

**மகன் :** தனியார் பொறியியல் கல்லூரிகளில் 65 சதவீத இடங்களை அரசே எடுத்துக் கொள்ளும் - தமிழக அரசின் நியாயமான சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் முடக்கிவிட்டதே, அப்பா!

**அப்பா :** ஆம், மகனே! இனி தனியார் கல்லூரிகளுக்கு கடிவாளமே கிடையாது!

**மகன் :** தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசியல் நிகழ்வுக்கும் அறிக்கை விடும் தி.க. தலைவர் கி.வீரமணி, அரசின் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது பற்றி வாய் திறக்காதது ஏன், அப்பா? அவரது நிறுவனமே பொறியியல் கல்லூரிகளை நடத்துவதாலா?

**அப்பா :** ஏன் மகனே, என்னை வம்பில் மாட்டி விடுகிறாய்?

# உலகத் தலைவர் பெரியார்!? (2)

# 'அதிகாரபூர்வ' வரலாறு, இப்படியா?

**– புதியவன் –**

'தமிழர் தலைவர்' எனும் பெயரில் பெரியார் வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார், அந்நூலின் முன்னுரையில்,

"இது சிறிதும் தவறில்லாததும், சுருக்கமாக எல்லா நிகழ்ச்சிகளையும் ஏறக்குறைய எடுத்துக்காட்டுவதுமாகிய ஒரு **உண்மை வரலாறாயிற்று**" எனக் குறித்துள்ளார்.

இந்த வரலாறு எழுதப்பட்ட காலத்தில் 1938 இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று சிறையில் பெரியார் இருந்தார். பெரியாரிடமே அதனைக் காட்டி, அவரது ஒப்புதல் பெறுவதற்காகவே நூல் அச்சிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பெரியார் விடுதலையான பிறகு பெரியாரிடம் படித்துக் காட்டி பல திருத்தங்கள் செய்யப்பட்டன. தவறாக எழுதிய பல செய்திகளை பெரியார் திருத்தினார். புதிதாகப் பல செய்திகளும் சேர்க்கப்பட்டன. இதுதான் சாமி சிதம்பரனார் உருவாக்கியத் தமிழர் தலைவரின் தனிச்சிறப்பு. ஆனால் திருவாளர் வீரமணியின் 'உலகப் பெரியார் வரலாறு...?'

விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் வரலாறுகளைத் திரிப்பது – வரலாற்றுத் துரோகமாகிவிடும். 'துரோகம்' என்ற சொல் – திருவாளர் வீரமணிக்கு மிகவும் பிடித்தமானது; ஒவ்வொரு முறையும் தனது அமைப்புக்குள், கொள்கைக் குரல் கொடுத்தோருக்கு அவர் சூட்டி வரும் பட்டம் 'துரோகிகள்' என்பதாகும். அவர்தான் இப்போது வரலாற்றுக்குத் துரோகமிழைக்கிறார். அப்போதெல்லாம், அவர் வெளியிடுகிற அறிக்கையின் தலைப்பு என்ன தெரியுமா? "ஊன்றிப் படித்து உண்மையை உணருங்கள்" என்பதாகும். அறிக்கைகளையே ஊன்றிப் படிக்க உத்தரவிட்ட ஒரு தலைவர், வரலாற்றையே எழுதும்போது ஊன்றிப் படிக்கத்தானே வேண்டும்! அப்படி ஊன்றிப் படிக்கும்போது – சார்புநிலையையும் சுயமுரண்பாட்டையும் காணும்போது அதைச் சுட்டிக் காட்டாமல் எப்படி இருக்க முடியும்?

அதுவும் அவ்வளவு எளிதாக எழுதப்பட்ட வரலாறு அல்ல இது! பல்வேறு 'பணிச்சுமை – அழுத்தங்களுக்கிடையே – இந்த பாரத்தையும் தூக்கி சுமந்து' எழுதப்பட்ட வரலாறாயிற்றே! 1939ஆம் ஆண்டுடன் நின்றுபோன பெரியார் வரலாற்றை – 68 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதும் முயற்சிகளைத் துவக்கும்போதேகூட – பல்வேறு பணிச்சுமைகளுக்கிடையே இந்தப் 'பாரத்தை'யும் சுமக்க வேண்டிய நிலையில்தான் 'பெரியாரின் தொண்டர்களுக்குத் தொண்டராகிய' ஒருவர் இருக்கிறார்!

- கல்வி நிறுவனச் சுமைகள்
- அறக்கட்டளைச் சுமைகள்
- அயல்நாட்டு பயணச் சுமைகள்

இவை எல்லாவற்றையும்விட

- மாறிமாறி ஆட்சிக்கு வருவோரை ஆதரித்து அன்றாடம் அறிக்கைகளைத் தயார் செய்து கொண்டே இருக்க வேண்டிய மிக மிகக் கடுமையான பணிச் சுமைகளுக்கிடையே பெரியார் வரலாற்றையும் எழுதுவது என்பது எவ்வளவு 'பாரம்' என்பது அவருக்கு மட்டுமே தெரியும்!

'தமிழர் தலைவர்' வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார் உட்பட பல தோழர்கள் பெரியாரிடமே அவரது வரலாற்றை எழுதுமாறு பலமுறை வற்புறுத்தியும் பெரியார் எழுதவில்லை.

*"அவர் இந்தி எதிர்ப்பின் பொருட்டு சிறைப்பட்டிருந்த காலத்திலாவது வாழ்க்கை வரலாற்றை எழுதுவாரென்று எதிர்பார்த்தனர் பலர். அப்பொழுதும் அவர் எழுதத் தொடங்கவில்லை எனத் தெரிந்தது. இதன்பிறகு தோழர்கள் தூண்டுதலின் பேரில் யான் இம்முயற்சியில் ஈடுபட்டேன்"*

– என்று சாமி சிம்தபரனார் எழுதுகிறார் (தமிழர் தலைவர் – நூல் முன்னுரை).

*"நமது பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டும் அவரைப் போன்ற சீர்திருத்தவாதிகளாக வேண்டும் தமிழர்கள் – உலகத்திற்கு வழிகாட்டிகளாக நிற்கக் கூடிய சிறந்த ஒரே சமூகமாக வேண்டும் என்னும் கருத்தே இதை எழுதத் தூண்டியது"*

– என்று எழுதுகிறார் சாமி சிதம்பரனார். பெரியார் வரலாறு தமிழர்கள் உடனே சென்றடைய வேண்டும் என்ற துடிப்பு – சாமி சிதம்பரனாரை இயக்கிற்று.

அதனால் 'பணி சுமைகளுக்கிடையே பாரத்தைத் தூக்கிச் சுமக்க' வேண்டிய 'தியாகம்' – சாமி சிதம்பரனாருக்குக் கிடைக்காமலே போய்விட்டது.

அந்த சாமி சிதம்பரனார் பற்றி 'உலகத் தலைவர் பெரியார்' வரலாற்றில் – டாக்டர் கி. வீரமணி குறிப்பிடுகிறார் (பக்.76)

*"தஞ்சை மாவட்டம் பாபநாசம் விக்டோரியா போர்டு உயர்தரக் கலாசாலையில் தமிழாசிரியராகப் பணியாற்றிய சாமி சிதம்பரனார் 10–1–1941 அன்று தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஈரோடு வந்து விடுதலை – குடிஅரசு பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் பதவி ஏற்று 1.1.1942 வரை பொறுப்பில் இருந்து பின் விலகினார். 1938 வரையிலான தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை 'தமிழர் தலைவர்' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார். ஒரு வகையில் இந்நூல் அதன் தொடர்ச்சியாகும். தமிழர் தலைவரின் இரண்டாம் பாகம் எனலாம்"*

– என்ற அளவோடு சாமி சிதம்பரனார் பற்றிய குறிப்பு முடிகிறது.

குடி அரசு – விடுதலை அலுவலகத்தில் ஆசிரியர் குழுவில் சாமி சிதம்பரனார் சேர்ந்த தேதி – விலகிய தேதி இரண்டுமே துல்லியமாக பதிவு செய்யப்பட்டு அவர் அங்கே பணியாற்றியது, சுமார் ஓராண்டு காலம் மட்டுமே என்ற வரலாற்று உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்கிறார் டாக்டர் – தமிழர் தலைவர் கி. வீரமணி.

சாமி சிதம்பரனார் போலவே – கலைஞர் மு. கருணாநிதியும் ஈரோட்டில் 'குடி அரசு' அலுவலகத்துக்கு வந்ததை இந்த நூலில் குறிப்பிடுகிறார் (பக்.180).

*"தந்தை பெரியாரின் கருத்துகளை தமது எழுச்சிமிக்க பேச்சாலும், உணர்ச்சிமிக்க எழுத்தாலும் திருவாரூரில் பரப்பிக் கொண்டிருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள், தந்தை பெரியாரின் குருகுல வாசத்தில் தங்கி பணியாற்றிட ஈரோடு வந்து சேர்ந்தார். கலைஞர் கருணாநிதி அவர்கள் ஈரோட்டில் குடிஅரசு பத்திரிகையில் பணியாற்றியதை திருவாரூர் 'முரசொலி' எழுத்தாளர் தோழர் மு. கருணாநிதி அவர்களின் தற்கால முகவரி*

*மு. கருணாநிதி, C/O குடிஅரசு ஆபீஸ், ஈரோடு*

*என்று 13–10–1945 குடி அரசு இதழ் தெரிவிக்கிறது"* என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாமி சிதம்பரனாருக்கு சுமார் ஓராண்டு காலத்திலேயே வெளியேறியதைப் பதிவு செய்துள்ளபோது கலைஞர் கருணாநிதியின் 'குருகுலவாசத்தின்' காலத்தையும், நியாயமாகப் பதிவு செய்திருக்க வேண்டும் அல்லவா? அதுபற்றிய குறிப்புகள் எதுவும் இடம் பெறாமல் போனது ஏன்? என்ற கேள்வியை 'ஊன்றிப் படித்து உண்மையை அறிய' துடிக்கும்போது கேட்காமல் இருக்க முடியவில்லையே!

மறைந்த கவிஞர் கருணானந்தம் அவர்கள் 1979 – இல் 'தந்தை பெரியார் – முழுமுதல் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை எழுதி வெளியிட்டார் (பெரியார் திடலில் நடந்த இதன் வெளியீட்டு விழாவில் அன்றைய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி பங்கேற்றார்.)

கடந்த இதழில் நாம் சுட்டிக்காட்டியது போல் பெரியார் பிறப்பிலிருந்து இறப்பு வரை தேதி வாரியாக – செய்தித் திரட்டு போலவே – இந்த நூல் வெளிவந்திருக்கிறது. அந்த நூல்

*"கலைஞர் கருணாநிதி – ஈரோடு 'குடி அரசு' அலுவலகத்தில் 1945 இறுதியில் வந்து 1946லேயே கோவைக்கும் சேலத்துக்கும் திரைப்படக் கதை வசனம் எழுதப் போய்விட்டார்"*

என்று குறிப்பிடுகிறது (பக். 153.) ஆக – கலைஞர் கருணாநிதி ஈரோடு குடிஅரசில் இருந்த காலம் கூட சுமார் சில மாதங்கள்தான்!

கலைஞர் கருணாநிதி எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' நூலில் 'குடிஅரசு' பத்திரிகையில் தான் ஓராண்டு காலம் உதவி ஆசிரியராக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இதில் மற்றொரு செய்தியை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

தமிழக அரசின் அதிகாரப்பூர்வ இணைய தளத்தில **(http://www.tn.gov.in/tnassembly/mkarunanidhi.htm)** 'குடி அரசு' பத்திரிகையின் 'ஆசிரியராகவே' கலைஞர் கருணாநிதி பணியாற்றினார் **("served as Editor for kudiarasu")** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது நம் கண்களுக்கு எதிரே நடக்கும் வரலாற்றுப் புரட்டு! பெரியார் மொழியில் சொல்வதென்றால் இமாலயப் புரட்டு!

இவ்வளவு குழப்பங்கள் – முரண்பாடுகள் உள்ள ஒரு நிகழ்வை பெரியாரின் 'அதிகாரப்பூர்வ வரலாறு' துல்லியமாகத் தெளிவு படுத்தியிருக்க வேண்டாமா?

'பெரியார் வரலாறு – 1940–1949' காலகட்டத்தில் மிக முக்கியமானது நிகழ்வு – அவர் கண்ட திராவிடர் கழகம் உருவான வரலாறு என்பதுதான். அந்த இயக்கத்தின் கொடி உருவான வரலாறும் மற்றொரு முக்கிய நிகழ்வு.

*(3 ஆம் பக்கம்)*

# உண்மைகளை பலிகடாவாக்குவதா?

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இந்த இரு நிகழ்வுகள் பற்றி ஏற்கனவே வரலாற்றுத் திரிபுகள் வந்த நிலையில்– வலிமையான மறுப்புகளும் வந்துள்ளன.

'இது ஒன்றே அதிகாரப்பூர்வமான வரலாறு' என்று அறிவித்து, வரலாறை எழுதியுள்ளதாகக் கூறுகிற டாக்டர் வீரமணி இது தொடர்பான முழுமையான செய்திகளைப் பதிவு செய்திருக்க வேண்டுமா இல்லையா என்பதே நாம் எழுப்பும் அடிப்படையான கேள்வி!

பெரியார் இயக்கத்துக்கான வரலாற்று ஆவணங்கள் எல்லாம்– திராவிடர் கழகத்திடம்தான் இருக்கின்றன.

வரலாற்று ஆய்வு நூலகம் வேறு இயங்குகிறது.

வரலாறுகளைத் தேடித் துருவி அலசக் கூடிய ஆய்வாளர்கள் பலர் இருக்கிறார்கள். தாராளமாக நிதியும் குவிந்து கிடக்கிறது.

இத்தகைய நிறுவனத்திடமிருந்து வெளிவரும் 'அதிகாரப்பூர்வமான வரலாறு'– அரைகுறை உண்மைகளோடு வெளிவருவது பெரியாருக்கு இழைக்கப்படும் துரோகம் அல்லவா?

முதலில் 1944–இல் திராவிடர் கழகம் உருவான வரலாற்றைப் பார்ப்போம்.

1944இல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், திராவிடர் கழகமாக மாற்றப்பட்டபோது என்ன நடந்தது? இதுபற்றி கலைஞர் கருணாநிதி தனது 'நெஞ்சுக்கு நீதி' வரலாற்று நூலில் விளக்குகிறார்.

(இது 'தினமணிக் கதிரில்' கலைஞர் கருணாநிதி தொடராக– எழுதி 1975 டிசம்பரில் நூலாக வந்தது)

அதில் அவர் இவ்வாறு எழுதுகிறார்.

*"(27–8–1944இல் நடந்த சேலம்) மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கிவிட நீதிக்கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்றுவிடாமல், பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.*

*எதிர்ப்புகளை முறியடிக்கவும், நீதிக்கட்சியை ஏழைகளின் இல்லத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப் புகழ்பெற்ற அந்தத் தீர்மானத்துக்கு "அண்ணா தீர்மானம்" என்று பெயர்.......................*

*......................... பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக்கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்!"*

*(நெஞ்சுக்கு நீதி: பக். 85)* என்று எழுதியிருக்கிறார்.

இது கலைஞர் கருணாநிதி நெஞ்சைத் தொட்டு எழுதிய நீதியல்ல– உண்மையைப் புரட்டும் நீதி!

கலைஞர் கருணாநிதி கூறியது போல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு ஆதரவைப் பெருக்கினாரா? இதற்கு 'உலகத் தலைவர் பெரியார்' நூலில் (பக்.155–156) இடம் பெற்றுள்ள பெரியார் உரையே பதிலாக அமைந்திருக்கிறது.

பெரியாரின் எதிரணியில் அண்ணாவே இருந்தார் என்ற சந்தேகம் தனக்கே இருந்தது என்பதை அந்த உரையில் பெரியார் குறிப்பிடுகிறார். அண்ணாதுரைத் தீர்மானம் என்ற தீர்மானத்துக்குப் பெயரிட்டு தானே எழுதி அண்ணாவை படிக்க வைத்ததாகவும் பெரியாரே பேசியிருக்கிறார். இதை 'உலகத் தலைவர் பெரியார்' வரலாறு பதிவு செய்திருக்கிறது.

ஆனால் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பெரியாரின் உரை, எங்கே எந்த தேதியில் நிகழ்த்தப்பட்டது என்ற குறிப்பே– 'அதிகாரப்பூர்வ வரலாற்றில்' குறிப்பிடப்பட வில்லை.

அந்த உரை-

சிதம்பரத்தில் 13–10–1959 லும்

கடலூரில் 14–10–1959 லும்

பெரியார் ஆற்றிய உரை! இதே சேலம் மாநாட்டுப் பிரச்சனைகளை விளக்கி 23–5–1971ல் திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த பார்ப்பனரல்லாதார் மாநாட்டிலும்கூட பெரியார் பேசியிருக்கிறார். அந்த உரையில்தான் தனக்குப் பிறகு தனது வாரிசு தனது நூல்கள்தான் என்பதையும் பெரியார் தெரிவித்தார். பெரியார் பேசிய ஒரு முக்கிய வரலாற்றுப் பேருரை நிகழ்ந்த இடம், தேதி கூட குறிப்பிடப்படாமல் எழுதுவதுதான் 'அதிகாரப்பூர்வ வரலாறா'?

**சே**லத்தில் 27–8–44இல் நீதிக் கட்சியின் பெயர் திராவிடர் கழகமாக மாற்றப்பட்ட வரலாற்றை–'உலகத் தலைவர் பெரியார் வரலாறு' எப்படி கூறுகிறது?

*"நீதிக் கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது இம்மாநாட்டில் தான். திராவிடர் என்ற சொல் புதிதல்ல. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த படித்த சிலர், தங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி 1892ஆம் ஆண்டிலேயே 'திராவிட ஜனசபை' என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். 1913ஆம் ஆண்டிலேயே 'சென்னை திராவிடர் சங்கம்' என்றே ஆரம்பிக்கப் பட்டிருந்தது"*

– என்ற இரண்டு சான்றுகளோடு இந்த வரலாற்றுக் குறிப்புகள் முடிக்கப்பட்டுவிடுகின்றன.

ஆனால் உண்மையில் 1913ஆம் ஆண்டுக்கும் 1944ஆம் ஆண்டுக்கும் இடையே 'திராவிடர்' என்ற சொல்லை பெரியார் பயன்படுத்தியதற்கு ஏராளமான சான்றுகள் இயக்க வரலாற்றிலே உண்டு. 'அதிகாரப்பூர்வமான வரலாறு இது ஒன்றே' எனக் கூறிக் கொள்கிறவர்கள், அவைகளைப் பதிவு செய்ய வேண்டாமா என்பதே நமது கேள்வி.

சேலம் மாநாட்டுத் தீர்மானம் வருவதற்கு சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பே பெரியார், 'திராவிடர்' என்ற கருத்தை பல இடங்களில் 'திராவிடர் கழகம்' என்ற பெயரில் இயங்கிய அமைப்புகளின் பல கூட்டங்களிலேயே பங்கேற்று பேசியுள்ளார்.

- 19–6–1927 கோவில்பட்டியில் திராவிடர் கழகத்தின் 18ஆவது ஆண்டு விழா பெரியார் தலைமையில் நடந்தது. அதில் ஆரியர்– திராவிடர் பற்றி விவரித்துப் பேசினார். ஆரியர்– திராவிடர் சங்கங்கள் குறித்தும் அதில் பெரியார் உரையாற்றினார்.
- 1927லேயே திருவாரூரில் திராவிடர் கழகம் என்ற அமைப்பு இயங்கி வந்த செய்தியை 'குடி அரசு' (22–5–1927) குறிப்பிடுகிறது.

இந்த செய்திகள் பலவும் அதிகாரப்பூர்வ வரலாற்றில் பதிவு செய்யப்படும்போதுதான் அது முழுமை பெறும். அது மட்டுமல்ல.

சேலம் மாநாடு நடப்பதற்கு அய்ந்து மாதங்களுக்கு முன்பே 13–2–1944இல் சென்னையில் நீதிக்கட்சி மாநாடு நடைபெறுகிறது. அதன் முதல் தீர்மானமே, தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதை சென்னை மாகாண **திராவிடர் கட்சி** என்று மாற்றுமாறு சேலத்தில் நடைபெறப் போகும் மாகாண மாநாட்டிற்கு இம்மாநாடு தெரிவித்துக் கொள்வது என்பதுதான். (ஆதாரம் 26–2–1944 குடி அரசு 16ஆம் பக்கம்)

சேலம் மாநாடு நடந்த தேதி 1944– ஆகஸ்ட் 27.

ஆனால் அதே ஆண்டு ஜனவரி 16ஆம் தேதியே சேலம் செவ்வாய்ப்பேட்டையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியார் பேசினார். அதைப் பதிவு செய்துள்ளார் திருவாளர் வீரமணி. ஆனால்,

*'ஜஸ்டிஸ் கட்சி திராவிடக் கட்சியாக மாற வேண்டும். சேலத்திலே நடைபெறவிருக்கும் மாகாண மாநாட்டில் இதையே முதல் தீர்மானமாகக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்திய பெரியார்'*

– என்ற சொற்றொடர் மட்டுமே திருவாளர் வீரமணியின் 'உலகத் தலைவர் பெரியார்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்துடன் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒரு வரலாற்றுக் குறிப்பு ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா?

சேலம் செவ்வாய்பேட்டையில் பெரியார் பேசிய அந்தக் கூட்டமே 'திராவிடர் கழகம்' என்கிற அமைப்பின் முதல் ஆண்டு விழாக் கூட்டம்.

1913ஆம் ஆண்டுக்குப் பிறகும் பெரியாராலேயே திராவிடர் – திராவிடர் கழகம் என்ற கருத்தாக்கங்கள் தொடர்ந்து பேசப்பட்டு வந்திருக்கிறது என்பதைத்தான் இவை காட்டுகின்றன. ஆனால் 1913ல் சென்னை திராவிடர் சங்கம் தொடங்கப்பட்ட செய்தியைக் கூறியதோடு, நூ லின் நாயகரான பெரியாரின் கருத்தைச் சுட்டிக்காட்டாமல் டாக்டர் வீரமணி விட்டுவிட்டார். இதுதான் 'அதிகாரப்பூர்வ வரலாறா'? இதைப் பதிவு செய்திருந்தால் தற்போது பரப்பப்பட்டு வரும் வரலாற்றுப் பொய்களுக்கும் இது தக்க பதிலாக அமைந்திருக்கும்.

அப்படிப் பரப்பப்படும் வரலாற்றுப் பொய் இதுதான்.

சேலம் மாநாட்டில் அண்ணல்தங்கோ, கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றவர்கள் வேண்டுகோளை ஏற்று தமிழர் கழகம் என்றே பெயர் சூட்ட பெரியார் முடிவு செய்திருந்தார் என்றும் ஆனால் மாநாட்டில் கடைசி நேரத்தில் மணவை ரெ. திருமலைசாமி போன்ற பிறமொழியாளர்களின் வற்புறுத்தலால்தான் 'திராவிடர் கழகம்' என்று அன்று மாலையே முடிவை பெரியார் மாற்றிக் கொண்டார் என்றும் தவறான கருத்து தற்போதும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தத் தவறான கருத்துகளுக்கும் இது மறுப்பாக அமைந்திருக்குமே! ('எழுகதிர்' ஏட்டில் அருகோபாலன் கூட இந்தப் பொய்யை அண்மையில் எழுதியிருந்தார்.)

மேலும் 'நெஞ்சுக்கு நீதியில்'–

*"நீதிக்கட்சியை ஏழைகளின் இல்லத்திற்கு கொண்டு வர வேண்டுமென்று* ***தன்னுடைய எண்ணத்தை*** *நிறைவேற்றிக் கொள்ள "அண்ணாத்துரை தீர்மான" த்தை அண்ணா கொண்டுவந்தார"*

– என்கிறார் கலைஞர்.

வரலாற்றுப் பதிவுகளில் உண்மைகளை பலிகடா வாக்கிவிடக் கூடாது.

26.12.1926 நாளிட்ட 'குடிஅரசில்' (கலைஞருக்கு அப்போது வயது இரண்டு) 'பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம்' என்ற கட்டுரையின் இறுதி சொற்களாக...

*"பார்ப்பனர் அல்லாதார் என்றால் பார்ப்பனர் அல்லாதார் சமூகத்தில் 100க்கு 90 பேர்களாயிருக்கும் பாமர மக்களையும் ஏழை மக்களையும் குறிக்குமே அல்லாமல் 100–க்கு 5 பேர் கூட இல்லாத ராஜாக்களையும் ஜமீன் தார்களையும், பிரபுக்களையும் வக்கீல்களையும் மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*பார்ப்பனர் அல்லாதார் முன்னேற்றம் என்பதும் 100க்கு 90 பேர்களின் முன்னேற்றத்தையும் சேர்த்து குறிக்குமே யல்லாது 100க்கு 5பேர்களின் முன்னேற்றத்தை மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இச்சங்கம் உண்மையான பார்ப்பனர் அல்லாதார் முன்னேற்ற சங்கமா அல்லது யாரோ சிலர் குறிப்பிட்ட நபர்களின் முன்னேற்ற சங்கமா என்பது வெளியாக இது ஒருதக்க சமயமாய் ஏற்பட்டுவிட்டதால் ஒவ்வொரு தலைவரும் பொறுப்புடனும் புத்திசாலித்தனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதாக விண்ணப்பித்துக் கொள்கிறோம்"*

– என்று பெரியார் எழுதியிருக்கிறார். இதைச் சுட்டிக் காட்டியிருக்கலாமே! பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து வெளியிட்டு வரும் 'குடிஅரசு' தொகுப்பின் மூன்றாவது தொகுதியில் பின் அட்டையிலேயே, இந்த உரை பதிவு செய்யப்பட்டுள்ளது.

'அண்ணாத்துரை தீர்மானம்' வருவதற்கு 23 ஆண்டு களுக்கு முன்னதாகவே இவ்வளவு துல்லியமாக இயக்கம் யாருக்காக என்று தெளிவாக கருத்தறிவித்த பெரியாருக்கு இல்லாத அக்கறையை அண்ணா கொண்டிருந்ததுபோல் கலைஞர் கருணாநிதி எழுதுகிறார்.

அதிகாரப்பூர்வ கழகம்–அதிகாரப்பூர்வ அமைப்பு– அதிகாரப்பூர்வ தமிழர் தலைவர் என்ற தொனியில்– 'அதிகாரப்பூர்வ வரலாறு' என்ற 'அக்மார்க்' முத்திரையிடப் பட்ட ஒருவரலாறு இப்படி அரைகுறையாக விருப்பு வெறுப்புகளோடு– அவசரகோலத்தில் அச்சேறலாமா என்பதே

'அதிகாரப்பூர்வமற்ற' ஆனால் கொள்கைப்பூர்வமான தமிழர்களின் கேள்வி!

*(அடுத்த இதழில் கழகக் கொடி பிறந்த வரலாற்றில் 'அதிகாரப்பூர்வ'ங்களின் அந்தர் பல்டிகள்)*

## சுப.வீ. தொடங்கும் இதழ் 'கருஞ்சட்டைத் தமிழர்'

***பே**ராசிரியர் சுப.வீரபாண்டியன் 'கருஞ்சட்டை தமிழர்'* என்ற பெயரில் ஆகஸ்டு முதல் மாத இதழ் ஒன்றைத் தொடங்குகிறார். இதன் வெளியீட்டு விழா 2007 ஜூலை 26 அன்று மாலை 6 மணிக்கு சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் நடக்கிறது. தோழர் நல்லக் கண்ணு தலைமையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் இதழை வெளியிடுகிறார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# உளவு அதிகாரியின் அதிர்ச்சிப் பின்னணி

1983 ஆம் ஆண்டில்தான் - பல ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் உருவெடுத்தன. அவர்கள் இந்தியாவின் உதவி கோரி வந்த போது, அவர்களுக்கு அடைக்கலம் தந்து, பல்வேறு இடங்களில் இந்திய உளவு நிறுவனம் அவர்களுக்கு ராணுவப் பயிற்சிகளை ஒழுங்கு செய்த முக்கிய காலகட்டம். அந்தச் சூழலில் - இந்த தமிழ்ப் போராளிக் குழுக்கள் எல்லாவற்றுடனும் நேரடி தொடர்பு கொண்டு செயல்படுவதற்காக, நியமிக்கப்பட்டார் ஒரு 'ரா' அதிகாரி. அவரது பெயர் கே.வி. உன்னிகிருஷ்ணன். ஈழத் தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் - முன்னணியினர் எல்லோரிடமும் இவருக்கு நேரடியான தொடர்பு உண்டு. இவர்தான் ஒருங்கிணைப்பு அதிகாரி. 'ரா' - இந்திய வெளியுறவுத் துறை எடுத்த முடிவுகள்; தமிழ்க் குழுக்களுடன் நடத்திய ரகசிய பேரங்கள். அவர்களுக்கு இந்தியா தந்த ராணுவப் பயிற்சிகள் பற்றிய முழு உண்மைகளும் இவருக்குத் தெரியும். சென்னையில் அனைத்துக் குழுக்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு செயல்பட்ட மிக முக்கிய பொறுப்பை ஏற்றிருந்த இந்த அதிகாரியின் பின்னணி என்ன ? இது தான் அதிர்ச்சிக்குரியதாகும்.

1981 இல் இவர் கொழும்பில் 'ரா'வுக்காக வேலை செய்த போது - அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவருடன் நட்பு கொண்டார். இருவரும் நெருக்கமாகி, பல 'ஒழுக்கக் கேடான' செயல்களில் ஈடுபட்டனர். பல பெண்களுடன், பாலியல் உறவுகளை வைத்திருந்தனர். அப்போது - அமெரிக்க தூதர் வழியாக - இந்திய உளவுத் துறையின் செய்திகளை அமெரிக்க உளவு நிறுவனமான 'சி.அய்.ஏ.'க்கு அனுப்பி வந்தார். 1983 களில் தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் - நேரடி தொடர்பு கொண்டிருந்த காலத்தில், அவர், 'ரா'வின் அதிகாரி மட்டுமல்ல; 'சி.அய்.ஏ.'வுக்கும் உளவாளி ! தமிழ்ப் போராளிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு பொறுப்பு ஏற்ற பிறகு, அவர் - சிறீலங்கா உளவுத் துறைக்கும் நெருக்கமானார். கொழும்பில் - அவருக்கு பல பெண்களுடன் இருந்த உறவை சிறீலங்கா உளவுத் துறைப் பயன்படுத்திக் கொண்டு, உன்னிகிருஷ்ணனை தனது வலையில் சிக்க வைத்தது. ஒரே கட்டத்தில் 'ரா' - 'சி.அய்.ஏ.' - சிறீலங்கா உளவுத் துறைகளுடன், ரகசியமாக செயல்பட்டுக் கொண்டும், அதே காலத்தில் ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுடனும் நேரடி தொடர்பு கொண்டும் செயல்பட்டுள்ளார். 1985 இல் சென்னையில். இவர் தமிழ் ஈழப் போராளிக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தபோது - பம்பாயில் - அமெரிக்காவின் 'பான் விமான சேவை' யில் வேலை செய்த ஒரு அமெரிக்கப் பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பை ஏற்படுத்தித் தந்தவர் உன்னி கிருஷ்ணனின் நண்பரான கொழும்பில் இருந்த அமெரிக்க தூதரக அதிகாரி. சென்னையிலிருந்து - பம்பாய்க்குப் பறந்து கொண்டு, விமானப் பணிப் பெண்ணுடன், அடிக்கடி சிங்கப்பூருக்குப் போய், உல்லாசமாக இருந்தார், உன்னி கிருஷ்ணன். இவர்கள் இருவரும் 'இணைந்த நிலையில்' இருந்த படங்கள் எடுக்கப்பட்டன. ஈழத் தமிழர்ப் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள்; இந்தியாவின் வெளியுறவுத் துறை முடிவுகள்; 'ரா'வின் திட்டங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் - உன்னிகிருஷ்ணன் வழியாக - சிறீலங்கா அரசுக்குக் கிடைத்து வந்தன.

இது பற்றி - கொழும்பில் இந்திய தூதராகவிருந்த ஜே.என்.தீட்சித் தனது நூலில் குறிப்பிடும் போது -

*"1986 ஆம் ஆண்டுகளில் - முதல் 6 மாதங்களில் - நான் லலித் அதுலத் முதலியுடன் (இவர் இலங்கையில் செல்வாக்குள்ள அமைச்சர்) நடத்திய உரையாடல்களில் - அவர் தெரிவித்த கருத்துக்கள் - என்னை வியப்பில் ஆழ்த்தின. இந்தியாவின் வெளி நாட்டுத் துறை அதிகாரிகள்; உளவு நிறுவன அதிகாரிகள்; இவர்களின் செயல்பாடுகள் பற்றி, ஏராளமான தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டது. என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது. உடனே நான், இதுபற்றி டெல்லிக்கு தகவல் கொடுத்தேன்"*

- என்று எழுதியுள்ளார். (நூல்: Assignment Colombo) இந்தத் தகவல்களை சிறிலங்காவுக்கு கொடுத்தது யார் என்பதையும் - ஜே.என்.தீட்சித் குறிப்பிடுகிறார்.

*"சிறீலங்காவுக்கு, இந்தத் தகவல்களைத் தந்தது, எங்களது உளவு அமைப்பில் பணிபுரிந்த அதிகாரி உன்னி கிருஷ்ணன்தான் அவர். அமெரிக்க விமானப்பணிப்பெண் ஒருவர் மூலமாக, அமெரிக்கர் வலையில் வீழ்ந்துவிட்டார். அவரது 'எதிர்மறையான' நடவடிக்கைகள் 1986 மத்தியில் தெரிய வந்தது. தொடர்ந்து - அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. உன்னிகிருஷ்ணன் "அமைதியாக்கப்பட்ட" பிறகு, சிறீலங்காவுக்கு இந்தியா பற்றி கிடைத்து வந்த தகவல்கள் கடுமையாகக் குறைந்துவிட்டன. சிறீலங்காவுக்கு உன்னி கிருஷ்ணன்தான் ரகசியத் தகவல்களைத் தந்தார் என்பது இதன் மூலம் உறுதியானது"*

- என்று எழுதியுள்ளார், ஜே.என். தீட்சித்.

"The Sri Lanka source of information was a senior operative of our own intelligence agency, Unnikrishnan, who had been subverted most probably by the Americans through a foreign lady working for Pan-American Airlines. His **negative activities** were discovered sometime towards the middle of 1986, which was followed by appropriate procedural action against him. The fact that the Sri Lankan Government's advance knowledge about Indian policies and intentions clearly diminished after Unnikrishnan was neutralized proved that he was a major source of information to the Sri Lankans. (Assignment Colombo-(1998) pg. 61)"

உண்மைகளை மறைக்க முடியாமல் - மென்மையான வடிவில் ஜே.என்.தீட்சித் தந்துள்ளார் என்றாலும், கே.வி.உன்னி கிருஷ்ணனின் நடவடிக்கைகளை அவரால் மறைக்க முடியவில்லை.

1985-86-இல் மூன்று உளவு நிறுவனங்களுடனும் கே.வி.உன்னி கிருஷ்ணன் தொடர்பு கொண்டிருந்த காலகட்டத்தில்தான் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம், ஆலால சுந்தரம் ஆகியோர் - ஈழத்தில் படுகொலை செய்யப்பட்டனர். வழக்கம் போல் விடுதலைப்புலிகள் மீதே பழிபோட்டு, பிரச்சாரங்கள் நடந்தன. ஆனால், அந்தக் காலகட்டத்தில், உளவுத் துறைக்காக இந்தக் கொலைக்கான கொலைக்காரர்களைத் தேர்வு செய்தது கே.வி. உன்னி கிருஷ்ணனாகத்தான் இருக்க முடியும் என்று எழுதுகிறார், ஆய்வாளரும், விஞ்ஞானியுமான சச்சி சிறீகாந்தா தனது 'Pirabakaran Phenomenon' என்ற நூலில்.

"It is an easy guess that this Unikrishnan could have been a probable conspirator for the 1985 assasinations of Dharmalingam and Alala Sundaram." (pg. 193)

தங்களை நம்பி வந்த தமிழ்ப் போராளிக் குழுக்களை, இந்திய உளவுத் துறை பகடைக்காய்களாக்கி, தனது விளையாட்டு மைதானங்களில் இப்படித்தான் பந்துகளாக்கியது; **இந்த வலையில் சிக்காத ஒரே தலைவர் பிரபாகரன் மட்டும்தான்!** இந்திய தேசிய அதிகாரவர்க்கத்தின் பார்ப்பன ஆணவ அணுகுமுறைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் ?

சிங்கப்பூரில் - அமெரிக்க விமானப் பணிப் பெண்ணுடன் கேவி.உன்னி கிருஷ்ணன் நெருக்கமாக இருந்த படங்கள் கைப்பற்றப்பட்டு, அவரது கீழறுப்பு வேலைகள் கண்டறியப்பட்டு, 1987-இல் அவர் கைது செய்யப்பட்டார்.

*(பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய 'ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி' நூலிலிருந்து)*

## 'ஓ.என்.ஜி.சி.'க்கு மீண்டும் பார்ப்பனரே தலைவர்

இந்தியாவின் இயற்கை வாயு மற்றும் எண்ணெய் வாரியம் (ஓ.என்.ஜி.சி.) என்ற மிகப் பெரும் பொதுத்துறை நிறுவனத்தின் தலைவராக - மீண்டும், அதே பதவியில் இருந்த ஆர்.எஸ். சர்மா என்ற பார்ப்பனரே நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவிக்கு தனியார் துறைகளிலிருந்து சிலரைத் தேடும் முயற்சிகளை பிரதமர் அலுவலகம் மேற்கொண்டது. வேறு சில அதிகாரிகள் பெயரும் பரிசீலிக்கப்பட்டன. இதற்கிடையே பெட்ரோலியத் துறை அமைச்சர் முரளி தியோராவுக்கும் - சர்மாவுக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகவும் செய்திகள் பரவின. ஆனால், இடதுசாரி கட்சிகள் பார்ப்பனர் சர்மாவே நீட்டிக்க அழுத்தம் தந்தனர். தொழிலாளர்களும் இந்த பார்ப்பனருக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர். இதனால் பார்ப்பனர் நியமனம் உறுதியானது.

### நன்கொடை

11.7.2007 அன்று கொளத்தூர் ஒன்றியம் காவலாண்டியூரில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் ஏற்றுக் கொண்ட இணையர் ந. பூரணி - க. சுந்தரமூர்த்தி ஆகியோர் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கினர்.

கொளத்தூர் ஒன்றியம், காவலாண்டியூர் சென்னப்பன்-அம்பிகா இணையர் தங்கள் மகன் 'யாழ் இனியன்' பெயர் சூட்டல் மகிழ்வாய் ரூ.500/- 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக வழங்கினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. பேசி: 2451 2857
periyarmulakkam@yahoo.com
'www.dravidar.org.'

### 'தமிழன்' தொலைக்காட்சியில் கீசகன் நிகழ்ச்சி

'தமிழன்' தொலைக்காட்சியில் ஒவ்வொரு வாரமும் - புதன் மதியம் 2.30 மணியிலிருந்து 3 மணி வரை கழகத் தோழர் கீசகனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி மக்கள் மன்றத்தின் முன் ஒளிபரப்பாகிறது. 15 வாரம் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து இதே நாளில் இதே நேரத்தில் ஒளிபரப்பாகும்.

## சத்தி நகரத் தலைவர் நவநீதன் முடிவெய்தினார்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் கழகத்தின் நகரத் தலைவராக பணியாற்றி வந்த தோழர் கு. நவநீதன் (ஆசிரியர்) 13.7.2007 அன்று மாலை மரணமடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். உடல்நலம் பாதிக்கப்பட்டு கடந்த ஒரு வார காலமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நீண்டகாலமாக பெரியார் கொள்கையை இப்பகுதியில் பரப்பி வந்தவர். தனது மகளுக்கு சாதி மறுப்புத் திருமணம் செய்து வைத்தவர். எப்போதும் கருப்புச் சட்டையுடனேயே சத்திய மங்கலம் பகுதியில் வலம் வந்தவர். இறுதி வரை பெரியாரின் கொள்கை வீரனாக வாழ்ந்தவர்.

அவர் எழுதி வைத்திருந்த மரண சாசனப்படி எவ்விதச் சடங்குமின்றி சத்தி சுடுகாட்டில் கழகத் தோழர்களால் எடுத்துச் செல்லப்பட்டு, கழகக் கொடி போர்த்தப்பட்டு ஜூலை 13 ஆம் தேதி இரவு 9 மணிக்கு உடல் அடக்கம் செய்யப்பட்டது. தோழரின் படத்திறப்பு நிகழ்ச்சி வருகின்ற 19.7.2007 வியாழன் காலை அவரது இல்லத்தில் கழகப் பொதுச்செயலாளர் தோழர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையில் நிகழுகிறது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி இரங்கல் உரையாற்றுகிறார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 19th July 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூலை 26, 2007 புரட்சி 5 முழக்கம் 30 விலை : ரூ.2.50


## இதுதான் பெரியார் ஆட்சியா?

# வாஸ்து — கடவுள்களிடம் சரணடையும் காவல்துறை

தமிழ்நாட்டில் ‘பெரியார் ஆட்சி’ நடப்பதாக காது கிழியப் பிரச்சாரம் நடக்கிறது. ஆனால், அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களில் கடவுளர் படங்களும், பூசைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. மாநகரக் காவல் துறையில் ஓட்டுநரின் இருக்கைக்கு எதிரே ஒவ்வொரு ஓட்டுநரின் விருப்பக் கடவுள்களும் கண்ணாடி போட்டு மாட்டப்பட்டுள்ளன.

1967 இல் ஆட்சிக்கு வந்தவுடன் முதல்வர் அண்ணா, அரசு அலுவலகங்களில் கடவுளர் படங்களை மாட்டக் கூடாது என்று பிறப்பித்த ஆணை செயலிழந்து கிடக்கிறது. 2005 இல் இப்போது சென்னை மாநகரக் காவல்துறை ஆணையராக இருக்கும் லத்திகாசரண் (அப்போது காவல்துறை துணைத் தலைவர்) காவல்துறைக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அதில் காவல்துறை அதிகாரிகள் எந்த மதச் சடங்குகளிலும் ஈடுபடக் கூடாது; அரசு வளாகங்களில் வழிபாட்டுத் தலங்கள் கூடாது என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் – அதே லத்திகா சரணே காவல் நிலையங்களில் ‘வாஸ்து மீன்கள்’ வைப்பதற்கு உதவுவதோடு மேற்பார்வையும் செய்கிறார். பெரம்பலூர் மாவட்டக் காவல்துறை அலுவலக வளாகத்துக்குள்ளேயே மாவட்டக் காவல்துறை அதிகாரியின் முழு ஆதரவோடு கோயில் கட்டப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் மனு தந்தார், பெரம்பலூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் இலட்சுமணன். உடனே மாவட்டக் காவல்துறை அதிகாரியே தோழர் இலட்சுமணனை அழைத்து இந்த சட்டவிரோத நடவடிக்கையை எதிர்க்க வேண்டாம் என்று, ‘சமாதானம்’ பேசிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவராகவும், மாவட்டக் காவல் துறை அதிகாரிகளாகவும், “பெரியார் ஆட்சி”யில் பார்ப்பனர்களும் வடநாட்டுக்காரர்களுமே இருக்கிறார்கள்.

இந்த நிலையில் – குற்றவாளிகளைப் பிடிக்க ‘வாஸ்து’வையும், ‘கடவுளை’யும் நம்புகிற வெட்கக் கேடான நிலைக்கு தமிழக காவல்துறை போய்க் கொண்டிருக்கிறது. தமிழக காவல்துறை முதலமைச்சர் பொறுப்பின் கீழ் உள்ள துறையாகும். மூட நம்பிக்கையின் முடை நாற்றம் வீசும் சென்னை மாநகரக் காவல் துறை பற்றி அரசின் தீவிர ஆதரவு நாளேடான ‘தினத்தந்தி’யே கடந்த ஜூலை 17 இல் செய்தி வெளியிட்டிருக்கிறது. அந்த செய்தியை அப்படியே இங்கு வெளியிடுகிறோம்:

சென்னை நகர போலீசாரிடையே தற்போது கடவுள் நம்பிக்கை அதிகரித்துள்ளது. குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், குற்றங்களை தடுப்பதற்கும் கடவுள் அருள் வேண்டும் என்று நம்புகிறார்கள். வாஸ்து சாஸ்திரத்தைக்கூட பெரிதும் மதிக்கிறார்கள்.

சென்னை நகரில் நடந்த கிரில் கொள்ளை சம்பவங்களில் வடநாட்டு கொள்ளையர்கள் பிடிபட்டனர். பல ஆண்டுகளாக பிடிபடாமல் இருந்த பீரோ புல்லிங் கொள்ளையன் கைது செய்யப்பட்டான். சென்னை கோட்டூர்புரத்தில் கொடூரமான முறையில் டாக்டர் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இதில் எந்தவித தடயமும் இல்லாத நிலையில் மறுநாளே குற்றவாளிகள் புதுக் கோட்டையில் தற்செயலாக கைது செய்யப்பட்டனர்.

இப்படி போலீசுக்கு இக்கட்டான வழக்குகளில் உடனடியாக தீர்வு கிடைத்தது. இதற்கு போலீசாரின் உண்மையான கடின உழைப்பு, திறமையான செயல்பாடு, சிறப்பான துப்பறிவு திறன் போன்றவை முக்கிய காரணமாக இருந்தாலும்கூட, எல்லாவற்றிற்கும் மேலாக அதிர்ஷ்டமும், கடவுளின் அருளும் ஒரு காரணம் என்று உயர் போலீஸ் அதிகாரிகளிலிருந்து, போலீஸ்காரர்கள் வரை கருத்து தெரிவித்தனர். வெளிப்படையாகவே சென்னை போலீஸ் வட்டாரத்தில் இந்தப் பேச்சு பேசப்பட்டது.

சென்னை சேத்துப்பட்டில் ஆட்டோ டிரைவர் ஒருவர் சமீபத்தில் கடத்தி கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கடும் போராட்டத்திற்குப் பிறகு குற்றவாளிகள் பிடிபட்டனர். இதுபற்றி சேத்துப்பட்டு போலீசார் வெளிப்படையாகவே சில கருத்துக்களை கூறினார்கள். சேத்துப்பட்டில் 70 ஆண்டுகாலமாக பிரபலமாக விளங்கும் அருள்மிகு கருக்காத்தம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலுக்கு சேத்துப்பட்டு போலீசார் சார்பில் தினமும் பூஜைகள் செய்யப்படும். ஒரு வாரம் பூஜை செய்யாமல் நிறுத்தி விட்டார்கள். இதனால்தான் அமைதியாக இருந்த சேத்துப்பட்டில் திடீரென்று ஒரு கொலை சம்பவம் நிகழ்ந்துவிட்டது என்ற போலீசார் நம்பினார்கள்.

மேலும் குற்றவாளிகளை பிடிக்க முடியாமலும் கடும் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கருக்காத்தம்மனுக்கு பூஜையை நிறுத்தியதால் தான், கொலையும் நடந்துவிட்டது. குற்றவாளிகளையும் பிடிக்க முடியவில்லை என்று கருதிய சேத்துப்பட்டு போலீசார் உடனடியாக பூஜை செய்ய ஆரம்பித்தார்கள். பூஜை ஆரம்பித்த மறுநாளே குற்றவாளிகள் பிடிபட்டதாக சேத்துப்பட்டு புதிய போலீஸ் இன்ஸ்பெக்டர் குணசேகரன் கூறினார். இப்போது தினமும் கருக்காத்தம்மனை வழிபட்ட பிறகு தான் பணியைத் தொடங்குகிறேன் என்றும் பக்தி பரவசத்தோடு அவர் கூறுகிறார்.

### வாஸ்து சாஸ்திரம்

சென்னை போலீசார் வாஸ்து சாஸ்திரத்தையும் பெரிதும் நம்புகிறார்கள். ஜூலை 16 அன்று திறந்து வைக்கப்பட்ட சென்னை ஓட்டேரி போலீஸ் நிலையத்தில் மீன்தொட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அந்த மீன் தொட்டிக்குள் நல்ல காரியங்கள் நடக்கச் செய்யும் வாஸ்து மீன் ‘புளோரான்’ ஒன்று துள்ளி விளையாடுகிறது. இந்த மீன் உள்ள இடத்தில் கெட்ட காரியங்கள் நடக்காதாம். சென்னை ஓட்டேரி போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த வாஸ்து மீனை போலீஸ் கமிஷனர் லத்திகாசரண் பார்வையிட்டார். அந்த மீனின் அற்புதம் குறித்து தனது சக அதிகாரிகளுக்கு விளக்கி கூறினார்.

சென்னை நகரிலுள்ள பெரும்பாலான போலீஸ் நிலையங்களில் கடவுள் படங்களை வைத்து வெள்ளிக் கிழமைகளில் பெரிய பூஜை நடப்பதும் வழக்கமாக உள்ளது. பெரும்பாலான இன்ஸ்பெக்டர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை தங்கள் அலுவலகத்தில் வைத்து வழிபடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு ‘தினத்தந்தி’ செய்தி வெளியிட்டுள்ளது.

*(குறிப்பு : ‘தினத்தந்தி’ இணைய தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியை, ஏட்டில் வெளியிடாமல் என்ன காரணத்தினாலோ தவிர்த்து விட்டது)*

## ‘வாஸ்து’வை நம்பி உயிர்ப் பலியான பெண்

‘தினத்தந்தி’ சென்னைப் பதிப்பில் (20.7.2007) வாஸ்து மூட நம்பிக்கைக்கு ஓர் உயிர்ப் பலியான செய்தி வந்துள்ளது.

சென்னை கொசப்பேட்டையில் பைனான்ஸ் தொழில் நடத்தி வரும் வெங்கடேசனின் மனைவி தீபா (வயது 24) - சமையலறையில் ‘கியாஸ்’ சிலிண்டர் பற்ற வைத்த போது சிலிண்டரில் இருந்த கியாஸ், வீடு முழுதும் பரவி இருந்ததால் திடீரென தீ பிடித்து உடையில் பற்றி பலியானார்.

தீ விபத்து நடந்த வீட்டின் சமையலறை கதவு ஜன்னல்கள் ஏற்கனவே செங்கல் வைத்து அடைக்கப்பட்டிருந்தது. இதனால் தான் சிலிண்டரிலிருந்து வெளியேறிய ‘கியாஸ்’ வெளியில் செல்ல முடியாமல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இது குறித்து போலீசார் இறந்து போன பெண்ணின் கணவர் வெங்கடேசனிடம் கேட்டபோது,

“கடந்த சில மாதங்களாக எனக்கும், எனது மனைவி தீபாவுக்கும் தொடர்ந்து உடல்நலக்குறைவு ஏற்பட்டு வந்தது. இதனால் வாஸ்து நிபுணர் ஒருவரை சந்தித்தேன். அவர் வந்து எனது வீட்டைப் பார்த்தார். பின்னர் கிழக்குப் பக்கமாக இருக்கும் வாசலை அடைத்து தெற்கு பக்கமாக வாசலை வைக்கச் சொன்னார். அப்படி செய்தால் உடல்நலக் கோளாறு அனைத்தும் சரியாகி விடும் என்றார். அவர் சொற்படி, கதவு ஜன்னலை மாற்றியமைத்தேன். அது இப்போது எனது மனைவியின் உயிரையே பறித்து விட்டது என்றார்.”

அதே நாளிட்ட ‘தினத்தந்தி’ யில் மலேசியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட ரூ.5 லட்சம் மதிப்புள்ள வாஸ்து மீன்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பறி முதல் செய்யப்பட்டது என்ற செய்தி வெளிவந்தது. கடந்த 17 ஆம் தேதி தாய்லாந்திலிருந்து வாஸ்து மீன் கடத்தப்பட்டு, பிடிபட்ட செய்தி வெளிவந்தது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுங்கத்துறை ஆணையர் ராஜன், விமானங்கள் மூலம் ‘வாஸ்து’ மீன்கள் கடத்தப்படுவது பற்றி ஏராளமான புகார்கள் வருகின்றன என்றும், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

‘வாஸ்து மீன்கள்’ என்று சில வகை மீன்கள் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டு வருகின்றன. நட்சத்திர ஓட்டல்கள், தொழில் நிறுவனங்கள், பணக்காரர் வீடுகளில் ‘வாஸ்து தோஷத்தை’க் கழிக்க இந்த ‘மீன்கள்’ வைக்கப்படுகின்றன. இதன் விலை பல லட்சம் ரூபாய்!

சென்னை மாநகரக் காவல்துறையும் இப்படி உயிர்ப்பலி வாங்கக் கூடிய கடத்தலுக்குக் காரணமான ‘வாஸ்து’வை நம்பிச் செயல்பட்டு வருவது வெட்கக் கேடானதாகும்.

பெரியார் இயக்கம் பற்றி அறிய பார்க்க வேண்டிய இணையதளங்கள்

www.dravidar.org
www.periyardravidarkazhagam.blogspot.com
www.periyarevr.com
www.puduvaipdk.blogspot.com
www.thamilachi.blogspot.com
www.thozharperiyar.blogspot.com
http://karuppupaiyan.blogspot.com

# உலகத் தலைவர் பெரியார்!? (3)

# சவால் விட்டவர்கள், சரணடைந்தக் கதை!

- புதியவன் -

திராவிடர் கழகக் கொடியை உருவாக்கியது யார் என்ற ஒரு ‘சூடான சர்ச்சை’ - கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர் கழகத்துக்கும், தி.மு.கழகத்துக்கும் இடையே நடந்து வந்ததை திராவிடர் கழகத் தோழர்கள் நன்றாகவே அறிவார்கள். திராவிடர் கழகக் கொடிக்கு நடுவில் உள்ள சிவப்பு வட்டம் - தனது ரத்தத்தில் தெளிக்கப்பட்டது என்று கலைஞர் கருணாநிதி கூறியதற்கு - ‘விடுதலை’ ஆதாரங்களோடு மறுப்பு தெரிவித்தது. வரலாறுகள் திரிக்கப்படக் கூடாது என்பதே இதன் நோக்கமே தவிர, யாரையும் புண்படுத்துவது அல்ல. திராவிடர் கழகம் தி.மு.க.வோடு பகைமை பாராட்டும்போது ஒரு வரலாறு. அதே திராவிடர் கழகம் - தி.மு.க.வோடு ‘கட்டிப் பிடித்து’ கண்ணீர் சிந்தி பாச மழையில் மூழ்கும்போது ஒரு வரலாறு என்று எழுதிக் கொண்டு போனால், அது வரலாற்றுப் புரட்டு அல்லவா என்பதே நமது கேள்வி!

பெரியாரின் அதிகாரபூர்வ வரலாறு இதுதான் என்ற அறிவிப்போடு வெளி வந்திருக்கும் ‘உலகத் தலைவர் பெரியார் வரலாறு’ - திராவிடர் கழகக் கொடி உருவாக்கம் பற்றி கடந்த காலங்களில் கலைஞர் கருணாநிதிக்கு தெரிவித்து வந்த ‘மறுப்புகளை’ இப்போது திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர் கருணாநிதி கூறியதுதான் ‘உண்மை’ என்பது போல், ஏற்பு வழங்கியிருக்கிறது. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தி.மு.க. தலைமையின் ‘நெருக்கத்துக்காக’ வரலாற்றையே தலைகீழாகத் திருப்பி, தடம் புரளத் தயாராகிவிட்டார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி.

இந்த நூலின் 11வது அத்தியாயம் ‘கொடி வரலாறு’ பற்றியதாகும். இப்போது இது தொடர்பாக - சில வரலாற்று நிகழ்வுகளைப் பார்ப்போம்.

நீதிக்கட்சியான தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் பெற்ற சேலம் மாநாடு நடந்த நாள் 1944 ஆம் ஆண்டு ஆகஸ்டு 27 ஆம் நாள்.

- திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டாலும், அப்போது திராவிடர் கழகக் கொடி உருவாக்கப்படவில்லை. நீதிக்கட்சியின் கொடியாகிய சிவப்புத் துணியில் வெள்ளை நிறத்தில் தராசு கொடியே தொடர்ந்து கழக மாநாடுகளில் ஏற்றப்பட்டு வந்தது. (‘லிபர்ட்டி கிரியேஷன்ஸ்’ தயாரித்து வெளிவந்துள்ள ‘பெரியார்’ படத்தில் 1944 சேலம் மாநாட்டு மேடையிலேயே திராவிடர் கழகம் கொடி வந்துவிட்டதாகக் காட்டப்பட்டது வரலாற்றுப் பிழை)
- அதன் பிறகு சுமார் ஓராண்டு காலத்துக்குப் பிறகு திருச்சிராப் பள்ளியில் திராவிடர் கழக மாநாட்டில் தோழர் மிராண்டா கஜேந்திரன் பி.ஏ., (இவர் ஈ.வெ.கி. சம்பத்தின் சகோதரி) கழகக் கொடியை அதாவது நீதிக்கட்சிக் கொடியை (சிவப்புத் துணியில் வெள்ளை தராசு) ஏற்றி வைத்துப் பேசினார். அவர் பேசும்போது இந்தக் கொடியை மாற்றியாக வேண்டும் என்ற தனது கருத்தை வலியுறுத்தினார். அவரது உரை:

“நம்முடைய கொடியில் இருக்கும் செங்குருதியொத்த நிறத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் அதனிடையே பொறிக்கப்பட்டுள்ள ‘தராசு’ சின்னத்தை நான் ஒப்புக் கொள்ள முடியாது. நாம் வேண்டுவது தலைகீழ் மாறுதல் புரட்சி. இன்னல் செய்யும் ஆரியத்தை சின்னாபின்னமாக்க ஓர் சின்னம் தேவை. தராசு புரட்சியைக் குறிக்கும் சின்னமாகாது. தலைகீழ் மாறுதல் வேண்டி நிற்கும் எதிர்கால ஆக்க இளைஞர் உணர்ச்சிக்கு இந்தத் தராசு எந்த விதத்திலும் ஓர் அறிகுறியோ அல்லது வழிகாட்டியோ அல்லது துணையோ ஆகாது. எனவே நீங்களனைவரும் இது விஷயமாய் நெடிது விவாதித்து விசாரணை செய்து, புத்துலகிற்கும் புதுவாழ்விற்கும் வழிகாட்டக்கூடிய தீவிரமான ஒரு புரட்சிகர சின்னத்தை ஏற்படுத்துமாறு வேண்டிக் கொண்டு, “நாம் திராவிடர், நம் நாடு திராவிட நாடு; இன்றேல் சுடுகாடு” என்ற உணர்ச்சிகளைத் திருவாரூரில் தோன்றச் செய்து, சேலத்தில் பெருகச் செய்த இக்கொடியை உயர்த்தி வைக்கிறேன்” என்று முழங்கினார். (ஆதாரம்: ‘குடிஅரசு’ 6.10.1945)

- 1946 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் தேதி - தவிட்டுப் பாளையத்தில் ‘கரூர் தாலுக்கா திராவிடர் கழக மாநாடு’ நடந்தது. மாநாட்டில் கொடியை ஏற்றி வைத்தவர் கரூர் என். ரத்தினம்.

கொடியை ஏற்றி வைத்துப் பேசிய கரூர் என். ரத்தினம் -

“இன்று உயர்த்தியிருக்கும் கொடி, இன்று நமது மாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் போகும் எனது நண்பர் தோழர் பி. சண்முக வேலாயுதம் அவர்களால் சித்தரிக்கப்பட்டதும், பல தோழர்களால் ஆமோதிக்கப்பட்டதும் ஆகும்” என்று குறிப்பிட்டார்.

இந்த உரையை வெளியிட்ட, டாக்டர் வீரமணியின் ‘உலகத் தலைவர் பெரியார் வரலாறு’ நூலில் கரூர் ரத்தினம் உரையினிடையே அடைப்புக் குறியிட்டு, தடித்த எழுத்தில், “அப்போது ஈரோடு குருகுலத்திலே சண்முக வேலாயுதம், தவமணி ராசன், மு. கருணாநிதி, கருணானந்தம் முதலியோர் வாசம் புரிந்தனர். கொடிக்குச் சிவப்பு நிறம் தேவைப்பட்டபோது முதல்வர் கலைஞர் (அன்றைக்கே முதல்வரோ) தம் விரலைக் குண்டூசியால் குத்தி ரத்தத்தைப் பூசினார்” என்று இடைச்செருகல் செய்துள்ளார். இதுவே ‘அதிகார பூர்வ வரலாறு’ என்று அறிவிக்கிறார். இந்த அடைப்புக்குறி இடைச்செருகலுக்குப் பிறகு கரூர் என் ரத்தினத்தின் உரை தொடருகிறது. கரூர் என். ரத்தினம் கலைஞர் கருணாநிதி பெயரை ஏதோ திட்டமிட்டு இருட்டடித்து, கொடியின் வரலாற்றைப் பேசிவிட்டது போலவும், அந்த வரலாற்றை சரி செய்வதற்காக இடையில் புகுந்து திருவாளர் வீரமணி, உண்மையை பதிவு செய்வது போலவும், கரூர் ரத்தினம் உரையில் இப்பகுதி சொருகப்பட்டுள்ளது.

கரூர் என். ரத்தினமோ, தனது உரையில் - கொடியை உருவாக்கியது, ஈரோடு சண்முக வேலாயுதம் தான் என்பதை ‘குடி அரசு’ அலுவலகத்திலேயே விசாரித்துத் தெரிந்துக் கொண்டப் பிறகே இதைக் கூறுகிறேன் என்று குறிப்பிடுகிறார். “பல தோழர்கள் கொடி சம்பந்தமாகத் தங்களது அபிப்பிராயங்களைக் ‘குடி அரசு’ காரியாலயத்துக்குத் தெரிவித்திருப்பார்கள் என்று கருதி விசாரித்தேன். ஏனென்றால் கொடி சம்பந்தமான அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு, நிர்வாகக் கமிட்டியாரால் அளிக்கப்பட்ட கெடு ஜன. 31 ஆம் தேதியோடு முடிவடைவதாலும், அதற்கப் புறம் திராவிட நாட்டிலேயே முதன்முதலாக நடக்கப் போகும் மாநாடு இதுவே. ஆதலாலும், அதிலும் கொடியேற்றி வைக்கும் பொறுப்பை வரவேற்புக் கழகத்தார் எனக்கு ஒப்படைத்திருப்பதாலும் நான் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. அம்முறையில் பார்க்கும்பொழுது இன்று நாம் உயர்த்தியிருக்கும் கொடி, இன்று நமது மாநாட் டுக்குத் தலைமை வகிக்கப் போகும் எனது நண்பர் தோழர் பி. சண்முக வேலாயுதம் அவர்களால் சித்தரிக் கப்பட்டதும், பல தோழர்களால் ஆமோதிக்கப் பட்டதும் ஆகும்” என்று குறிப்பிடுகிறார்.

ஆக, குடி அரசு அலுவலகத்திலேயே தோழர்களை விசாரித்து, கொடியை உருவாக்கியது யார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு கரூர் ரத்தினம் பேசியுள்ளார். அவரது உரைக்குள்ளே, ‘கலைஞர் ரத்தம்வைத்த கதையை’ சொருகுவது நியாயம் தானா?

கொடியை சித்தரித்தது ஈரோடு சண்முக வேலாயுதம் என்பதை வரலாறு பதிவு செய்கிறது. ஆனால் - தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியோ கொடியை உருவாக்கியதே தாம் தான் என்று கூறத் தொடங்கினார். இதுகூட - அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்ட ஒரு பிரச்சாரம் தான்! கலைஞரே எழுதிய தனது வரலாறான ‘நெஞ்சுக்கு நீதி’யில்கூட திராவிடர் கழகக் கொடியைத் தாம் உருவாக்கியது பற்றியோ, குண்டூசியில் விரலைக் குத்தி ரத்தம் எடுத்து - சிவப்பு வட்டமாக வைத்தது பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. இந்தக் கதைகள் எப்போது தொடங்கின?

‘முரசொலி’ ஏட்டில் 1993 இறுதியில் வட அனந்தல் க.பெ. நெடுமாறன் என்ற ஒரு பழம்பெரும் தி.மு.க. தொண்டர் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கழகங்களின் கொடிகளையும் உருவாக்கியவர் கலைஞர் தான் என எழுதிய கட்டுரை (கடிதம்) வெளியானது. (இலட்சியப் பாதை 22.4.1994)

திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி - தி.க. தலைமைக்கு எதிராக செயல்பட்டு வந்த ‘விடுதலை’ என்.எஸ் சம்பந்தம் அப்போது ‘கலைஞர் களஞ்சியம்’ என்ற கட்டுரைத் தொகுப்பில் திராவிடர் கழகமும், கலைஞரும் என்ற கட்டுரையில் ‘கலைஞரும் சண்முக வேலாயுதமும் சேர்ந்து திராவிடர் கழகக் கொடியை அமைத்தார்கள் என்பது வரலாறு’ என எழுதினார். (இலட்சியப் பாதை 22.4.1994)

கவிஞர் கருணானந்தம் எழுதிய ‘தந்தை பெரியார்’ என்ற பெரியார் வரலாற்று நூலில், “தராசுக் கொடி தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தந்த கொடி, அது புரட்சியின் சின்னமல்ல, மாற்ற வேண்டும் என்பதாக ஒரு கருத்து திருச்சியில் உதயமாயிற்று. பின்னர் பெரியார் கேட்டுக் கொண்ட வண்ணம் பலரும் டிசைன் அமைக்க முயன்றனர்.

‘குடி அரசு’ உதவி ஆசிரியராக அப்போது ஈரோடு வந்திருந்த மு. கருணாநிதி கருப்பு மையையும் தன் விரலின் நுனியிலிருந்து எடுத்த இரத்தமும் கொண்டு இப்போதுள்ள திராவிடர் கழகக் கொடிக்கு வடிவமைப்பு தந்தார்.

அதுதான் பின்னர் 27.4.1946 இல் பெரியாரால் அங்கீகாரம் பெற்றது” என (பக்கம் 172 இல்) எழுதினார்.

இந்நிலையில் தான் திருப்பூர் அருகே உள்ள சோமனூரில் தி.மு.க கொடியை ஏற்றி வைத்து கலைஞர் கருணாநிதி ஆற்றிய உரை 11.7.1994 ‘முரசொலி’யில் வெளிவந்தது. அதில் :

“நானும் கருணானந்தமும், தவமணி ராஜனும், சண்முக வேலாயுதம் என்ற நண்பரும், ஆர்.டி. முத்து என்பவரும் இவர்களெல்லாம் கலந்து ஆலோசித்தோம். கடைசியாக நான்சொன்னேன். ஏன் தமிழகத்திலே இருக்கின்ற இழிவைக் காட்டுகின்ற வகையிலே கருப்பு வண்ணமும் அதை நீக்குகிற வகையிலே புரட்சிகரமாக சிவப்பு வண்ணமும் பொதிந்த ஒரு கொடி அமைந்தால் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்களும் அப்படியே இருக்கலாம் என்று சொன்னார்கள்.... அந்த சிவப்பு வண்ணத்தை அப்பொழுது வட்ட வடிவமாக நாங்கள் எண்ணவில்லை. இரத்தம் தெறிப்பதுபோல, அதாவது புரட்சித் தெறிப்பது போல இருக்க வேண்டும் என்று கருதினோம்” என்று கூறிவிட்டு, ‘குடி அரசு’ அலுவலகத்திலே கருப்பு மை இருந்தது, சிவப்பு மை இல்லாததால் குண்டூசியில் விரலில் குத்தி இரத்தத்தை எடுத்து வரைந்தேன் என்று பேசியிருந்தார். (சிக்கனக்கார மேனேஜர் கரிவரத சாமி இவர்கள் ஊற்றிக் கொள்வார்கள் என்று சிவப்பு மை புட்டியை வெளியே வைக்க மாட்டார் என்று கூறும் கலைஞர், கருப்பு மை மட்டும் ‘குடிஅரசு’ அலுவலகத்தில் வெளியே இருந்ததாக கூறியிருப்பது நல்ல வேடிக்கைதான்) அடுத்த நாள் காலை பெரியாரிடம் காட்டியபோது நன்றாயிருக்கிறது என்று ஏற்றுக் கொண்டதாகவும் கூறுகிறார். அப்போதே - இதை திராவிடர் கழகம் மறுத்தது. (23.7.1995 ‘விடுதலை’) பெரியார் “பிறந்த நாள் மலரில் கழகம் பிறந்ததும் கொடி பறந்ததும்” என்ற தலைப்பில் - கொடி பறந்த உண்மை வரலாறு பதிவு செய்யப்பட்டது.

தோழர் தவமணிராசனை - கலைஞர் கருணாநிதி சாட்சிக்கு அழைத்ததால் அப்போது உயிருடன் இருந்த, அவரது கருத்தையே கேட்டு வாங்கி ‘விடுதலை’ பெரியார் பிறந்த நாள் மலர் வெளியிட்டது. அப்போது சிவகாசியில் இருந்த தோழர் தவமணி ராசன் 17.7.1995 இல் எழுதிய கடிதத்தை ‘விடுதலை’ ஏடும் 23.7.1995 இல் வெளியிட்டது. அதில் தவமணிராசன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

“கரூர் பொதுக் கூட்டத்தில் கொடி எப்படி இருந்தால் நலம் என தான் கருதியாகக் கருப்பு சிவப்பு நிறங்களைப் பொருத்தமெனக் கூறி, (அய்யா அவர்கள்) மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி தெரிவித்தார்கள். மறு நாள் காலைப் பத்திரிகைகளில் அச் செய்தியைப் படித்தவுடன் நண்பர் ஈரோடு திரு. சண்முக வேலாயுதம் கையில் கருப்புக்கொடி “மாதிரி பிளாக்” செய்து கொண்டு வந்து என்னிடம் காட்டி அய்யாவுக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். உடனே, “குடிஅரசு” அச்சகத்தில் ஒரு சிறிய அட்டையில் அச்சிடச்

(3 ஆம் பக்கம்)

# வரலாற்றால் வெறுக்கப்படுவர்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தேன். உடனிருந்த கவிஞர் கருணானந்தம் அவர்கள் உத்தரவு பெற்று, கவிஞர் அவர்களையே கலைஞரை அழைக்கும்படி நான் கூறியிருந்ததால் எங்களுடன் கலைஞர் குடி அரசில் **குடி இருந்தார்**. அச்சிட்டு வந்த கொடியில் நடுவில் வட்டம் சிவப்புக் கலர் இல்லாது இருந்தது. கலைஞர் தயங்காமல் தன் விரலில் குண்டூசியால் ஒரு சொட்டு ரத்தம் எடுத்து அவ்வட்டத்தில் பொட்டிட்டார். அந்த அட்டையை அன்றே அய்யா அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அய்யா அவர்கள் அடுத்து ஈரோடு வந்தபோது அக்கொடிக்கு ஒப்புதல் தந்து **திரு. சண்முக வேலாயுதம் அவர்களைப் பாராட்டினார்கள்"**

- என்று தெளிவுபடுத்தினார். கொடியை உருவாக்கியது சண்முகவேலாயுதம் தான் என்பதை கலைஞர் சாட்சிக்கு அழைத்த தவமணிராசன் அவர்களே வெளிப்படுத்திவிட்டாரே" என்று எழுதியது 'விடுதலை' பெரியார் மலர். தொடர்ந்து 'விடுதலை' மலர் இவ்வாறு கேட்டது:

"குண்டூசியால் குத்தி தன் விரலிலிருந்து ரத்தத்தை நடுவில் கலைஞர் வைத்திருந்தாலும், அது அந்த வாலிப வயதின் துடிப்பு என்று பாராட்டலாமே தவிர, அவர் அவ்வாறு செய்யாவிட்டால் சிவப்பு என்கிற நிறமே கழகக் கொடிக்குக் கிடைக்காமல் போயிருக்கும் என்றோ, அதன் காரணமாக திராவிடர் கழகக் கொடியே உருவாகியிருக்காது என்றோ கூற முடியுமா? அப்படியே இரவில் அவர் வைத்த அந்த சிவப்பு நிறம் காலை வரை அப்படியே சிவப்பாகவா இருந் திருக்கும்? பகுத்தறிவைக் கொண்டு சிந்திக்க வேண் டாமா?

கொடிக்கான கரு கொடுத்தவர் தந்தை பெரியார்; உரு கொடுத்தவர் தோழர் சண்முக வேலாயுதம். கருவும் உருவும் கொடுத்தவர்கள்தான் மூல கர்த்தாக்களாக இருக்க முடியுமே தவிர அதற்கு வர்ணம் தீட்டியவர்கள் எல்லாம் உரிமை கொண்டாட முடியாது. வீட்டைக் கட்டி குடி போகும்போது ரிப்பன் எடுத்துக் கொடுத்தவர்கள் எல்லாம் வீட்டைக் கட்டிய மேஷனாக முடியாது. ஆனால், சோமனூர் உரையில் கருணாநிதி அவர்கள் என்ன சொல்லுகிறார்?

"நானும் கருணானந்த மும், தவமணிராசனும், சண்முக வேலாயுதம் என்ற நண்பரும், ஆர்.டி. முத்து என்பவரும் இவர்களெல்லாம் கலந்து ஆலோசித்தோம். ஏன் தமிழகத் திலே இருக்கின்ற இழிவைக் காட்டுகின்ற வகையிலே கருப்பு வண்ணமும் அதை நீக்குகிற வகையிலே புரட்சிகரமாக சிவப்பு வண்ணமும் பொதிந்த ஒரு கொடி அமைந்தால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர்களும் அப்படி இருக்கலாம்" என்று சொன்னார் களாம்.

கதை எப்படி போகிறது? இவர் சொன்னாராம். மற்றவர்கள் ஆமாம் சாமி போட்டார்களாம். இதன் மூலம் அவர் என்ன சொல்ல வருகிறார்? கொடிக்குக் கரு, கருத்து, வடிவம் முதன்முதலாக கொடுத்ததெல்லாமே தான்தான் என்றல்லவா சாதிக்கப் பார்க்கிறார்.

சாட்சிக்கழைத்த தவமணிராசனும் கூறுகிறார். அதற்கு முன்பாகவே தவிட்டுப் பாளையத்தில் கொடியை ஏற்றி வைத்த (3.2.1946) தோழர் கரூர் என். ரத்னமும் தந்தை பெரியார் அவர்களின் முன்னிலையிலேயே தெளிவுபடுத்திவிட்டார். தோழர் பி. சண்முக வேலாயுதம் அவர்களால்தான் திராவிடர் கழகக் கொடி சித்திரிக்கப்பட்டது என்று, 'குடிஅரசி'லும் பதிவாகியுள்ளது.

இந்த இடத்தில் இன்னொரு ஆதாரம் அந்த ஆதாரம் கூட கலைஞர் கொடுத்ததுதான். அதுவும் அவர் எழுதிய தன் வரலாற்று நூலான "நெஞ்சுக்கு நீதி" தான்.

'குடி அரசு' அலுவலகத்தில் அவர் பணியாற்றியது குறித்து 18 ஆவது பகுதியில் (பக்கம் 89 முதல் 93 வரை) "குளிப்பது குற்றமா?" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அந்தக் கால கட்டத்தில்தான் கழகக் கொடியைத் தாம் உருவாக்கியதாகக் கூறும் கலைஞர் அவ்வளவு பெரிய சாதனையை ஏன் "நெஞ்சுக்கு நீதியில்" எழுதவில்லை?

துரும்பைத் தூணாக்கிக் காட்டி அதற்குத் தங்கப் பூணும் போட்டுக் காட்டுவதில் வல்லவரான கலைஞர், கொடியை உருவாக்கியது உண்மையாக இருக்கும் பட்சத்தில் விட்டு வைத்திருப்பாரா? கலைஞரைப் பற்றி அறிந்தவர்கள் இந்த இடத்தை ஆழமாகவே எண்ணுவார்கள் என்பதில் அய்யமில்லை.

ஏன் அப்பொழுது அவர் எழுதவில்லை? அது உண்மையில்லை. அதனால் எழுதவில்லை. இப்பொழுது ஏன் எழுதுகிறார்? இது பிற்காலத்தில் அவரால் தீட்டப்பட்ட புதிய தல புராணம். அதனால் எழுதுகிறார் பேசி வருகிறார்.

- என்று எழுதியது விடுதலை பெரியார் 125வது பிறந்த நாள் மலர். (இக்கட்டுரையை எழுதியவர், அப்போது அக்கழகத்தின் உதவிப் பொதுச் செயலாளராக இருந்த கவிஞர் கலி.பூங்குன்றன்)

- இப்படி வாதங்களை மறுத்து வினாக்களை அடுக்கி, வரலாற்றுப் புரட்டு என்று எழுதிய அதே திராவிடர் கழகம் - "அதிகாரபூர்வ பெரியார் வரலாறு" என்று அறிவித்துக் கொள்ளும் வரலாற்றில் தாங்கள் எழுதிய மறுப்புகளையே புறந்தள்ளிவிட்டு - பொய்மைக்கு உயிரூட்டத் துடிப்பது வரலாற்று நியாயமா? வரலாற்று துரோகமா என்று கேட்கிறோம்! குழப்பங்களையும், புரட்டுகளையும் தெளிவுபடுத்தும் கடமையைச் செய்ய வேண்டியது தானே 'அதிகாரபூர்வ வரலாறு' எழுதுவோரின் கடமை. அதைச் செய்யாமல், ஏற்கனவே பக்கம் பக்கமாக மறுத்தவைகளை, ஓரம் கட்டிவிட்டு, 'ஆட்சி அதிகாரம் அரவணைக்கிறது' என்ற சுகத்தில் மயங்கி வரலாற்றுத் துரோகம் இழைக்கலாமா? இரண்டு முறை ஆட்சி அமைக்கும் பொறுப்பு தன்னைத் தேடி வந்தபோதும், பதவி பக்கம் தலை வைத்துப் படுக்க மாட்டேன் என்று உதறித் தள்ளியவர் பெரியார். அந்தத் தலைவரின் 'வரலாறு' - 'அதிகாரச் சுவைக்காக' திரிக்கப்படலாமா?

தமிழக அரசு அப்போது தயாரித்த 'பெரியார்' எனும் குறும்படத்திலும், திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரப் பாடல் ஒலி நாடாவிலும் - திராவிடர் கழகக் கொடியை உருவாக்கியது கலைஞர் தான் என்றே பிரச்சாரம் செய்யப்பட்டது. 'இது அரசு செலவில் அதிகாரத்தைப் பயன்படுத்திய குற்றம்' என்று அப்போது விடுதலை மலர் எழுதியது. அதே குற்றத்தை கழகத் தலைவர் என்ற முறையில் தனது அதிகாரத்தைப் பயன்டுத்தி, வீரமணி இப்போது செய்கிறார் என்று தானே கூற வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, கொடிக்கான வரலாற்றை எழுதும்போது கொடி பற்றிய பெரியாரின் கருத்தைப் பதிவு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமல்லவா? "உலகத் தலைவர் பெரியார்" நூலில் (பக்.199) "கறுப்புத் துணியின் மத்தியில் வட்டமாக சிவப்புத் துணி தைத்தக் கொடியை இனி திராவிடர் கழகக் கொடியாகக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பெரியார் 109 ஆவது (1987) பிறந்த நாள் 'விடுதலை' மலரில் திருவத்திபுரத்தில் 9.12.1945 அன்று ஆற்றிய உரை வெளியிடப்பட்டுள்ளது. அதில்,

"கொடி விஞ்ஞான அறிவோடு, நம் லட்சியத்தைக் கிளப்பும், உணர்ச்சியூட்டும் முறையிலும் இருக்க வேண்டும்" என்ற அளவோடு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்த முழு உரை கொடி பற்றிய பெரியாரின் பார்வையை விளக்குவதால் மிகவும் முக்கியத்துவமானது. ஏனோ, அவை இந்த வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. பெரியார் தொடர்ந்து பேசுகிறார்:

"அப்படி இன்று ஒரு கட்சிக் கொடியும் இல்லை என்று கூறி கம்யூனிஸ்டு கொடி, ராட்டினக் காலத்தை நினைவூட்டும்படி, மின்சாரக் கருவி எந்திரக் காலத்தில் பழைமையான அரிவாளும், சுத்தியலும் கொண்டிருப்பதையும், தமிழ்க்கொடி - தின்னப்பட வேண்டிய மீனையும், கொல்லப்பட வேண்டிய புலியையும், கண்காட்சிக்கு அனுப்பப்பட வேண்டிய வில்லையும் கொண்டிருப்பது பீரங்கி, வெடிகுண்டு, துப்பாக்கி, அணுகுண்டு காலத்தில் பொருத்த மில்லாமல் இருப்பதைப் போலின்றி, 'கொடி நம் குறைகளை விளக்கும் தன்மையில், நமக்கு அறிவும், ஆத்திரமும், மானமும், கட்டுப்பாடும் ஏற்படும் தன்மையில் இருக்க வேண்டும்' என்று கூறுகிறார். மேலும் காங்கிரஸ் கொடி நான்கு வர்ணத்தை நினைவூட்டுவதுபோல் மூன்று வர்ணத்தில் (நிறத்தில்) காந்தி ஆக்கியிருப்பதாகக் கூறி, 'இதை ஒழித்து நாசப்படுத்தி, நாம் ஒரு வருணமாக்கி, அதைத் துக்க வருணமாக்க (நிறம்) வேண்டும். வெறும் கருப்பு தான் அது' என்று கொடியில் கருப்பு நிறம் இருக்க வேண்டியதை முன்மொழிகிறார். மேலும், அப்போது பயன்படுத்தப்பட்டு வந்த நீதிக்கட்சியின் தராசுக் கொடியும், 'அர்த்தமில்லாததும், காலத்திற் கேற்றபடியும் இல்லாதிருக்கிறது. தராசுக்கு விளக்கம் கூறுகிறவர்கள் இது நீதியை விளக்கும் சின்னம் என்று கூறுகிறார்கள். அது எப்படிப் பொருந்தும்? இன்றைய நிலையில் ஏதாவது ஒரு வகுப்புக்கு (பார்ப்பனர்களுக்கு) அநீதி விளைந்து தானே ஆகும். அதிகமாய் இருப்பவனிடமிருந்து பிடுங்கியாக வேண்டும். பாடுபடாதவனுக்கு சமபங்கு கொடுக்க முடியாது. தேவையும் இருக்காது. ஆதலால் சமத்துவமாய்க் கொடுப்பதைவிட, தேவை-தகுதி பார்த்து அளிக்க வேண்டும்' என்று பெரியார் கூறுகிறார். தனித்துவமாய் சமத்துவத்துக்கு நல் விளக்கம் கொடுத்து, புதிய கொடி காலத்துக்கு தக்கவாறும், உணர்ச்சி ஏற்படுத்துமாறும் இருக்க வேண்டும் என்று விளக்கமாக திசை வழி காட்டி பெரியார் பேசியிருப்பதை வரலாற்று நூல் குறிப்பிடவில்லை.

'விடுதலை' பெரியார் பிறந்த நாள் மலர் கலைஞர் கருணாநிதிக்கான மறுப்புக் கட்டுரையை இவ்வாறு முடித்திருந்தது.

"வரலாற்றைத் திரிக்கலாம் என்று நினைப்பவர்கள் வரலாற்றால் வெறுக்கப்படுவார்கள். தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இந்த நிலையை அடைந்திருக்க வேண்டாம் என்பதே நமது கருத்து".

நாமும் அதையே திராவிடர் கழகத் தலைவருக்கு கூறி, முடிக்கிறோம்.

"வரலாற்றைத் திரிக்கலாம் என்று நினைப்பவர்கள் வரலாற்றால் வெறுக்கப்படுவார்கள். தி.க. தலைவர் கி. வீரமணி இந்த நிலையை அடைந்திருக்க வேண்டாம் என்பதே நம் கருத்து."

❑

## '1947 ஆகஸ்டு 15' பற்றி மவுனம்

'1940-1949' வரலாற்றுக் காலகட்டத்தில் திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்தது - ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகும். 'உலகத் தலைவர் பெரியார்' வரலாறு - தி.மு.க. பிரிந்து சென்றதன் வரலாற்றுப் பின்னணிகளை விளக்காமல் மவுனமே சாதிக்கிறது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதி 'சுதந்திர நாள்' என்று அறிவிக்கப்பட்டதை பெரியார் ஏற்கவில்லை. அது சுதந்திர நாள் அல்ல. துக்க நாள் என்றார் பெரியார். அண்ணா இதில் மாறுபட்ட நிலையை எடுத்தார்.

"இரண்டு பேர் நம்மீது சவாரி செய்தனர். ஒருவன் ஒழிந்ததில் பாதிச் சுமை குறைந்தது அல்லவா ? அதனால் ஆகஸ்டு 15 மகிழ்ச்சிக்குரிய நாள் !" - என்று எழுதினார் அண்ணா. டாக்டர் வீரமணி எழுதிய வரலாற்று நூல் - இதில் திட்டமிட்டு மவுனம் சாதிக்கிறது. அண்ணாவின் மாறுபாட்டைப் பதிவு செய்யவே இல்லை.

பெரியார் - மணியம்மை திருமணத்தால்தான் தி.மு.க பிரிந்தது என்றும் - அதுவும், தவறான புரிதலே என்றும் - 1967 இல் ஆட்சிக்கு வந்த பிறகு, அண்ணாவே, அதைப் புரிந்து கொண்டு, அன்னை மணியம்மையார்தான், பெரியாரைக் காப்பாற்றினார் என்று தன்னிடம் (கி.வீரமணி) கூறிவிட்டார் என்றும், இடையில் எத்தனையோ 'மேடு பள்ளங்கள்' வந்த போதிலும், இன்று வரை தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக ஒரு நாணயத்தின இருபக்கங்களாகச் செயல்பட்டு வருகின்றன என்றும் கூறி - 'சுபமங்களத்தோடு' வரலாற்றை முடித்துவிட்டார், டாக்டர் வீரமணி.

'1947, ஆகஸ்டு 15' இல் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தான் இரண்டு அமைப்புகளுக்குமிடையே உள்ள கொள்கை - அணுகுமுறைக்குள்ள அடிப்படையான வேறுபாடுகள்.

தி.மு.கவுக்கு ஆதரவாக பெரியார் வரலாற்றை எழுதிய கவிஞர் கருணானந்தம் அவர்கள்கூட, தனது பெரியார் வரலாற்று நூலில் ஆகஸ்டு 15 பிரச்னையைப் பற்றி எழுதும்போது, "வெளியில் தெரியுமளவுக்குக் கழகம் இரு முகாமாகித் தாக்கிக் கொண்டது. ஏற்கனவே எல்லாரும் எப்போதும் கருப்புச் சட்டை அணிய வேண்டும்; வெள்ளைச் சட்டை அணியும் குள்ள நரிகள் எனக்கு வேண்டாம் என்ற பெரியார் சொன்னதில், அண்ணாவும் வேறு சிலரும் மனத்தாங்கலில் இருந்தனர். ஆகஸ்டு 15 - புதிய விரிசலை உண்டாக்கியது" - என்று எழுதியுள்ளார். ஆனால், 'அதிகாரபூர்வ வரலாற்றில்' இது இடம்பெற வேண்டாமா ?

'உலகத் தலைவர் பெரியார் வரலாற்றை'ப் புரட்டிப் பார்க்கும் இளைஞர்களுக்கு கடந்த வரலாற்றுப் பதிவுகள் இப்படி 'அரைகுறையாக' இருட்டடிப்பாக இருப்பதை தவறாகப் புரிந்து கொள்ள மாட்டார்களா ?

# அர்ச்சகருக்கு பயிற்சித் தந்தவரை தாக்கிய பார்ப்பனர்

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் பார்ப்பன குருக்கள் தூண்டுதலின் பேரில் வேத பாட ஆசிரியரைத் தாக்கிய கும்பலை போலீசார் கைது செய்தனர்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழக அரசின் திட்டத்தின்படி தமிழகத்தில் 6 கோவில்களில் பயிற்சிப் பள்ளி துவக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் சைவ சமய அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி கடந்த மே 11 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு வேத பாட ஆசிரியர் இல்லாததால் கோவில் பார்ப்பன குருக்கள் யாராவது பாடம் எடுக்குமாறு அறநிலையத்துறை கேட்டுக் கொண்டது. பிற சாதியினருக்கு வேத பாடம் சொல்லிக் கொடுப்பதா என்ற குறுகிய நோக்கத் துடன் யாரும் பாடம் கற்பிக்க முன் வரவில்லை.

இந்தச் சூழலில்தான் ராசிபுரத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் (80) வேத பாட ஆசிரியப் பணிக்கு வந்தார். அனைத்து சாதி மாணவர்களுக்கும் வேத பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். இது அங்குள்ள பார்ப்பன குருக்களுக்கு ஆத்திரமூட்டியது. இந்தப் பின்னணியில் கடந்த மாதம் 14 ஆம் தேதி ஆசிரியர் ராமகிருஷ்ணன் அடையாளம் தெரியாத குண்டர்களால் கொலைவெறித் தாக்குதலுக்குள்ளானார். தாக்குதலில் நிலை குலைந்து போன 80 வயது ராமகிருஷ்ணனுக்கு இனியும் இங்கு தங்கி பாடம் சொல்லிக் கொடுத்தால் கொலை செய்துவிடுவோம் என்றும் மிரட்டல் விடுத்தது அந்த கும்பல். இதில் பலத்த காயமும், மன உளைச்சலுக்கும் ஆளான ஆசிரியர் ராமகிருஷ்ணன் வேலையை உதறிவிட்டு வீடு திரும்பினார்.

அப்பட்டமான இந்த அத்துமீறலை ஜனநாயக அமைப்புகள் அத்தனையும் கண்டித்தன. ஆசிரியரைத் தாக்கிய கும்பலை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கிய போலீசார் திருவண்ணாமலையைச் சேர்ந்த மூன்று பேரைப் பிடித்தனர். காந்தி (30), கம்பிராஜா (26), விஜி (எ) பாஸ்கர் ஆகியோரிடம் நடத்திய விசாரணையில் இவர்களை ஏவி விட்ட நபர் யார் என்ற விவரம் போலீசுக்கு கிடைத்தது.

அண்ணாமலையார் கோவில் அர்ச்சகரான பார்ப்பனர் பி.டி. ரமேஷ் தான் இத்தனை பிரச்சனைக்கும் மூளையாக செயல்பட்டிருப்பது தெரிய வந்தது. 3 பேரும் அளித்த வாக்குமூலத்தில் போலீசார் இதனை உறுதி செய்து கொண்டனர். தாக்குதல் நடத்தியபோது ரமேசும் உடன் இருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். தற்போது பார்ப்பன அர்ச்சகர் ரமேசை கைது செய்யும் நடவடிக்கையில் போலீஸ் இறங்கியுள்ளது.

# மூடநம்பிக்கை ஒழிப்புக் கழகப் பிரச்சாரக் கூட்டங்கள்

சேலம் அம்மாப்பேட்டையில் 1.6.07 வெள்ளிமாலை 6 மணிக்கு மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியுடன் தமிழர் உரிமை முழக்கப் பொதுக் கூட்டம் தொடங்கியது. தொடர்ந்து காவை. இளவரசனின் 'மந்திரமல்ல! தந்திரமே! நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இரவு 7.30 மணிக்கு ல.பா. செந்தில் குமார் தலைமையில் அ.கரிகாலன் (தமிழக இளைஞர் இயக்கம்), மு. தங்கவேல் (குடியுரிமை பாதுகாப்பு நடுவர்), மு. கோபால் (குடியுரிமை பாதுகாப்பு நடுவர்) ஆகியோர் முன்னிலை ஏற்க வழக்குரைஞர் பெ. தமயந்தி (குடி யுரிமை பாதுகாப்பு நடுவம்) சிறப்புரையாற்றினார். அடுத்து பேராசிரியர் து. ருக்மணி, பெரியாரியல், பெண்ணு ரிமை மற்றும் தமிழர் உரிமைகள் பற்றி விரிவாகவும், நகைச்சுவையோடும் விளக்கினார். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றி நிறைவு செய்தார். இரா. கிரிகோபி நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. குடியுரிமை பாதுகாப்பு நடுவத்தை சார்ந்த மு. தங்கவேல் அவரது வீட்டில் அனைத்து தோழர்களுக்கும் உணவு வழங்கினார்.

7.6.2007 அன்று மாலை சூலூரில் அண்ணா சீரணி கலையரங்கில் கழகப் பொதுக் கூட்டம் சமர்ப்பா குழுவினர் இசையோடு தொடங்கியது. கழகப் பெயர்ப் பலகையை மாவட்டக் கழகத் தலைவர் சு. துரைசாமி திறக்க, கழகக் கொடியை ஆட்சிக்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி ஏற்றினார். கூட்டத் துக்கு ஆ. இரா. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறை ஏகிய கோபி இளங்கோ, முருகானந்தம், குமரகுருபரன், அர்ச்சுனன் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. திருப்பூர் தமிழ்ச்செல்வி, கழகப் பொறுப்பாளர்கள் சு. துரைசாமி, வெ. ஆறுச்சாமி, இராம. இளங்கோவன், அங்க குமார், பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். க.இ. இளவரசன் நன்றி கூறினார். சூலூரில் நடந்த முதல் கழகப் பொதுக் கூட்டம் இது. தோழர்கள் வீ. குமார், ஆறுமுகம், பல்லடம் விசயன், ஈரோடு பெரியார் செகன், திருப்பூர் கோபிநாத், அர்ச் சுனன், இராவணன், கிருட்டிண மூர்த்தி, வடிவேலு, சோம சுந்தரம், சூலூர் வீரமணி ஆகியோர் கூட்டத் துக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## கழகக் குடும்ப விழாவாக நடந்த 'உ.பா. தோழி' பிறந்த நாள்

சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகச் செயலாளரும், செயல் வீரருமான இரா. உமாபாரதி, பா. பாரதி இணையரின் அன்பு மகளான உ.பா. தோழி முதலாவது பிறந்தநாள் விழா 19.7.2007 மாலை 7 மணியளவில் சென்னை மீர்சாகிப் பேட்டை மாநகராட்சி சமுதாயக் கூடத்தில் சிறப்புடன் நடைபெற்றது. கழகப் பொறுப்பாளர்கள் ஆனூர் செகதீசன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் துரைசாமி, நாகை மாவட்ட கழகத் தலைவர் பரசுராமன், சீர்காழி பெரியார் செல்வன், மற்றும் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள், நண்பர்கள் திரளாக வந்திருந்தனர். அனைவரையும் பாரதி அன்புடன் வரவேற்றார். கழகக் குடும்ப விழாவாக நடந்த இந்நிகழ்வில் இரவு பிரியாணி விருந்து அளிக்கப்பட்டது.

## முன்பதிவுத் திட்டத்தின் கீழ் தமிழ்க் 'குடிஅரசு' பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

ரூ.350 விலையுள்ள 8 நூல்களை முன்பதிவுத் திட்டத்தின் கீழ் ரூ.250க்கு தோழர் வாலாஜா வல்லவன் வெளியிடுகிறார். செப்டம்பர் 5 ஆம் தேதிக்குள் ரூ.250 முன் பணம் செலுத்துவோருக்கு நூல்கள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

• கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு (250 பக்கம் - விலை ரூ.120) • ஆரிய ஆட்சி (1937-39-ல் நடந்த ஆச்சாரியார் ஆட்சியின் அவலங்கள்) (128 பக்கம் - ரூ.60) • ஆதி திராவிடர்களின் பூர்வீகச் சரித்திரம் (ஆசிரியர் - கோபால் செட்டியார்) (32 பக்கம் - ரூ.20) - • அகத்தியர் ஆராய்ச்சி (ஆசிரியர் கா. நமச்சிவாய முதலியார்) • கட்டாய இந்தி தேவையா ? (நாவலர் சோமசுந்தர பாரதியார் 1937-ல் ஆச்சாரியாருக்கு எழுதிய திறந்த மடல்) • குஞ்சிதம் குருசாமியின் சொற்பொழிவுகள் • பன்னீர்செல்வம் (அல்லது) லட்சியவாதி (நாடகம் - குத்தூசி குருசாமி எழுதியது) • மத ஆராய்ச்சிக் குறிப்புகள் (ஆசிரியர் - சுவாமி சிவானந்த சரசுவதி) (மேற்குறிப்பிட்ட நூல்கள் ஒவ்வொன்றும் 64 பக்கங்கள் - விலை ரூ.30)

பணம்/காசோலை அனுப்ப வேண்டிய முகவரி: தமிழ்க் 'குடி அரசுப்' பதிப்பகம், 14/12 மியான் முதல் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005 அலைபேசி : 9444321902

## கவிதை - கட்டுரைப் போட்டி

தலைப்பு : கடவுளுக்குப் பெண் தீட்டா ?

வந்து சேர கடைசி நாள் : 30.9.2007

கவிதை; எந்தப் பா இனத்திலும் (புதுப்பா, மரபுப்பா) இருக்கலாம். 24 வரிகளுக்கு மிகாமல் கட்டுரை. தட்டச்சிலோ, கணினி அச்சிலோ ஏ4 அளவில் 4 பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

முதல் பரிசு : உருவா 250/-க்கான நூல்கள்

இரண்டாம் பரிசு : உருவா 150/-க்கான நூல்கள்

மூன்றாம் பரிசு : உருவா 100/-க்கான நூல்கள்

(இரு போட்டிகளுக்கும் தனித்தனியே மூன்று பரிசுகள்)

தொடர்புக்கு :
'நாளை விடியும்' தமிழ்ச்சுடர் இல்லம்,
7 ஆ, எறும்பீசுவரர் நகர்,
(காவேரி சிற்றங்காடி எதிரில்),
மலைக்கோயில் தெற்கு,
திருவெறும்பூர்,
திருச்சிராப்பள்ளி - 620 013.

## பார்ப்பனரும் பார்ப்பனியமும்

**கேள்வி :** தந்தை பெரியார் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சாதியை (பார்ப்பனர்கள்) பழித்து பேசுபவர் என்றும், அச்சாதி மக்களை அறவே இம் மண்ணிலிருந்தும் அழிக்க வேண்டும் என்ற கருத்தில் முனைப்பாக இருந்தவர் என்றும் என் நண்பர் ஒருவர் கூறினார். நான் அவ்வாறில்லை என்றும், அய்யா அவர்கள் பார்ப்பனீயத்தை மட்டும்தான் எதிர்த்தார்; பார்ப்பனர்களை அல்ல என்று கூறியும் நண்பர் அதை ஏற்க மறுக்கிறார்.

**பதில்:** 'பெரியார்' திரைப்படத்திற்கு உங்கள் நண்பரை அழைத்துச் சென்று காட்டுங்கள் - புரிந்து கொள்வார் !

**– உண்மை கேள்வி-பதிலில் கி. வீரமணி**

பெரியார் 'பார்ப்பனீயத்தை'த் தான் எதிர்த்தார், பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை என்று, கி.வீரமணி கூறுகிறாரா? பார்ப்பனர் எதிர்ப்பு இல்லாமல் பார்ப்பனீயத்தை ஒழித்து விட முடியுமா, இது தான் பெரியார் கருத்தா?

## வந்த கடிதம்

14 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் பட்டா மோசடிக்கு எதிராக ஐந்து மருகால் பகுதி மக்களின் போராட்டத்தில் 'பெரியார் திராவிடர் கழகம்' கலந்து கொண்டு, ஒரு மாதத்தில் வெற்றி கண்டதை பாராட்டுகிறேன்.

பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி அவர்களோ வீட்டு பட்டா மோசடி பிரச்சினையில் நேரடியாக தலையிட்டு அமைப்புகள் வெவ்வேறாக இருந்தாலும் கருஞ்சட்டை தோழனுக்கு எந்தப் பிரச்சினை என்றாலும் பெரியார் திராவிடர் கழகம் களமிறங்கும் என்ற உறுதியை நடைமுறையில் காட்டியதற்கு என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்து முன்னணி ராமகோபாலன் தூண்டுதலால் திருவரங்கத்தில் பெரியார் சிலை தகர்க்கப்பட்ட போது, பெரியார் தி.க. தோழர்கள் பொங்கி எழுந்து செயல்பட்டனர். தி.க. வீரமணி கண்டன அறிக்கை விட்டதோடு சரி. ஒரு சில நிகழ்வுகளின்போது அதற்கு உடனடியாக தக்க பதிலடி கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் பார்ப்பனர்களுக்கு பயம் இருக்கும். பெரியார் ஒரு முறை சொன்னார், பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராக வைத்து கொள்ளுங்கள். நான் சொல்லுவேன் - சொல்லும்போது அக்ரகாரம் தீப்பற்றி எரிய வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது பார்ப்பனர்கள் பயந்து கொண்டு இருந்தார்கள். அதே நிலை திரும்ப வரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**க.சொ. சிவசுப்பிரமணியம், வடசேரி.**

பழனியில் கழகப் போராட்டம் வெற்றி பெற்ற செய்தி படித்து மகிழ்கிறேன்; பாராட்டுக்கள். "ரகசியம்... முக்கிய காரணம் இருக்கிறது" என்ற பெட்டிச் செய்தி ('உண்மை' கேள்வி - பதில்) படித்து மகிழ்ந்தேன்.

**ரெ. மருதுசாமி, மயிலாடுதுறை.**

## மீண்டும் சுதந்திரப் போர்

தமிழ் வாசகர்களுக்கு தனது உயிர்த் துடிப்பு மிக்க எழுத்துக்களால் மிகவும் நெருக்கமாகியிருக்கும், முதுபெரும் பத்திரிகையாளர் சோலை - புதிய பொருளாதாரக் கொள்கைகளால் அன்னிய நிறுவனங்கள், நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடி வருவதை விளக்கி 'குமுதம்' ரிப்போர்ட்டர் இதழில் எழுதிய 34 கட்டுரைகளின் தொகுப்பு 'மீண்டும் சுதந்திரப் போர்' என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது. சிக்கலான, நுணுக்கமான செய்திகளை, பாமரர்களும் புரிந்துகொள்ளச் செய்யும் மொழி நடையாக மாற்றுவது, தோழர் சோலையின் தனிச் சிறப்பான எழுத்தாற்றல் மக்களை பாதிக்கும் மிக முக்கியப் பிரச்சினைகளை பொருளாதார நிபுணர்களின் விவாதத்துக்குள் முடங்கி விடாமல், பாமரர்களின் விவாதங்களுக்கு உட்படுத்தும் சீரிய சமூகப் பங்களிப்பை, சோலை வழங்கியிருக்கிறார்.

வெளியீடு :
**தணல் பதிப்பகம்**, 39/13 ஷேக் தாவூது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.
பேசி : 65484699. பக்கம். 160 விலை.ரூ.50.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP     Posted on : 26th July 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.